
கவலை தருகின்றது
பக்.6


யால் ஆயிரத்து 100 அகதிகள் மீட்பு
பக். 7


டில் அசத்திய மனோகரா
பக். 22


அணிக்கு வெற்றி இலக்கு 467
பக். 23




கூடிய வெப்பநிலை 28 °c
குறைந்த வெப்பநிலை 24 °c
மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.


# உதயன்

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 074 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 26, சனி 08.02.2014




08 FEB 2014


## சர்வாதிகாரிகளான முபாரக், சதாம், முஷாரப் ஆகியோருக்கு நடந்ததை உணர்ந்துகொள்க

### *கர்மவினை எவரையும் விட்டு வைக்காது என எச்சரிக்கிறார் முதலமைச்சர்*

யாழ்ப்பாணம், பெப்.08
கர்ம வினை எவரையும் விட்டு வைக்காது. நாம் முன்னர் செய்த கருமங்களுக்கே இப்பொழுது பலனை அனுபவிக்கின்றோம் என்று தெரிவித்த முதலமைச்சர், சர்வாதிகாரிகளாக இருந்த எகிப்தின் முபாரக், ஈராக்கின் சதாம் ஹுசைன், பாகிஸ்தானின் முஷாரப் ஆகியோர் இருந்த நிலை என்ன என்பதையும் இறுதியில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். இவை அனைத்தும் எம் கண்முன்னாலேயே நடந்தேறியுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.


*முதலமைச்சர் விக்னேஸ்வரன்*

வரணி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் 60 ஆவது ஆண்டுப்பூர்த்தி விழாவும் பாடசாலை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தனது உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
அண்மைக்கால அரசியல் பிரச்சினைகள் எமது மக்களிடையே ஒரு புதிய கலாசாரத்

21 ஆம் பக்கம் பார்க்க

## கடந்த வாரம் 66 பேர் கைது

யாழ்ப்பாணம், பெப். 8
பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் கடந்த வாரம் 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 10 பேரும், சந்தேகத்தின் பேரில் 37 பேரும், சூழல் மாசடையும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டில் 2 பேரும், திருட்டுக் குற்றச்சாட்டில் 5 பேரும், அத்துமீறி வீடு புகுந்த குற்றச்சாட்டில் ஒருவரும், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 2 பேரும், சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் 2 பேரும், சிறு குற்றம் புரிந்த 7 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவரவர் குற்றச் சாட்டுகளுக்கு ஏற்ப அபராதம் விதிக்கப்பட்டதுடன் சிலர் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர். (த-4)

# ஜெனிவா பிரேரணை தீவிர ஆய்வில் டில்லி

### *அமைச்சரவையில் கருத்துக் கேட்கிறது காங்கிரஸ்*

கொழும்பு, பெப்ரவரி 8
ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள கடுமையான பிரேரணை விவகாரத்தில் எத்தகைய நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது தொடர்பில் இந்தியா தற்போது தீவிரமாக ஆலோசித்து வருகின்றது என்று டில்லி இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

> “ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வரும் தமிழகத்தின் செயற்பாடுகள், அண்மையில் இடம் பெற்ற மாநிலத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்வி மற்றும் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய விடயங்கள் ஜெனிவாப் பிரேரணையை டில்லி அரசு ஆதரிக்க வேண்டும் என்றதொரு நிலையை ஏற்படுத்தியுள்ளன.

அதேவேளை, காங்கிரஸ் அரசு, இந்த விடயம் சம்பந்தமாக அமைச்சரவை மட்டத்திலும் கருத்துகளைக் கேட்டறிந்து வருகின்றது. இந்திய அரசியல் பிரமுகர் ஒருவர் நேற்று மாலை இந்தத் தகவலை 'உதயனி'டம் உறுதிப்படுத்தினார்.
இதற்கு முன்னர் இலங்கை அரசுக்கு எதிராக ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வந்த இரண்டு தீர்மானங்களையும் இந்தியா ஆதரித்திருந்தது. எனினும், 'மதில் மேல் பூனை' என்ற நிலைப்பாட்டில் இருந்துவிட்டு இறுதி நேரத்தில் இந்தப் பிரேரணைகளை நீர்த்துப் போகச் செய்துவிட்டு அவற்றுக்கு ஆதரவாக டில்லி வாக்களித்திருந்தது என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

21 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை படைகளுக்கு அமெ. பயிற்சி

கொழும்பு, பெப்.08
இலங்கை இராணுவத்தினருக்கு வவுனியாவில் வைத்துக் கடந்த ஒரு வார காலமாக அமெரிக்க இராணுவத்தினர் வழங்கி வந்த பயிற்சிகள் நேற்றுடன் நிறைவடைந்துள்ளன.
வடக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை இராணுவத்தின் பொறியியல் படைப் பிரிவின் மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கே அமெரிக்கப் படையினர் பயிற்சியளித்து வந்தனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

## பால்மாவின் விலை குறையாது

கொழும்பு, பெப். 8
அதிகரிக்கப்பட்டுள்ள பால்மாவின் விலையை அரசு ஒரு போதும் குறைக்காது எனத் தெரிவித்த கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பால்மா விலை தாழ்ந்த மட்டத்திலேயே வைத்திருக்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு ஒரு போதும் கூறவில்லை. அது எமது கொள்கையும் இல்லை என்றும் தெரிவித்தார்.
எதிர்க்கட்சி பிரதமகொறடா

21 ஆம் பக்கம் பார்க்க

## வன்னியில் பொதுமக்களை தாக்கவில்லையாம்

கொழும்பு,பெப் 8
இறுதிப் போரின்போது பொதுமக்கள் காயமடைந்தபோதும், அவர்களைத் திட்டமிட்டு இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தவில்லை என்று அரசு தெரிவித்துள்ளது.
ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் திஸார சமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.
இலங்கைப் பாதுகாப்பு தரப்பினர் மீது ஆஸ்திரேலியாவின் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று புதிய போர்க் குற்றச் சாட்டுகளை முன்வைத்துள்ளது.
இந்தப் போர் தொடர்பில் அவர்

21 ஆம் பக்கம் பார்க்க

## பூஸா ராணுவ முகாமினுள் திடீர் தேடுதல் நடத்திய ராப்


*அமெரிக்க போர்க் குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப்*

*கொழும்பு, பெப்.08*
*பூஸா தடுப்பு முகாமிலுள்ள இராணுவ முகாமுக்குள் புகுந்து, அமெரிக்காவின் போர்க் குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப் தேடுதல் நடத்தியுள்ளார் எனத் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளதாகக் கொழும்பில் இருந்து வெளியாகும் 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.*
*இரகசியத் தடுப்பு முகாமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவர் அந்த முகாமைச் சல்லடைபோட்டுத் தேடியதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*
*கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு வருகை தந்திருந்த, ஸ்ரீபன் ராப் தலைமையிலான அமெரிக்கக் குழுவினர்,*

21 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச் விசாரணையா? உள்ளகப் பொறிமுறையா?

### *உறுப்பு நாடுகளே தீர்மானிக்கும் என்கிறது ஐ.நா.*

கொழும்பு, பெப்.08
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு ஐ.நா. சபை போதுமான தகவல்களை வழங்கியுள்ளது. இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையா ? உள்ளக விசாரணையா ? நடத்தப்படவேண்டும் என்பதை அந்த உறுப்பு நாடுகள் தான் தீர்மானிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.



*பர்ஹான் ஹக்*

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றக் குற்றச்சாட்டுகள்

21 ஆம் பக்கம் பார்க்க

## சீனா பறக்கிறார் பீரிஸ்

கொழும்பு, பெப். 8
ஐ.நா. மனித உரிமைகள் சபை கூட்டத்தில் சீனாவின் உத்தியோகபூர்வ ஆதரவு இலங்கைக்குக் கிட்டும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் எதிர்பார்க்கின்றார்.
இந்த எதிர்பார்ப்போடு அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராக 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை உத்தியோகபூர்வ சீனப் பயணத்தை மேற்கொள்வார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா செல்லும் குழுவை ஜனாதிபதியே தீர்மானிப்பார்

கொழும்பு, பெப்.08
இலங்கை சார்பில் ஜெனிவா செல்லும் தூதுக் குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே தீர்மானிப்பார் என்று அவரது செயலாளர் லலித் வீரதுங்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.
நேற்றுக் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
கடந்த இரண்டு ஆண்டுகளைப் போன்று இந்த ஆண்டும் ஐ.நா மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்படும்

21 ஆம் பக்கம் பார்க்க

# மஹிந்த பதவி விலகும்வரை காத்திருக்கின்றது அமெரிக்கா

### அதன் பின்னரே வேலையை காண்பிக்கும் என்கிறார் விக்கிரமபாகு

கொழும்பு, பெப்.8
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகும் வரைக்குமே அமெரிக்கா பொறுமையாக இருக்கும் எனத் தெரிவித்த நவசம சமாஜக் கட்சி, ஜனாதிபதிப் பதவியை விட்டு வெளியே வந்தவுடன் அமெரிக்கா தனது வேலையைக் காட்ட ஆரம்பிக்கும் என்றும் எச்சரிக்கை விடுத்தது.

"தமிழர்களுக்கு நாட்டில் முழு உரிமை கிடைக்கும் வரையிலும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் அரசை அழுத்துவதை நிறுத்தப்போவதில்லை" என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியது.

ஐ.நா. மனித உரிமைக் கூட்டத் தொடரில் கடந்த ஆண்டு இலங்கைக்கு ஆதரவு வழங்கிய நாடுகளை இம் முறை தமது கூட்டணியின் கீழ் வளைத்துப் போட அமெரிக்காவும், பிரிட்டனும் இராஜதந்திர காய்நகர்த்தல்களை இரகசியமாக செய்து வருகிறது.

இந்நாடுகளின் செயற்பாடுகள் குறித்து வினவியபோதே அக்கட்சியின் பொதுச்செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு மேற்கண்டவாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரசை தற்போது அழுத்தும் அத்தனை நாடுகளும் அரசுக்கு அப்போது ஆதரவு வழங்கின. ஏன், இந்த அரசு ஆட்சி அமையக்கூட இந்த நாடுகள் பெரிய பங்களிப்புச் செய்தன. அப்படியெல்லாம் உதவிய இந்நாடுகள், இலங்கையில் மனித உரிமைகள் பேணப்பட வேண்டும், தமிழர்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடனேயே அரசுக்கு அப்போது உதவிகளைச் செய்தன.

இப்போதும் அவர்கள் இந்த அரசின் பொருளாதாரக் கொள்கையை வரவேற்கிறார்களே ஒழிய எதிர்க்கவில்லை. ஆனால், அரசோ அவர்களது கோரிக்கைகளை கருத்தில் எடுக்காது தொடர்ந்தும் நாட்டிலுள்ள சிறுபான்மையினத்தவர்களை அடக்கி ஆண்டு கொண்டே வருகிறது. வெறும் கண்துடைப்புக்காக மாகாண சபைத் தேர்தல்களை வைத்து விட்டு முன்பு இருந்ததைவிட இராணுவத்தையும், பொலிஸையும் வடக்கில் குவித்துள்ளது.

அத்துடன், இன்னமும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் நிறைவேற்றவில்லை. இப்படியே அரசு அவர்களை தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டே வந்தால் அவர்களும் எவ்வாறு பொறுமையாக இருப்பார்கள்? ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாட்டைப் போலவே கிவி நாட்டின் தலைவரான வினோச்சே மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைவரான மாக்கொஸ் போன்றோரது செயற்பாடுகளும் காணப்பட்டன.

இத்தலைவர்களது காலத்தில் அந் நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் சிறப்பாகக் காணப்பட்டன. வீதி அமைத்தல், கட்டடம் கட்டுதல் என அனைத்துச் செயற்பாடுகளையும் அவர்கள் மேற்கொண்டனர். ஆனால், அந்நாடுகளில் வாழ்ந்த சிறுபான்மையினத்தவர்களை பெரிதும் துன்பப்படுத்தினர். பல ஆயிரக்கணக்கான முஸ்லிம்களைக் கொன்று குவித்தனர்.

இவர்களுக்கும் ஆரம்பத்தில் அமெரிக்கா பல அழுத்தங்களை கொடுத்து பிரேரணைகளை முன்வைத்தது. ஆனால், இந்த ஜனாதிபதியைப் போன்றே அவர்களும் அவற்றையெல்லாம் கண்டுகொள்ளவே இல்லை. தொடர்ந்தும் தட்டிக்கழித்துக் கொண்டே வந்தார்கள். பொறுமையை இழந்த அமெரிக்கா அவர்கள் பதவி விலகியதுடன் பெரிய தண்டனைகளை விதித்தது. அவர்களை வெளிநாடுகளுக்குச் செல்லமுடியாத வகையில் கூட மடக்கிக் கொண்டது. அதே நிலைமை இந்நாட்டின் ஜனாதிபதிக்கும் ஏற்படும். இவரின் பதவிக் காலம் முடியும் வரைக்குமே அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் பொறுமைக் காக்கும். ஆகவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கூறுவதைப் போன்று செயற்பட்டால் நாட்டின் எதிர்க் காலம் சிறந்து விளங்கும். இல்லையேல் நாட்டுக்கு ஆபத்து வருவதை ஒருபோதும் தடுத்து நிறுத்தவே முடியாது"-என்றார்.



மஹிந்த தேசப்பிரிய

# உத்தியோகத்தர்களுக்கு வாக்களிப்பு கட்டாயம்

### அரச அதிகாரிகளுக்கு அறிவுறுத்து

கொழும்பு,பெப்.8
மேல் மற்றும் தென் மாகாண சபைகளின் வாக்களிப்பு தொடர்பாக தேர்தல் கடமைகளுக்குச் செல்லவுள்ள அரச ஊழியர்கள் அனைவரும் கட்டாயமாக தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

வாக்குச் சாவடிகளில் கடமையில் இருக்கும் உத்தியோகத்தரொருவருக்கு எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் கடமைகளில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அங்கிருந்து வெளிச்செல்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

எனவே, மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான வாக்களிப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் தபால் மூலம் வாக்களிப்புக்கு விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான வாக்களிப்புத் தொடர்பாக தபால் மூலமாக வாக்களிப்பது தொடர்பான விண்ணப்பங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும் - என்று அவர் கூறினார். (ச-22)

# சிறுமியை மோதிவிட்டு தப்பியது மோ.சைக்கிள்

### படுகாயமடைந்த சிறுமி வைத்தியசாலையில் அனுமதி

அச்சுவேலி, செப்.8
அச்சுவேலியில் ஐந்து வயதுச் சிறுமியை மோதிவிட்டு தப்பிச் சென்றது மோட்டார் சைக்கிள். படுகாயமடைந்த சிறுமி அச்சுவேலி பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று மாலை அச்சுவேலி பஸ் நிலையப் பகுதியில் நடைபெற்ற இந்த விபத்தில் அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த பாண்டியன் பிருந்தா (வயது-5) என்ற சிறுமியே படுகாயமடைந்தவராவார்.

நேற்று மாலை 6.15 மணியளவில் உறவினரின் உணவுச் சாலைக்குச் சிறுமி செல்லும் போது பிரதான வீதியால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதிவிட்டு தப்பிச் சென்றது.

இதனையடுத்து அங்கு நின்றவர்கள் சிறுமியை அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்தனர். படுகாயமடைந்த சிறுமி மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். சம்பவம் தொடர்பாக கேள்வியுற்று அங்கு வந்த பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினர்.

எனினும் தப்பிச் சென்ற மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை அங்கு நின்ற பொதுமக்கள் குறித்துக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து மேலதிக விசாரணையை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-11)

# சபைக்குள் ஐ.தே.க. ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப்.8
நுரைச்சோலை அனல் மின் நிலையத் திட்டம் மற்றும் மின்சார நெருக்கடி ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியினர் நேற்று சபையில் பதாகைகளை ஏந்தியவாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் சபை நடவடிக்கைகள் எதிர்வரும் 18ஆம் திகதிவரை பிரதி சபாநாயகர் சந்திர வீரக்கொடியால் ஒத்தி வைக்கப்பட்டன.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதாகைகளை ஏந்தியவாறு சபை நடுவே வந்து கூச்சலிட்டவாறே அரசுக்கு எதிராகத் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் 1.30 மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது. விசேட கூற்று, விசேட கூற்றுக்கான பதில் என்பன நிறைவுபெற்றதையடுத்து சபை நடவடிக்கைகளை எதிர்வரும் 18ஆம் திகதி வரை ஒத்திவைக்குமாறு சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா கோரினார். இதையடுத்து ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்கவின் நுரைச்சோலை அனல்மின் நிலையத்திட்டம் மற்றும் மின்சாரம் ஆகியவை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைக்கான அழைப்பு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடியால் விடுக்கப்பட்டது.

இதன்போது ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதாகைகளைஏந்திப்பிடித்தவாறு சபைக்கு நடுவே வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து சபை நடவடிக்கைகள் எதிர்வரும் 18ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டன. (த-சி)



சிவனொளிபாதமலையில் பொருத்தப்பட்டுள்ள காண்டாமணி மற்றும் தூண்டாவிளக்கு ஆகியவை பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷவால் நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டன. முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது மலைக்கு மேலாக ஹெலிகொப்டரில் பறந்துகொண்டிருந்த ஜனாதிபதி, அதிலிருந்தவாறே சிவனொளி பாதமலைக்கு மலர்களைத் தூவி தனது வணக்கத்தைச் செலுத்தினார்.

# ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை உடனடியாக மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, பெப்.08
முல்லைத்தீவு மக்களில் பெரும்பாலானோருக்கு வேலை வாய்ப்பு வழங்கி வந்த ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடபகுதி மக்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கி வருவதாகச் சொல்லும் இலங்கை அரசு, மக்களுக்கான நிரந்தர வேலை வாய்ப்பை வழங்கும் ஓட்டுத் தொழிற்சாலையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தோடு முன்னர் பண்டாரவன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை எனப் பெயரிடப்பட்ட இந்தத் தொழிற்சாலை மீளவும் அதே பெயரில் இயக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையானது முன்பு முல்லைத்தீவில் பலருக்கு வேலை வாய்ப்பையும், தொழிற்சாலையின் உற்பத்திப் பொருள்களையும் வழங்கி வந்தது. அதன் பின்னர் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக தொடர்ந்து இயங்க முடியவில்லை. இப்போதும் இயங்க முடியாத நிலையில் பல இடையூறுகள் காணப்படுகின்றன.

மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் அது 2011ஆம் ஆண்டு இயங்க ஆரம்பித்து ஒன்றரை வருடங்கள் இயங்கியது. முல்லைத்தீவு மாவட்டச் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் இயந்திரங்கள் இல்லாத நிலையிலும், தொழிலாளர்கள் மூலமாகக் கல் அரிந்து சூளையில் வைத்து சூடு காட்டிச் செங்கல் விற்பனை செய்து வந்தார்கள்.

**சர்ச்சை**

47 பணியாளர்கள் வேலை செய்து, செலவுகள் நீக்கி ரூபா 30 ஆயிரம் வரை இலாபம் அடைந்தார்கள். அப்போதும் உள்ளூர் தேவைகளை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை.

இந்தச் சமாசத்தின் செயற்பாட்டைப் பார்வையிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் தொழிலாளர் அமையம்,இந்தத் தொழிற்சாலையைப் புனரமைக்க 2.5 கோடி ரூபா வரை வழங்குவதற்கு முன் வந்தது.ஆனாலும் காணி சமாசத்தின் பெயரிலேயே இருக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தனர்.

அதன்போது அரசும், தனியாரும் மாறி மாறி இந்தக் காணிக்கான உரிமையைக் கொண்டாடியமையினால் அந்த உதவித் திட்டமும் கைவிட்டுப் போனது.

தற்போது 500 லோட் பூச்சு மணல், 5ஆயிரத்து 500 லோட் ஓட்டுக்குரிய களி மண் ஆகியன உள்ளன. அத்தோடு பழைய இரும்புகளாகச் சுமார் ஒரு லட்சம் கிலோவுக்கு மேல் இரும்புகள் உள்ளன. இவைகள் காப்பாற்றப்பட வேண்டும். தற்போது ஒரு காவலாளியைச் சமாசம் அமர்த்தியுள்ளது.

**மீளவும் இயக்க வேண்டும்**

முன்பு போன்று இயந்திரங்கள் மூலமாக இந்தத் தொழிற்சாலையை இயக்கினால் குறைந்தது 300 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கலாம். அத்தோடு மக்களுக்கு தேவையான கட்டடப் பொருள்களில் ஓடு, செங்கல், நிலத்துக்குப் பதிக்கும் தள ஓடுகள் என்பன உற்பத்தி செய்ய முடியும்.

எனவே இந்தத் தொழிற்சாலை விரைந்து இயங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இது தொடர்பில் மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்படும்-என்றார். (த-5)

# தங்கம் கடத்தல் ஒருவர் கைது

கொழும்பு, பெப்.8
சுமார் 22 இலட்சத்து 40 ஆயிரம் 625 ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கடத்தி வந்த ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயது நபரே கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து செய்து முடிக்கப்படாத 68 தங்கச் சங்கிலிகள், 48 கைச்சங்கிலிகள், 9 றோஸ்கோல்ட் சங்கிலி, 44 வைட் கோல்ட் சங்கிலிகள், 10 காதணிகள், 2 தங்க பென்டன்கள் மற்றும் 45 கிராம் சில்வர் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் சாஜாவிலிருந்து வந்த அபுதாபி விமானம் மூலமே இலங்கை வந்தடைந்தார் என தெரிவிக்கப்படுகிறது. (ச)

# பஸ் பிரச்சினையை தீர்க்க விசேட குழு

யாழ்ப்பாணம்.பெப்.8

இலங்கைப் போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் சங்கங்களுக்கிடையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட தனியார் பஸ் சங்கச் செயலாளர். மா.சசிகுமார் தெரிவித்துள்ளார்.

இலங்கைப்போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்களுக்கு இடையே அடிக்கடி ஏற்படும் முரண்பாடுகளால் மக்களின் போக்குவரத்து பாதிப்பது தொடர்பில் தீர்வு காணும் முகமாக இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சங்கத்தின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது இலங்கைப் போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்களுக்கு இடையே தொடர்ந்தும் பிரச்சினை இடம்பெற்று வருவதால் இதற்கு தீர்வு காண்பதற்கு தனியான ஒரு குழு தேவை என முடிவு எடுக்கப்பட்டதற்கு அமைவாக இலங்கைப்போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சங்கங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஒன்றிணைந்து மாதந்தோறும் ஒன்று கூடி இந்தப் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வைக் காண்பர்.

இது குறித்து யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் பாரம்பரிய கைத் தொழில்கள் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோரு டன் கலந்துரையாடி தீர் மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலத்தில் யாழ். மாவட்டத்தில் பஸ்களுக்கு இடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளை இந்தக் குழு தலையிட்டுத் தீர்வு காணும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-14)

## விளையாட்டு உத்தியோகத்தர் பதவி வெற்றிடம் விரைவில் நிரப்பப்படும்

யாழ்ப்பாணம்.பெப்.8

வடமாகாணத்தில் விளையாட்டு உத்தியோளகத்தர்களுக்கு ஆளணி பற்றாக்குறை இன்னும் 4 மாதங்களில் நிரப்பப்படும் [illegible]கான நடவடிக்கைகள் தற்[illegible]து மேற்கொள்ளப்பட்டுவருவதாகவடமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் நிலவும் விளையாட்டு உத்தியோகத்தர்கள் ஆளணிப் பற்றாக்குறை தொடர்பாக அவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடமாகாணத்தில் தற்போது 25 விளையாட்டு உத்தியோகத்தர்கள் கடமையில் உள்ளனர். இன்னும் 15 விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு ஆளணி பற்றாக்குறை நிலவுகிறது. இது தொடர்பாக வடமாகாண ஆளுநர் மற்றும் வடமாகாண கல்வி கலாசார விளையாட்டுக்கள், பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கு தெரியப்படுத்தியுள்ளதை அடுத்து எதிர்வரும் ஜூன் மாதம் அளவில் ஆளணியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டு போட்டிப் பரீட்சை ஊடாக தெரிவு செய்யப்படுவர். இதற்கு இன்னும் 4 மாத காலம் தேவைப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிலையில் விளையாட்டு உத்தியோகத்தர்களின் ஆளணிப் பற்றாக்குறையால் பிரதேச செயலகங்கள் ரீதியாக நடத்தப்படுகின்ற போட்டிகள் தாமத மடைவதுடன் ஏற்கெனவே கடமையில் உள்ள உத்தியோகத்தர்கள் மாற்றுக் கடமையில் ஈடுபட வேண்டிய நில்ல ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-14-23)

## வர்த்தகர்களுக்கு அபராதம்

தென்மராட்சி, பெப்.8

திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த மட்டுவில் பகுதியைச் சேர்ந்த இரண்டு வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த 31, பெப்.1 ஆகிய திகதிகளில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட அனைத்து உணவு கையாளும் நிலையங்களிலும் அந்தந்த பொது சுகாதாரப் பரிசோதகர்களால் பரிசோதனை நடத்தப்பட்டன.

இதன்போது திகதி, காலாவதியான பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்த இரண்டு வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிமன்றப் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை, அவர்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். (வ-9)

## 35 லட்சம் ரூபாவுக்கும் மேல் கடந்த வாரம் காசோலை மோசடி

யாழ்ப்பாணம், பெப், 8

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் 35 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான காசோலைகள் மோசடி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனினும் அதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி. விமலசேன தெரிவித்தார். யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரான்லி வீதியைச் சோந்த ஒருவர் 2 லட்சத்து 17 ஆயிரத்து 985 ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்துள்ளதாக அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவருக்கு எதிராக கடந்த 30 ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளார்.

குப்பிளான் ஏழாலை வடக்கைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டில் 12 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக கடந்த முதலாம் திகதி முறைப்பாடு செய்துள்ளார். கல்வியங்காடு கோப்பாயைச் சேர்ந்த மற்றொருவர் செய்த முறைப்பாட்டில் 10 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பில் மற்றொ ருவருக்கு எதிராக கடந்த முதலாம் திகதி முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ். கச்சேரியடியைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டில் 2 லட்சத்தி 62 ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளதாக அதே இடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக கடந்த 5 ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சோந்த ஒருவர் 5 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார். வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காசோலை மோசடிகள் குறித்து நீதிமன் றத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த மோசடிகளுடன் தொடர்புடையவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லையென்றும் புலன்விசாரணை மேற் கொள்ளப்படுவதாகவும் யாழ். பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன மேலும் தெரிவித்தார். (வ-486)

## கயானாவுக்கான தூதராகிறார் யாழ்.இந்தியத் துணைத் தூதர்

யாழ்ப்பாணம், பெப்.8

யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின், தூதர் வி.மகாலிங்கம் கயானாவுக்கான தூதராக பதவி உயர்வு பெற்றுச் செல்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத்தூதரகம் நவம்பர் 2010 இல் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டபோது முதலாவது துணைத் தூதராக நியமனம் பெற்றது முதல் இன்று வரை கடமையாற்றி வருகிறார். அவர் இராஜதந்திரத் துறையில் இருபது வருடத்துக்கு மேற்பட்ட அனுபவம் உள்ளவர். பொறியியலாளரும் அஹமதாபாத்திலுள்ள புகழ்பூத்த முகாமைத்துவத்துக்கான இந்திய நிறுவனத்தின் முகாமைத்துவப் பட்டதாரியுமான இவர் ஜகார்த்தா, கோலாலம் பூர் மற்றும் சக்ரெப் ஆகிய இடங்களிலுள்ள இந்தியத் தூதரகங்களில் பணியாற்றி யுள்ளதுடன்; சென்னை, டில்லி ஆகிய இடங்களில் பிராந்தியக் கடவுச்சீட்டு அதிகாரி உள்ளிட்ட பதவிகளில் வெளிவிவகார அமைச்சின் கீழ் பணியாற்றியுள்ளார்.

அவர் கயானாவில் இரு வாரங்களில் இந்தியத் தூதராகப் பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் யாழ்ப்பாணத்துக்கான துணைத் தூதரகத்தின் தூதுவர் விரைவில் இந்திய அரசால் நியமனம் செய்யப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## கரைச்சி பிரதேச மத்தியஸ்தர் சபைக்கு மேலும் 6 பேர்

கிளிநொச்சி, பெப்.8

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச மத்தியஸ்தர் சபைக்கு மேலும் ஆறு பேர் நீதி அமைச்சின் மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த புதன் கிழமை பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரனால் கையளிக்கப்பட்டுள்ளன.

அவர்களுடன் கரைச்சிப் பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது.

பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ச.டி.அமலராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலக தலைமைக் காரியாலய கிராம அலுவலர் க.மகேந்திரன் உட்பட கிராம அலுவ லர்கள் கலந்து கொண்டனர். பிரதேச மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## பலசரக்குக் கடைகளுக்கும் இனி வியாபாரச் சான்றிதழ்

யாழ்ப்பாணம், பெப்.8

வியாபாரதரச் சான்றிதழ் வழங்கும் வியாபார நிலையங்களுள் பலசரக்குக் கடைகளும் இணைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தேநீர் சாலை, குளிர்பான நிலையம், பேக்கரி, உணவகம் போன்றவை சுகாதார பரிசோதகர்களால் பரிசோதனை செய்யப்பட்டு 'ஏ', 'பி', 'சி' தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வந்தன.

இந்த வருடம் இந்த நிலையங்களுடன் பலசரக்குக் கடைகளும் இணைக்கப்பட்டு தரச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. மாகாண சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட 101 நாள்கள் வேலைத் திட்டத்தின் கீழ் பலசரக்குக் கடைகளும் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டு தரச் சான்றிதழ் வழங்கப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் பலசரக்குக் கடைகளும் தரச் சான்றிதழ் பரிசோதனைக்கு உட்படுத்த அந்தந்த சகாதாரப் பகுதியினர் ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சலுகை மீறினால் அபராதம்

தென்மராட்சி, பெப்.8

பண்டிகை வேளையில் வழங்கப்பட்ட சலுகையை தொடர்ந்து பயன்படுத்தும் வர்த்தகர்களுக்கு எதிராக தலா 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்க சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் முடிவு செய்துள்ளது.

கடந்த கிறிஸ்மஸ், புதுவருடம் தைப்பொங்கல் ஆகிய பண்டிகைகளை முன்னிட்டு மன்ற எல்லைக்குட்பட்ட வணிக நிலையங்களை ஞாயிற்றுக் கிழமைகளில் பண்டிகை வியாபாரத்துக்காக திறக்க மன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

பண்டிகைகள் முடிவடைந்த பின்னரும் ஞாயிற்றுக்கிழமைகளில் சில வணிக நிலையங்கள் திறந்து வியாபாரம் செய்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது போன்று ஞாயிற்றுக்கிழமைகளில் வணிக நிலையங்களை மூடி ஒத்துழைக்குமாறும் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார். (வ-9)



சந்தைக் கட்டடத்துக்கான அடிக்கல்லை சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை நடுகிறார். அருகில் நகரசபை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் நிற்கின்றனர்.

## சாவகச்சேரியில் உழவர் சந்தை

### நகர சபைத் தலைவர் அடிக்கல் நட்டார்

தென்மராட்சி, பெப்.8

சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் உழவர் சந்தை அமைக்கப்படவுள்ளது. அத்துடன் சந்தை வர்த்தகர்களுக்கான இலவச வாகனத் தரிப்பிடமும் அமைக்கப்படவுள்ளது.

இவ்விரு வேலைகளுக்கும் சபை நிதியிலிருந்து எட்டு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மரக்கறி விற்பனைப் பிரிவில் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு தனியான இடம் ஒதுக்கித் தருமாறு மரக்கறி உற்பத்தியாளர்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து நகர சபையினர் நிதி ஒதுக்கீடு செய்து நேற்று கட்டடத்துக்கான அடிக்கல்லை நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை நட்டார். மரக்கறி விற்பனைப் பிரிவுக்கு முன்பாக உழவர் சந்தைக் கட்டடம் நிர்மாணிக்கப்பட வுள்ளது. (வ-9)

## தடை செய்யப்பட்ட மீன்பிடியை 15 ஆம் திகதியுடன் நிறுத்துக

### கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனம் நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம். பெப்.8

யாழ்.குடாக்கடல் பகுதியில் தடை செய்யப்பட்ட உபரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவது எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட வேண்டும்.தவறும் பட்சத்தில் அவ்வாறானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.மாவட்டக் கிராமியக் கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத்தின் உப தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

சம்மேளனத்தின் வருடாந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பான செய்தியாளர் சந்திப்பு ஒன்று நேற்று யாழ். மாவட்டக் கடற்றொழில் சம்மேளனத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தடை செய்யப்பட்ட தொழில் பாவனையால் கடல்வளங்கள் பெரிதளவில் அழிக்கப்படுவதுடன் பொருளாதார ரீதியாக மீனவர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். இந்தநிலையில் 18 வகையான தொழில் முறைகள் பயன்பாட்டில் உள்ளன. குறிப்பாக இழுவைப்படகு.குழை போட்டுக் கணவாய் பிடித்தல்,கறுப்புத்தடி பயன்படுத்திக் கணவாய் பிடித்தல்,தங்கூசி வலைப்பாவனை,டைனமற் பாவனை,சுருக்கு வலைப் பயன்பாடு என்பன தடை செய்யப்பட்டபோதும் தென்னிலங்கை மீனவர்கள் உட்பட்ட வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் குடாக்கடல் பகுதிக்குள் இவற்றைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் எதிர்காலத்தில் கடல்வளம் பெரிதும் பாதிப்படையும். இதனைத்தடுக்கும் நோக்குடன் கிராமியக் கடற்றொழில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்த முடிவை எடுத்துள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் பின்னர் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக 9 பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள்,கடலோரக் காவல்படையினர் ஆகியோருடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர் . உரிய மீனவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளும் மேற்க்கொள்ளப்படும்-என்றார்.(கு-14)

# தமிழக மீனவர் விடுதலைக்கு மேனனின் மூலம் நடவடிக்கை

## உறுதியளித்தார் மன்மோகன்

தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையே சென்னையில் கடந்த ஜனவரி 29ஆம் திகதி பேச்சு நடைபெற்ற நிலையில், பெப்ரவரி முதலாம் திகதி 57 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை சிறைப் பிடித்துச் சென்றுள்ளதை விளக்கி அவர்கள் பிரதமரிடம் மனு அளித் தனர்.

டில்லி, பெப்.8

இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ சங்கர் மேனன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

மீனவர்கள் கைது நடவடிக்கை தொடர்பாக புது டில்லியில் அவரைச் சந்தித்த தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அவர் இதற்கான உறுதியை அளித்தார்.

புது டில்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் மன்மோகன் சிங்கை டி.ஆர். பாலு தலைமையிலான திமுக நாடாளுமன்ற குழு நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தித்து மனு அளித்தனர்.

மக்களவை உறுப்பினர்கள் பழனிமாணிக்கம், டி.கே.எஸ். இளங்கோவன், செல்வ கணபதி, ஏ.கே.எஸ். விஜயன், வேணுகோபால், தயாநிதி மாறன், தாமரைச்செல்வன், ஈ.ஜி. சுகவனம், ஹெலன் டேவிட்சன், எஸ்.ஆர். ஜெயதுரை, வசந்தி ஸ்டான்லி, எஸ். தங்கவேலு, ஏ.ஏ. ஜின்னா உள்ளிட்டோர் அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையேசென்னையில் கடந்த ஜனவரி 29ஆம் திகதி பேச்சு நடைபெற்ற நிலையில், பெப்ரவரி முதலாம் திகதி 57 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை சிறைப் பிடித்துச் சென்றுள்ளதை விளக்கி அவர்கள் பிரதமரிடம் மனு அளித்தனர்.

இலங்கை ஒருபுறம் இரு தரப்பு மீனவர்களிடையே நீடித்து வரும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக கூறிக் கொண்டு, மறுபுறம் தமிழக மீனவர்களைக் கைது செய்யும் போக்கு தவறானது என்றும் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர்.

இந்த சந்திப்பு தொடர்பாக செய்தியாளர்களிடம் டி.கே. எஸ். இளங்கோவன் தெரிவித்ததாவது:-

"சென்னையில் தமிழக - இலங்கை மீனவர்கள் இடையிலான சந்திப்பு முறையாக நடைபெறவில்லை. அந்தக் கூட்டத்தை தமிழக அரசுதான் ஏற்பாடு செய்தது போல ஒரு தோற்றம் மட்டுமே உருவாக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை. அதை உறுதிப்படுத்தும் வகையில் தான் பேச்சு முடிந்த பின்னரும் தமிழக மீனவர்கள் 57 பேரை இலங்கைக் கடற்படை சிறைப் பிடித்துள்ளது.

இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசே நேரடியாக மீனவர்கள் பிரச்சினையில் தலையிட வேண்டும். இரு நாட்டு மீனவர்களையும் மத்திய அரசு முன்னிலையில் பேசச் செய்து தீர்வுக்கு வழிகாண வேண்டும். அதற்கு முன்னோட்டமாக, இலங்கைக் கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமரைக் கேட்டுக் கொண்டோம்" என்று இளங்கோவன் கூறினார்.

தி.மு.க. குழுவிடம், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ சங்கர் மேனனிடம் உங்கள் கோரிக்கை மீது உரிய நடவடிக்கை எடுக் கும்படி கேட்டுக் கொள்கிறேன் என்று மன்மோகன் சிங் உறுதியளித் தார்.

பிரதமர் உத்தரவு

இந்நிலையில், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த பின்னர் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ சங்கர் மேனனை நேரில் அழைத்து மன்மோகன் சிங் ஆலோசனை நடத்தினார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலக உயர் அதிகாரி கூறுகையில், "

நீடித்துவரும் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மிகவும் முக்கியம். இது மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்புடைய விவகாரம்.

எனவே இலங்கை சிறையில் உள்ள இந்திய மீனவர்களை விடுவிக்கவும் ஏற்கனவே இரு நாட்டு மீனவர்கள், பேச் சில் எடுக்கப்பட்ட முடிவு களை நடைமுறைப்படுத்தவும் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிவசங்கர் மேனனை மன் மோகன் சிங் கேட்டுக் கொண்டதாகத் தெரிவித்தார். (வ)

# அரைக் கோடி ரூபாவுக்கு மேல் கடந்தவாரத்தில் மட்டும் திருட்டு

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ்.குடாநாட்டில் கொள்ளை மற்றும் திருட்டுக்கள் மீண்டும் அதிகரித் துள்ளன. அதனை நிரூபிக்கும்வகையில்முன்னெப் போதும் இல்லாத அளவுக்கு கடந்தவாரம் நகைகள் உட்பட அரைக் கோடிக்கும் மேற்பட்ட ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்தார். யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்.குடாநாட்டில் முன்னெப்போதும் இடம்பெற்றிராத அளவுக்கு அரைக்கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. கடந்த வாரம் நகைகள் உட்பட 55 லட்சத்து 20 ஆயிரத்து 900 ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிலேயே அதிக கொள்ளை மற்றும் திருட்டுக்கள் இடம் பெற்றுள்ளது. கடந்த வாரம் பெரியளவி லான கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவமாக 6 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அந்த வகையில்:-

யாழ்ப்பாணம் அபூபக்கர் வீதியில் உள்ள வீட்டில் பட்டப் பகல்வேளையில் வீட்டுக் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த 16 லட்சத்தி 6 ஆயிரம் ரூபா பெறு மதியான பொருள்களைத் திருடிச்சென்றுள்ளதாக கடந்த 02 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் எவரும் கைது செய் யப்படவில்லை.

கோப்பாய் நகரப் பகுதியில் வீட்டுக்கதவை உடைத்து உள்நுழைந்த கொள்ளையர் 14 லட்சத்து 900 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இது தொடர்பில் ஊரெழு மேற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த நபர் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்.பலாலி வீதியில் கடந்த 5 ஆம் திகதி 12 லட்சத்து 500 ரூபா பெறுமதியான மின் உபகரணங்கள்மற்றும்பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக இராஜவீதி கோப்பாயைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீட்டுக் கதவை உடைத்து ஆறு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் களவாடப்பட்டுள்ளதாக இள வாலையைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

ஓட்டுமடம் சந்தியில் உள்ள கடையொன்றை உடைத்து 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் களவாடப்பட்டுள்ளதாக நவாலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த ஒருவர் கடந்த 20 ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளார்.

மீசாலை ஐயா கடையடியை அண்மித்து வீதியால் சென்று கொண்டிருந்தவரை 4 பேர் சேர்ந்து தாக்கிவிட்டு அவர் பயணித்த ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறு மதியான மோட்டார் சைக்கிளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். சந்தேகத்தில் சுன்னாகம் மற்றும் கோப்பாய் பகுதிகளைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டு பின்னர் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் தொழில் செய்த ஒருவர் 12ஆயிரத்து 500 ரூபா பெறுமதி யான நகைக ளைத் திருடியதாக அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் கடந்த 30 ஆம் திகதி முறைப் பாடு செய்துள்ளார். அதன டிப்படையில் பொலிஸார் பூங்கா வீதி குருநகரைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினர். சித்தங்கேணியில் வீடு உடைத்து 11 ஆயிரம் ரூபா பெறுமதியான புடைவைகள் மற்றும் 5 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது. கச்சாய் வீதி கொடிகாமத்தில் 40 ஆயிரம் ரூபா பெறுமதி யான நீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளது. சந்தேகத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள் ளார். உடுவிலில் அத்துமீறி வீடுபுகுந்து 70 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட் டுள்ளது. என்று யாழ்.பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விம லசேன மேலும் தெரிவித் தார். (வ-4-86)


## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## விசேட விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு – மதுரை | –14900 | RTN |
| கொழும்பு – சென்னை | –19900 | RTN |
| கொழும்பு – திருச்சி | –22000 | RTN |
| கொழும்பு – டோகா | –25200 | O/W |
| கொழும்பு – மலேசியா | –30200 | RTN |
| கொழும்பு – சிங்கபூர் | –31000 | RTN |
| கொழும்பு – லண்டன் | –70100 | O/W |
| கொழும்பு – ஜேர்மன் | –72300 | RTN |
| கொழும்பு – பிரான்ஸ் | –81000 | RTN |
| கோழும்பு – இத்தாலி | –87400 | RTN |
| கொழும்பு – சுவிஸ் | –89500 | RTN |
| கொழும்பு – கனடா | –103000 | RTN |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

Nation Popular Travels & Tours
#128,Brown Road, Jaffna
0114375357, 0773083820
0214 920 920


## மரண அறிவித்தல்

### கதிரன் நவசி



கைதடி மேற்கு கைதடியைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும்கொண்ட கதிரன் நவசி நேற்று (07.02.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன் தம்பதியரின் அன்புமகனும் பூரணத்தின் அன்புக் கணவரும் பிறேமாவதி (சுவிஸ்), சத்தியசீலன் (லண்டன்), ரவிச்சீலன் (சுவிஸ்), ஸ்ரீஸ்காந்தசீலன் (பிரான்ஸ்), ஜெயசீலன் (ஆசிரியர்), சுயேந்திரசீலன் (லண்டன்), கயேந்திரசீலன் (போலந்து), நித்தியசீலன், ரிசிநாத் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வானந்தன் (சுவிஸ்) விஜிதா (லண்டன்) சுயேந்திரமதி (லண்டன்) தர்சினிமாலா (பிரான்ஸ்) எழிலரசி (லண்டன்), தமயந்தி (போலந்து), அனுசா ஆகியோரின் மாமனும் தசிகா (சுவிஸ்), கயுதா (சுவிஸ்), சுவீனா (சுவிஸ்), சுவின் ( சுவிஸ்), தேன்நிலா (லண்டன்), தாரகன் (லண்டன்), ரேசனா (சுவிஸ்), வினித் (சுவிஸ்), நிதுன் (லண்டன்), எழில் (போலந்து), சூர்யா (போலந்து) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் சின்னத்தா இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு.

தகவல் :
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் திரு. அருளம்பலம் அருந்தவநாதன் அவர்களின் பாசமிகு மாமனார்

அமரர் தம்பையா இராசேந்திரம்

23.01.2014 ஆம் திகதி இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிசங்கம்
வலயக்கல்விப்பணிப்பாளரும், வலயக்கல்வி அலுவலகம்
நலன்புரி சங்கஅலுவலர்களும். யாழப்பாணம்

# திண்மக்கழிவு அகற்றலுக்கு வாகன விவரம் கோரல்

*வலி.தென்மேற்கு பிரதேச சபையால்*


வலி.தென்மேற்கு, பெப்.8

திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு மூடிய வாகனத்தை வாங்க முன் வந்துள்ள வலி.தென்மேற்கு பிரதேச சபை இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் சேரும் திண்மக்கழிவுகளை டிராக்டரில் ஏற்றிச் செல்லும்போது வீதியால் செல் லும் மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதுடன் ஒரே தடவையில் அதிகளவிலான திண்மக் கழிவுகளை பெட்டியில் ஏற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மூடிய வாகனத்தில் திண்மக் கழிவுகள் ஏற்றப்படுமாயின் எரிபொருளை மீதப்படுத்துவதுடன் வீதியால் செல்லும் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களையும் தவிர்க்க முடியும்.

இது குறித்து ஆராய்ந்த பதில் தவிசாளர் மூடிய வாகனத்தை கொள்முதல் செய்வது பற்றியும், அதனால் சபைக்கு ஏற்படக்கூடிய பலாபலன் குறித்தும் உறுப்பினர்களுடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து மூடிய வாகனம் குறித்த விவரங்களை அறியத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளார். (வ-115)



நெடுந்தீவு பிரதான வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. நாய்கள் ஒன்று கூடி பிரதான வீதிகளில் படுத்திருப்பதால் வீதியால் பயணிப்போர் அச்சத்துடன் பயணிக்க வேண்டியுள்ளது. (வ-7)

# இலங்கை வங்கியின் புதிய கிளை

**திருநெல்வேலியில்**

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் இலங்கை வங்கியின் கிளை அலுவலகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது. 102, பலாலி வீதி, திருநெல்வேலியில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் எம்.எம்.முதியான்சே கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணத்துக் கான வங்கியின் உதவிப் பொது முகாமை யாளர் ரி.எம்.ரி.தென்னக்கோன், யாழ்.பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பி.நிமலதாசன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரன், கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி எஸ்.சஞ்சீவ் ஜெயக்கொடி, வணிகர் கழகத்தின் உப தலைவர் கே.விக்னேஸ் ஆகியோரும் கலந்துகொள்வார்கள். (க)

# வர்த்தகர்களுக்கு 10,000 அபராதம்

யாழ்ப்பாணம், பெப்.8

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையில் திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்ததாக இனங்காணப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் தலா பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

இதுதொடர்பில் நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் த.மதனகுமார் தெரிவித்ததாவது:-

ஜனவரி மாதம் 7 ஆம் திகதி திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் பரிசோதனை நடத்தப்பட்டது. அதில் 4 கடைகள் காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டன. அவர்கள் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது' என்றார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது காலாவதி பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த கடைகளின் உரிமையாளர்களுக்கு தலா ரூபா 10 ஆயிரம் அபராதம் விதித்ததுடன் வழக்குக்கு சமுகம் தராத இரு கடை உரிமையாளர்களுக்கு எதிரான வழக்கு மார்ச் மாதம் 3 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் நீதிபதி சிவகுமாரால் தீர்ப்பளிக்கப்பட்டதாக நல்லூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது. அத்துடன் குறித்த கடைகள் தொடர்பில் குற்றவாளிகளுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (வ-10)

# யாழ்.போதனா வைத்தியசாலையின் உணவகத்தைச் சீரமைக்க அவகாசம்

*நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்று நடவடிக்கை*

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ்.போதனா வைத்தியசாலை உணவகத்தில் நேற்று முன்தினமும் திடீர் சோதனை நடத்தப்பட்டது. இதன் போது உணவு வகைகள் சிலவற்றைத் திறந்த நிலையில் வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தமை அம்பலமாகியது. அந்த உணவு வகைகளுடன் அதன் உரிமையாளரும் நேற்று முன்தினம் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

உரிமையாளருக்கு நீதிமன்று 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததோடு அங்குள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய இரண்டுவாரகால அவகாசம் வழங்கி அது தொடர்பில் எதிர்வரும் 20 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்று பொதுசுகாதாரப் பரிசோதகர்களுக்கு உத்தரவிட்டது.

யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. யாழ்.மாநகர பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜீவநாதன், யாழ். நகர பொதுசுகாதாரப் பரிசோதகர் பு.ஆறுமுகதாசன், யாழ். போதனா வைத்தியசாலை பொது சுகாதாரப் பரிசோதகர் முரளி ஆகியோர் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

> வைத்தியசாலை உணவகத்தில் கடந்த புதன் கிழமை இவர்கள் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது அங்கு சுகாதார சீர்கேடு நிலவியமை கண்டறியப்பட்டது.

வைத்தியசாலை உணவகத்தில் கடந்த புதன்கிழமை இவர்கள் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது அங்கு சுகாதாரச் சீர்கேடு நிலவியமை கண்டறியப்பட்டதுடன் அங்கு வைத்து விற்பனை செய்யப்படும் உணவு வகைகள் தயாரிக்கப்படும் கச்சேரியை அண்மித்துள்ள வீடு ஒன்றிலும் மோசமான சுகா தாரச் சீர்கேடு நிலவியமை பொதுசுகாதார பரிசோதகர் களால் நேற்று முன்தினம் கண்டறியப்பட் டது.

நீதிமன்றில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது நிலைமை தொடர்பிலும் அங்கு முன்னெடுக்கப்பட வேண்டிய சீர்திருத்தம் தொடர்பிலும் வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கும் எடுத்துக்கூறி ஆராய்ந்து வருமாறு பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு நீதிமன்று உடனடி உத்தரவு பிறப்பித்தது.

அதனடிப்படையில் நிர்வாகத்தினருடன் உணவகத்துக்குச் சென்றபோதே 33 றொட்டியும் 34 இடியப்பமும் திறந்த நிலையில் வைத்து விற்பனை செய்யப்பட்டமையை அவர்கள் இனங்கண்டனர்.

அவற்றைப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பறிமுதல் செய்து நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தனர். (ஐ-4)

# சுழிபுரம் குடாக்கனையில் மீண்டும் கசிப்பு தாராளம்

*தடுப்பார் எவரும் இல்லையா?*

யாழ்ப்பாணம்.பெப்.8

சுழிபுரம் குடாக்கனை கிராமத்தில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது

குறித்த பிரதேசத்தில் ஏற்கெனவே இவ்வாறான சட்ட விரோத நடவடிக்கைகள் இடம் பெறுவது தொடர்பாக உரிய இடங்களுக்கு மக்களால் தெரியப்படுத்தியதை அடுத்து கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் மீளவும் இந்தப்பகுதியில் கசிப்பு நடவடிக்கைகள் இடம் பெறுவதால் மதுப்பிரியர்களின் அட்டகாசம் வீதிகளில் அதிகரித்துள்ளதுடன் வீதியால் செல்லும் பெண்களுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பான கோரிக்கைக் கடிதங்கள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடமாகாண முதலமைச்சர், சுகாதார அமைச்சு, மதுவரித் திணைக்களம், யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர், வலி.மேற்கு பிரதேச செயலர், பிரதேச சபைத் தவிசாளர், கிராம சேவையாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-14)

# மக்கள் நலன்கருதி சேவையில் ஈடுபடுக

*அரச மற்றும் தனியார் பஸ்கள் தரப்பினருக்கு யாழ்.அரச அதிபர் வேண்டுகோள்*

யாழ்ப்பாணம்.பெப்.8

மக்களுக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்கள் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மக்களின் நலன் கருதி சேவையில் ஈடுபட வேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இலங்கைப் போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்களுக்கு இடையே ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்கள் தமக்கான நேர அட்டவணையைத் தயாரித்து அந்த நேர அட்டவணையின் படி இணக்கப்பாட்டை ஏற்படுத்தி ஒற்றுமையாக சேவையில் ஈடுபட வேண்டும் .

போக்குவரத்துச் சேவையில் மக்களுக்கு இடையூறு விளைவிக்கக்கூடாது. மக்களது நலனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

குறித்த நேரத்தில் உரிய இடங்களுக்கான சேவை வழங்குவது அவசியமாகும். அதனை விடுத்து இரு தரப்புக்கும் இடையில் தொடர்ந்து முரண்பாடுகள் ஏற்படுவதால் பாதிப்படைவது மக்கள் மட்டுமே. எனவே முரண்பாடுகளை ஏற்படுத்தாமல் ஒற்றுமையுடன் சேவையை வழங்க முன்வர வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-14)

# தனித்து வாழ்ந்த மூதாட்டி முதியோர் இல்லத்தில்

யாழ்ப்பாணம், பெப்.8

வேலணை மேற்கில் தனித்து வாழ்ந்த மூதாட்டி அந்தப் பகுதி கிராம அலுவலரினால் நேற்று முன்தினம் கைதடி முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.

கணவனை இழந்த அவர் தனது சகோதரியை, சகோதரனை பறிகொடுத்த பின்னர் மற்றொரு சகோதரியுடன் வாழ்ந்து வந்துள்ளார்.

சமூக சேவைகள் திணைக்களத்தின் பொதுசன மாதாந்த உதவிப் பணத்தை நம்பி வாழ்ந்த மூதாட்டி தனது இறுதிக் காலத்தை முதியோர் இல் லத்தில் வாழ விரும்பி கிராம அலுவலர் பரமேஸ்வரனிடம் தெரிவித்துள்ளார். கிராம அலுவ லரும் பிரதேச செயலர் மற்றும் சமூக சேவைகள் அலுவலர் ஆகியோரின் பரிந்துரையுடன் கைதடி முதியோர் இல்லத்தில் இணைத்துள்ளதாக இல்லப் பொறுப்பதிகாரி த.கிருபாகரன் தெரிவித்தார். (வ-9)

# பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு முழுநேரக் கடமை

*சாவகச்சேரி நகர சபை தீர்மானம்*

தென்மராட்சி, பெப்.8

சாவகச்சேரி நகர சபையில் கடமையாற்றும் பொது சுகாதாரப் பரிசோதகரை சபையின் முழுநேரப் பணியாளராகக் கடமையாற்ற வேண்டும் என்று அண்மையில் நடைபெற்ற நகர சபையின் மாதாந் தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார்.

இதுவரை காலமும் பொதுச் சுகாதார பரிசோதகர் நகர சபை பணிகளுடன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பகுதி நேரம் கடமையாற்றி வந்துள்ளார். நகர சபையின் சுகாதாரச் செயற்பாடுகளுக்கு பொது சுகாதாரப் பரிசோதகரின் பணி அவசியம் என சுகாதாரக் குழுத் தலைவர் த. சுதர்சன் கூட்டத்தில் சுட்டிக் காட்டினார்.

இதன்போது சபையின் முழுநேரப் பணியாளராகக் கடமையாற்ற வேண்டும் என்றும் தேசிய ரீதியில் நடத்தப்படும் பெரிய வேலைத்திட்டங்களுக்கு சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து பணியாற்ற அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதை சபை ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மூன்றாவது நாளாகவும் நாடாளுமன்று முடக்கம்

புதுடில்லி, பெப்.8

**எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தொடர் அமளியால் இந்திய நாடாளுமன்ற இரு அவைகளின் நடவடிக்கைகள் நேற்றும் மூன்றாவது நாளாகப் பாதிக்கப்பட்டன.**

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியதும், கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு தெலுங்கானாப் பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டும் என்று ஆந்திராவைச் சேர்ந்த உறுப்பினர்கள் மன்றின் மையப் பகுதிக்குச் சென்று அமளியில் ஈடுபட்டனர். அதே நேரம் தமிழக மீனவர் பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டும் என்று தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூச்சலிட்டனர்.

இந்த அமளியைக் கட்டுப் படுத்த முடியாது திணறிய சபாநாயர் மீரா குமார், நாடாளுமன்றத்தை நண்பகல் 12 மணி வரை ஒத்தி வைத்தார். பின்னர் 12 மணி அளவில் மீண்டும் மன்று கூடிய போதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

அதேவேளை, நேற்றுக் காலை கூடிய மாநிலங்களவையும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளியால் பிற்பகல் 2.30 மணி வரை ஒத்தி வைக்கப் பட்டது. (ற)




புதுடில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் இந்திய இராணுவக் கண்காட்சி ஆரம்பமாகியுள்ளது. அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இராணுவத் தளபாடங்களை இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி நேரில் சென்று பார்வையிட்டார். (ற)

# அரசின் நிலைப்பாடு கவலை தருகின்றது

### சாந்தன், முருகன், பேரறிவாளன் வழக்குக் குறித்துக் கருணாநிதி

சென்னை, பெப்.8

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக இந்திய மத்திய அரசு கொண்டுள்ள நிலைப்பாடு கவலை தருகின்றது என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரின் தண்டனை குறைக்கப்படக் கூடாது என்று இந்திய மத்திய அரசு நீதிமன்றதில் தாக்கல் செய்துள்ள மனுத் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

" ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி ஆகியோரின் தண்டனையை உயர் நீதிமன்றம் 2000ஆம் ஆண்டு உறுதி செய்தது. அதன் பின்னர் தி.மு.க. அரசு மேற்



மு.கருணாநிதி.

கொண்ட முயற்சி காரணமாக நளினிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரின் கருணை மனுக்கள், குடியரசுத் தலைவரிடம் 11 ஆண்டுகள் நிலுவையில் இருந்த பின்னர் 2011ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரால் தள்ளுபடி செய்யப்பட்டன.

தமது கருணை மனுக்கள் மீது முடிவெடுப்பதில் குடியரசுத் தலைவர் அலுவலகம் 11 ஆண்டுகள் கால தாமதம் செய்தது என்ற காரணத்தைக் காட்டி, தங்கள் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டுமென்று அவர்கள் மூவரும் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். இவர்களின் வழக்கு நடந்து வரும்காலப்பகுதியில், கருணை மனுக்கள் மீது முடிவெடுப்பதில் காட்டப்பட்ட மிதமிஞ்சிய தாமதம், விவரிக்கப்படாத தாமதம், தண்டனைக் குறைப்புக்குத் தகுதியானது என்று தெரிவித்து வீரப்பன் நண்பர்கள் நான்கு பேர் வழக்கு உள்ளிட்ட 13 பேர் தொடர்பான வழக்குகளில் சம்பந்தப்பட்ட 15 பேரின் தூக்குத் தண்டனையை, ஆயுள் தண்டனையாகக் குறைத்து கடந்தவாரம் தீர்ப்பளித்திருந்தது உயர் நீதிமன்றம்.

மூவரின் தண்டனை குறைப்பு வழக்கில் இந்திய மத்திய அரசு சார்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவில், தண்டனை குறைக்கப்படக் கூடாது என்று கோரியுள்ளமை கவலை தருகின்றது." என்று தெரிவித்துள்ளார். (ற)

## தேர்தல் கூட்டணி குறித்து தி.மு.கவுடன் பேசவில்லை

*பொன்.ராதாகிருஷ்ணன் கூறுகின்றார்*

சென்னை, பெப்.8

தி.மு.க.வுடன் பா.ஜ.க. கூட்டணி அமைத்துக் கொள்ளும் என்று வெளியாகியுள்ள தகவல்கள் வெறும் வதந்தியே. அவற்றை யாரும் நம்ப வேண்டாம் என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.க. தமிழகத் தலைவர் பொன் இராதாகிருஷ்ணன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பா.ஜ.க. கூட்டணியில் தி.மு.க.வை இணைப்பதற்கான பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. அதனால் ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாக மோடி பங்கேற்கும் கூட்டத்தில் வைகோ பங்கேற்கமாட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அவை வெறும் வதந்தியே. தி.மு.கவுடன் பா.ஜ.க. எந்தப் பேச்சுக்களையும் நடத்தவில்லை. இந்தியா முழுவதும் வீசும் மோடி அலை தமிழகத்திலும் கிராமங்கள் வரை வீசுகிறது. தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணி வலுவான, முதல் நிலை கூட்டணியாக இருக்கும்.

பா.ஜ.க. தலைமையில் வலுவான கூட்டணி அமைந்து விடக்கூடாது என்று சில சக்திகள் செயற்பட்டு வருகின்றன. எனவே, வலுவான கூட்டணி அமைவதைத் தடுப்பதற்கா சில விஷமிகள் திட்டமிட்டு வதந்திகளைப் பரப்பி வருகிறார்கள். மக்கள் யாரும் இந்த வதந்திகளை நம்ப வேண்டாம். எந்தெந்தக் கட்சிகளுடன் கூட்டணிப் பேச்சுக்கள் நடந்ததோ அந்தக் கட்சிகளுடன் மட்டுமே கூட்டணி பேச்சுக்கள் தொடர்ந்து நடந்து வருகிறது. தி.மு.க.வுடன் பேச்சு எதுவும் நடைபெறவில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஜெயலலிதா பிரதமரானால் இந்தியா அழிந்துவிடும்



மு.க.ஸ்டாலின்

சென்னை, பெப்.8

இந்தியாவின் பிரதமராக ஜெயலலிதா பதவியேற்றால், இந்தியாவே அழிந்து விடும் என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின்

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தற்போது இந்தியாவின் பிரதமராகும் கனவில் உள்ளார். ஆனால் அவரின் கனவு பலித்து இந்தியாவின் பிரதமரானால் இந்த நாடே இருண்டுவிடும். என்ன நடந்தாலும் தி.மு.கவை யாராலும் அழித்து விட முடியாது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## தொகுதி உடன்பாட்டுக்காக ஸ்டாலின் தலைமையில் குழு

*தி.மு.க. பொதுச் செயலாளர் அறிவிப்பு*

சென்னை, பெப்.8

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதி உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்காக அந்தக் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்காக கட்சியின் பொருளாளர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான குழு ஒன்றை அமைத்துள்ளது தி.மு.க.

இந்தக் குழுவில் கட்சியின் பொருளாளர் மு.க.ஸ்டாலின், துணைப் பொதுச் செயலர் துரைமுருகன், துணைப் பொதுச் செயலர் வி.பி. துரைசாமி, சட்டத்துறைச் செயலர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் அமைப்புச் செயலர் பெ.வீ.கல்யாண சுந்தரம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

**தேர்தல் அறிக்கைக் குழு**

அதேவேளை, தி.மு.கவின் நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையைத் தயாரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவில், அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, எஸ்.பி.சற்குணபாண்டியன், டி.கே.எஸ். நாடாளுமன்ற உறுப்பினர் இளங்கோவன், சுப்புலட்சுமி ஜெகதீசன் மற்றும் அ.ராமசாமி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தத் தகவல்களை தி.மு.க. பொதுச் செயலர் க.அன்பழகன் வெளியிட்டுள்ளார். (ற)

## 'வெங்காயத்தை உரித்தால் அதுதான் விஜயகாந்த்'

*மனம் திறக்கின்றார் பண்ருட்டி ராமச்சந்திரன்*

சென்னை, ஜன.8

வெங்காயத்தை உரித்தால் என்ன கிடைக்குமோ அது தான் விஜயகாந்த் என்று கூறியுள்ளார் பண்ருட்டி ராமச்சந்திரன்.

சில மாதங்களுக்கு முன்னர் தே.மு.தி.க. கட்சியில் இருந்தவர் பண்ருட்டி ராமச்சந்திரன். பின்னர் ஏற்பட்ட சில மனக் கசப்புகளால் கட்சியை விட்டு விலகினார். அண்மையில் அவருக்கு தமிழக அரசு அண்ணா விருது வழங்கிக் கௌரவித்தது. அந்த விருதைப் பெற்றுக் கொண்ட உற்சாகத்தில் எதிர்வரும் தேர்தலில் அ.தி.மு.கவுக்காக பரப்புரை செய்யப் போவதாக அறிவித்தார் பண்ருட்டி.

தற்போது விஜயகாந்த் குறித்து கடுமையாக விமர்சித்து வருகின்றார் பண்ருட்டி. " கூட்டணி விவகாரத்தில் தொண்டர்களை மட்டுமின்றி பிற கட்சிகளையும் விஜயகாந்த் குழப்பி வருகிறார். உளுந்தூர் பேட்டையில் நடைபெற்ற மாநாடு மூலம் தொண்டர்களின் நல்லெண்ணத்தையும் அவர் இழந்து விட்டார். ஏதோ தேர்தலுக்காக திட்டம் வைத்திருப்பதாக கூறுகிறார். ஆனால் அவை வெங்காயத்தை உரித்த கதைதான். உள்ளே ஒன் றும் இருக்காது. அதுதான் விஜயகாந்த்" என்று கடுமையாக விமர்சித்துள்ளார் அவர். இது குறித்து விஜயகாந்த் கருத்து எதுவும் வெளியிடவில்லை. (ற)



## மக்களின் கொந்தளிப்பு


உக்ரைனில் போராட்டக்காரர்கள் தடைகளையும் மீறி அந்நாட்டு நாடாளுமன்றத்தை நோக்கி பேரணி நடத்தி வருகின்றனர். தலைநகர் கியேவ்வில் பலத்த பாதுகாப்பையும் மீறி போராட்டக்காரர்கள் பேரணி நடத்துவதால் கலவர தடுப்புப் பொலிஸார் துப்பாக்கிகளோடும், பாதுகாப்பு தடுப்புகளோடும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர். அதையடுத்து அங்கு பல்வேறு பகுதிகளில் வன்முறைகளும் தீ வைப்புச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. (படம்: பெற்றோல் குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தும் உக்ரைன் போராட்டக்காரர் ஒருவர்.) (ற)

# இத்தாலிக் கடற்படையால் ஆயிரத்து 100 அகதிகள் மீட்பு

ரோம், பெப்.8

இத்தாலிக் கடற் பகுதியில் மூழ்கும் நிலையிலிருந்த படகுகளில் இருந்து ஆயிரக்கணக்கான புகலிடக் கோரிக்கையாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. இவர்கள் அனைவரும் கடந்த 24 மணி நேரத்துக்குள் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் அந்நாட்டு அரசு மேலும் தெரிவித்துள்ளது.

இத்தாலியின் லம்பெடுசா பகுதியில் இருந்து 120 கடல்மைல் தொலைவில் புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணித்த எட்டுப் படகுகள் மூழ்கும் நிலையில் காணப்பட்டன. அதையறிந்த இத்தாலிக் கடற்படையினர் அந்தப் படகுகளில் இருந்த ஆயிரத்து 100 பேரை பத்திரமாக மீட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. புகலிடக் கோரிக்கையாளர்கள் வடக்கு ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.



மீட்பு நடவடிக்கையில் ஈடுபடும் இத்தாலிக் கடற்படையினர்

வறுமை மற்றும் போர் காரணமாக தமது உயிர்களைச் துச்சமாக மதித்து இவ்வாறான பயணங்களை மேற்கொள்ளும் புகலிடக் கோரிக்கையாளர்கள் ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குள் சட்டவிரோதமாகப் புகுகின்றனர். இவ்வாறான சட்ட விரோதப் பயணங்களில் ஆசியா மற்றும் ஆபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிகம் ஈடுபடுகின்றனர். இவ்வாறான சட்டவிரோதப் பயணங்கள் இத்தாலியூடாக நடைபெற்று வருகின்றன என்று சர்வதேச நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. அதையடுத்து இத்தாலி அரசு தனது எல்லைக்குட்பட்ட கடற்பிராந்தியத்தின் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது. (ற)

## மனித மாமிசம் விற்றோர் நைஜீரியாவில் மாட்டினர்

நைரோபி, பெப்.8


நைஜீரியாவில் மனித மாமிசத்தை விற்பனை செய்தமைக்காக உணவு விடுதி உரிமையாளர் உள்பட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நைஜீரியாவின் அனம்ப்ரா மாநிலத்தில் உள்ள ஒனிட்ஷா நகரில் இருக்கும் உணவகம் ஒன்றில் மனித மாமிசம் சமைத்து விற்பனை செய்து வருகின்றனர் என்று பொலிஸாருக்குத் தகவல் ஒன்று வந்தது. அதையடுத்துப் பொலிஸார் நேற்றுமுன்தினம் காலை அந்த உணவகத்தில் அதிரடி சோதனை நடத்தினர்.

அந்தச் சோதனையில் அங்கு மனித மாமிசம் சமைக்கப்பட்டு விற்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் அந்த உணவு விடுதியில் 2 பிளாஸ்டிக் பைகளில் இருந்த 2 மனிதத் தலைகளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இது தொடர்பாக உணவக உரிமையாளர், 6 பெண்கள் மற்றும் 4 ஆண்கள் என மொத்தம் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## *டென்மார்க்கில் திறக்கப்பட்ட விபசார அருங்காட்சியகம்*



*அருங்காட்சியகத்தின் உட்புறம்*

ஓம்ஸ்டர்டாம், பெப்.8

அரிய வகைப் பொருள்கள் மற்றும் பொக்கிஷங்களை பாதுகாக்க அருங்காட்சியகம் (மியூசியம்) அமைக்கப்படுவது வழமை. ஆனால் டென்மார்க்கில் விபசார ரகசியங்கள் குறித்த அருங்காட்சியகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. தலைநகர் ஓம்ஸ்டர்டாமின் 'ரெட் லைட்' என்னும் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது இந்த அருங்காட்சியகம். விபசார அழகிகளின் வேதனையான வாழ்க்கை அனுபவங்கள் பற்றி பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காகவே இந்த அருங்காட்சியகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அதன் நிறுவுனர் மேல்சர்டி வின்ட் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த அருங்காட்சியகம் ஓம்ஸ்டர்டாம் நகரில் ஒரு அதிசய இடமாக மாறிவிட்டது. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அதை ஆர்வத்துடன் பார்வையிட்டுச் செல்கின்றனர். (ற)

## பாகிஸ்தான் செல்ல வேண்டாம் அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை

இஸ்லாமாபாத், பெப்.8

பாகிஸ்தானுக்கு அவசியமில்லாத பயணங்கள் எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என்று தமது நாட்டுப் பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது அமெரிக்க அரசு.

இதுகுறித்து அந்த நாடு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"பாகிஸ்தானில் தற்போது உள்நாட்டு, வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகளின் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன.

இந்தநிலையில் அமெரிக்கர்கள் பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொள்வது உகந்ததல்ல. எனவே பாகிஸ்தானுக்கான அவசியமற்ற பயணங்களை அமெரிக்கர்கள் தவிர்த்துக் கொள்வதன் மூலம் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## நேபாளம் பஸ் விபத்தில் 14 பேர் உயிரிழப்பு

காட்மண்ட், பெப்.8

நேபாளத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். மலைப்பாதை ஒன்றில் பயணித்த பஸ் தடம் புரண்டு ஆற்றில் விழுந்தமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பொகரா நகரிலிருந்து பைரஹவாவுக்கு 21 பயணிகளுடன் பயணித்த குறித்த பஸ், மலைப்பகுதியிலுள்ள சித்தார்த்தா நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டது. பஸ்ஸை ஓட்டிச் சென்ற ஓட்டுநர் கண் அயர்ந்ததன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளார்கள்.

விபத்தில் காயமடைந்த இரண்டு பெண்கள் உள்ளிட்ட ஏழு பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ற)

# போர்க்குற்ற ஆதாரங்களை இராணுவம் அழிக்கவில்லை

## ஆஸ்திரேலிய அமைப்பின் அறிக்கைக்கு ராணுவம் மறுப்பு

கொழும்பு, பெப்.8

ஆஸ்திரேலிய அரசசார்பற்ற நிறுவனமொன்றினால் விடுக்கப் பட்டிருந்த இலங்கை ராணுவம் போரின் இறுதிக் கட்டத்தில் பெரும்பாலான போர்க் குற்றங்களைப் புரிந்திருந்தது. அதனை நிரூபிக்க புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்ற குற்றச்சாட்டை இலங்கை இராணுவத் தரப்புப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய அடியோடு மறுத்துள்ளார்.

ஆஸ்திரேலிய அமைப்பின் புதிய அறிக்கையை மறுத்து பிரிகேடியர் வனிகசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

பொதுமக்களுக்கு அக்கறையுள்ள ஆலோசனை மையம் என்று கூறிக்கொள்ளும் அமைப்பின் நிபுணர்கள் என்று கூறப்படும் குழுவினால் இலங்கை மீதான போர்க் குற்றங்கள் தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையானது. ஐ.நா.மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகளை தவறாக வழிநடத்துவதற்கான சூழ்ச்சியாகும். இந்த நிபுணர் குழுவில் முன்னர் இலங்கையில் ஐ.நா.வின் பேச்சாளராக இருந்துள்ள வரும் அபகீர்த்திக்குள்ளான வருமான கோர்டன் வீஸும் இடம்பெற்றிருந்துள்ளார் என்று பிரிகேடியர் வணிகசூரிய கூறி யுள்ளார்.

ஆஸ்திரேலிய அமைப்பு வெளியிட்டிருந்த அறிக்கையில் இலங்கை இராணுவத்தினர் வேண்டுமென்றே பொதுமக்கள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தியிருந்தார்கள். கொலைகள் தொடர்பான ஆதாரங்களை போருக்குப் பின்னர் இராணுவத்தினர் அழித்துவிடவும் செய்தார்கள் என்று தெரிவித்திருந்தது.

இந்த அறிக்கை கடந்த ஐந்து வருடங்களாக புலம்பெயர்ந்த புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் தெரிவித்து வந்தவைகளை மட்டுமே கொண்டிருக்கிறது. வேறு ஒன்றும் புதிதாக இல்லை என்றார் பிரிகேடியர் வணிகசூரிய. அவர் மேலும் கூறுகையில், அவ்வாறான நம்பகமான ஆதாரங்களுடன் இராணுவச் சிப்பாய்கள் அல்லது அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டால் இராணுவம் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க பின்னடித்ததில்லை. அவர்கள் மீது ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டால் விசாரணைகள் நடத்த இராணுவம் எப்பொழுதும் ஆயத்தமாகவே இருக்கிறது-என்றார்.

ஜெனிவாவில் மனித உரிமை கள் பேரவை கூடவிருக்கும் தறுவாயில் இந்த அமைப்பு நடத்தியிருக்கும் ஆய்வுகள் மறைமுக மான திட்டங்களை மனதில் கொண்டே செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ப)

## புதிய நிர்வாகம் தெரிவு

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் பலத்த வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடந்தேறியது.

ஏற்கனவே குறிப்பிட்ட கூட்டம் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற வேளையில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில் புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்ய இடம் பெற்றகூட்டம்குழப்பம்அடையும் நிலைமைக்குச் செல்ல விருந்த நிலையில் சபையில் உள்ளவர்களின் விட்டுக் கொடுப் புக்களின் மத்தியில் புதிய நிர் வாகம் தெரிவு செய்யப்பட்டுள் ளது. (ந:-86)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு**

ஆண், பெண் நாய்கள்,
நாய்க்குட்டிகள் Rottweiler
(ரொவீட்லர்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 493 3987
(44473)(45.6.3)

**மண்டப ஐயர் தேவை**

பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு மண்டப ஐயர் உடன் தேவை.
நேரில் வரவும்.
(C711449)(10.6.3)
0777 561341

**ஜோதிடர் வருகை**

இந்தியாவின் பிரபல ஜோதிடர்
C.M. சாமி (B.B.A. Dip.in Astrology)
யாழ். வருகை. ஜாதக விளக்கங்களுடன்
மலையாள மாந்திரீக முறைப்படி
பிரச்சினைக ளுக்குத் தீர்வு காணல்.
N.பாலசுப்பிரமணியம், அர்மன் வீதி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி,077 768 4406
(44472)(4.6.3)

**வாடகைக்கு**

இல.51 (47, 1/14) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:077 711 0085
(44399)(4.6.3)

**இதயம் கனிந்த பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்**




அகவை எழுபதில் பிறந்த நாள்
கொண்டாடுகின்ற எமது ஆங்கில பேராசான்
K.C.சிவசுப்பிரமணியம்
அவர்கள் மிகச் சிறந்த உடல் நலத்துடன் வாழ்க
பல்லாண்டு என்று உளம் புகழ இனிதே
வாழ்த்துகிறோம்.
கடந்த 45 ஆண்டுகளாக பல்வேறு மட்டத்திலுள்ள
பல்துறைசார்ந்த மாணவ, மாணவிகளுக்கு
நேரகாலம் பார்க்காமல் ஆங்கிலம், பிரெஞ்சு,
இலத்தீன் மொழிகளிலும் குறிப்பாக ஆங்கிலத்திலும்
மிகச் சிறந்த பயிற்சிகளையும், உன்னதமான
பெறுபேறுகளையும் பெற உழைத்து
வருகின்ற அவருடைய பணி தொடர்ந்து சிறப்புற்றோங்க நாம் அவரை
வாழ்த்துவதோடு, இன்றைய மாணவ சமூகம் அவருடைய சிறந்த பணியைப்
பயன்படுத்தி ஆக்கம் பெற விளைகின்றோம்.
குறிப்பு: ஆசிரியரின் வகுப்புக்கள் தென்புலோலி கந்தமுருகேசனார் வீதியில்
நடைபெற்றுவருகின்றன. (சி/11447)
மேலதிக தொடர்புகளுக்கு: 021 226 0277, மாணவர்கள். (3.6.4)

**வீடு காணி விற்பனைக்கு**

மல்லாகம் கே.கே.எஸ். வீதியில் 7 ஆம் கட்டை அருகில்
Church Lane இல் அமைந்துள்ள 3 பரப்புக் காணி
யுடன் வீடு தனிக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 716 8148, 011 239 1753
(சி/11716)(4.6.3)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை சுவாமியார் ஒழுங்கையில் 2½ பரப்புக் காணியுடன் 2200 சதுர அடி கொண்ட வீடு உடன் விற்பனைக்கு உண்டு.
வாடகைக்கு விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 077 695 3776

**வேலையாள்கள் தேவை**

எமது விளம்பர நிறுவனத்திற்கு
சந்தைப்படுத்தல் துறையில்(Promotion)
ஆர்வமுடைய பெண்கள் அவசரமாக தேவை.
உணவு, தங்குமிடத்தோடு கவர்ச்சிகரமான
சம்பளம் வழங்கப்படும். உடன்தொடர்பு:
077 915 6519/ 075 559 3519
LANKA VOICE (43145)(45.6.3)

**கடை வாடகைக்கு**

யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில்
சேர்.பொன்.இராமநாதன் வீதியில்
35 அடி நீளமும் 12 அடி அகலமும் கொண்ட
சகல வசதிகளுடன் கூடிய 228/3, இலக்க
கடை வாடகைக்குண்டு.
தொடர்பு:077 783 3807
(44476)(4.6.3)

**Vehicle Sale** MARUTI Zen 1061 cc,
KH 2xxx 2008 registration, 1st Owner
Excellent Condition, 58500km done,
Rs 1,750,000/=(Negotiable), Dehiwela
077 636 9416 (சி/11710)(4.6.3)

**காணி விற்பனைக்கு**

வியாபாரி மூலை ஆண்கள் பாடசாலை
வீதியில் அமைந்துள்ள காணி
விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 875 7055
(சி/11712)(45.6.3)

**வாடகைக்கு**

நாயன்மார்கட்டில் கச்சேரி கல்வி இலாகா
பிரபல பாடசாலைகள் குறுகிய தூரத்தில்
ராஜேஸ்வரி, இராமநாதன் வீதிகளில்
இரு வீடுகள் உடன் வாடகைக்குண்டு.
பாரிஸ்டர் சற்குணநாதன்
(44481)(4.6.3) 071 206 9925

**அறைகள் வாடகைக்கு**

ஒரு நாளைக்கு ஒருவருக்கு ரூபா
500/= இணைந்த குளியலறையுடன்
Hotel Villa City,
422, Galle Road, Col-6.
தொடர்பு: 072 255 2222

# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA.

The Chairman of the Regional Procurement Committee, Teching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified biddders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs.In milion) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of Ward No 22 | 500.00 | 54,000.00 | 90 | 2.7 | C8 |
| Renovation of Medical Clinic Dispensary | 500.00 | 18,000.00 | 90 | 0.9 | C10 |
| Renovation of Skin Clinic & Aliminum Partition of SMO Room inOPD (Rabies Unit) | 500.00 | 29,500.00 | 90 | 1.5 | C9 |
| Renovation of Ponnampalam Road Boundary Wall, Construction of Toilet in Male Nursing Officers Rest Room and Renovation ofToilets in Ward No 1 & Ward No 26. | 500.00 | 27,500.00 | 90 | 1.3 | C10 |

1) Bidding will be conducted through NationalCompetitive Bidding Procedure.
2) To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Contruction, Training and Development (ICTAD)
3) Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4) A Complete set of Bidding Cocuments in English Language may be purchased by Interested Bidders from Direct or, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 10.02.2014 until at 4.00pm on 19.02.2014. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5) Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 20.02.2014, late bides will be rejected. Bids will be open at 10.15hrs at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

**Director (Chirman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**08.02.2014.**

(C 11454)(7.6.3)

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEPLEX - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres Web: www.ceylontheatres.com



பருவமழை பொய்த்ததால் பாதிக்கப்பட்ட நெற்செய்கை.

# மன்னாரில் காலபோக செய்கையில் பாதிப்பு

மன்னார்,செப்.8

மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்ட காலபோகச் செய்கைகள் பருவமழை பொய்த்ததால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தமுறை மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட 12 கமநல சேவை நிலையங்களின் கீழும் 20834 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் நெற் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் பருவமழை பெய்யாததால் 5616 ஹெக்ரெயரிலேயே மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் தற்பொழுது 385 ஹெக்ரெயர் விவசாயம் பாதிப்பு அடைந்துள்ளதாகவும், 337 குடும்பங்கள் இதனால்

**12 கம நல சேவை நிலையங்களின் கீழும் 20834 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் நெற் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் பருவமழை பெய்யாததால் 5616 ஹெக்ரெயரிலேயே மேற்கொள்ளப்பட்டது.**

பாதிப்பு அடைந்துள்ளதாகவும் இந்தத் தொகை மேலும் அதிகரிக்கலாம் எனவும் விவசாயிகள் தெரிவிப்பதாக மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள வட்டாரம் தெரிவித்துள்ளது. (க)

# பொது அமைப்புக்களின் செயற்பாடுகளில் அதிருப்தி

## *தெரிவிக்கின்றனர் அக்கராயன் மக்கள்*

அக்கராயன், பெப்.8

கிளிநொச்சி அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்வின் பின்னர் அமைக்கப்பட்ட பொது அமைப்புக்களின் செயற்பாடுகள் தொடர்பாக இந்தப் பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

பொது அமைப்புக்கள் மக்களுக்குரிய சேவைகளை சிறப்பாக முன்னெடுக்க வேண்டும்.

பிரதேச செயலகங்களில் நடைபெறும் கூட்டங்களில் ஒழுங்காகக் கலந்து கொள்ள வேண்டும். மணல் ஏற்றும் செயற் பாடுகளில் மட்டுமே கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அக்கறை காட்டக்கூடாது எனவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

**பிரதேச செயலகங்களில் நடை பெறும் கூட்டங்களில் ஒழுங்காகக் கலந்து கொள்ள வேண்டும். மணல் ஏற்றும் செயற்பாடுகளில் மட்டுமே கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அக்கறை காட்டக் கூடாது எனவும் இந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.**

இதேவேளை அக்கராயன் பகுதியில் மீளக்குடியமர்வு இடம்பெற்று நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் நூலக வசதி இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இதனை ஏற்படுத்த அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அக்கறை செலுத்த வேண்டும் எனவும், புதிய நிர்வாகங்கள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

# மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்குவது மகிழ்ச்சிக்குரியது

*மருத்துவர் மு.சிறீதர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, பெப்.8

எமது மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டிலும் சிறந்து விளங்குவது பெரும் மகிழ்ச்சிக்குரியது. இவ்வாறு கிளிநொச்சி பொது மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் முருகேசு சிறீதர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்றபோது அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மருத்துவமனையில் நோயாளர்களுடன் நேரம் நகர்வதே தெரியாத நிலையில் சில மணித்தியாலங்கள் மாணவர்களின் விளையாட்டு நிகழ்வைப் பார்வையிடவும் எமது பாடசாலை வாழ்வை மீட்டுப் பார்க்கவும் ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டிலும் எதிர்காலத்தில் பெரும் சாதனைகளை நிலைநாட்ட வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

பாடசாலை அதிபர் மு.இரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மருத்துவர் அஞ்சலா சுதர்சன், கரைச்சி விளையாட்டு உத்தியோகத்தர் ச.குமார் ஆகியோரும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (க-18)

# பீடி விற்ற வர்த்தகருக்கு தண்டம்

புகைத்தல் உடல் நலத்துக்குக் கேடானது என்ற அரச எச்சரிக்கை பொறிக்கப்படாத பீடிக் கட்டுக்களை விற்ற வர்த்தகர்கள் மன்னார் மதுவரித்திணைக்கள அதிகாரிகளின் திடீர் பரிசோதனையின் போது அகப்பட்டு மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்களுக்கு நீதிமன்றத்தால் தண்டம் விதிக்கப்பட்டது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது:-

மன்னார் மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி தர்மலிங்கம் நந்தகுமார் தலைமையில் சென்ற குழுவினர் மன்னார்நகர், பேசாலை ஆகிய பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட போது மூன்று வர்த்தகர்கள் சட்ட விரோத விற்பனையில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்த பீடிக் கட்டுக்களில் அரச எச்சரிக்கையான புகைத்தல் உடல் நலத்துக்குக் கேடானது என்ற வாக்கியங்கள் பொறித்த 'லேபிள்' இருக்காமையால் இவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மூன்று வர்த்தகர்களையும் மன்னார் மதுவரித் திணைக் கள அதிகாரி மன்னார் நீதி மன்றில் பதில் நீதிவான் இம் மனுவேல் கயஸ்பல்டானோ முன்னிலையில் முன்னிலைப் படுத்திய போது இவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க)



வவுனியாவிலுள்ள பட்டானிச்சு புளியங்குளம், சாளம்பைக்குளம், அரபாநகர் போன்ற இடங்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தால் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் ஒன்றியத்தின் தலைவரும், முன்னாள் நகரசபை உறுப்பினருமான தேசமான்ய சுந்தரம் குமாரசாமி, ஒன்றியத்தின் உப செயலாளரும், முன்னாள் நகரசபை உறுப்பினருமான அப்துல் பாரி ஒன்றிய செயலர் கு.சஜிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-421)

# விவசாயப் பயிற்சி நிலையம் அமைக்குமாறு கோரிக்கை

## *விடுத்தனர் முழங்காவில் மக்கள்*

முழங்காவில், பெப்.8

முழங்காவில் கிராமத்தில் விவசாயப் பயிற்சி நிலையம் ஒன்றை உருவாக்குமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

உருளைக்கிழங்கு, திராட்சை உட்படப் பல பயிர்கள் சிறப்பாக வளரக்கூடிய முழங்காவில் பிரதேசத்தில் விவசாயப் பயிற்சி நிலையமொன்று அமைக்கப்படுமானால் விவசாய முயற்சிகளில் பெரும் முன்னேற்றம் ஏற்படுமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர். கிளிநொச்சி மாவட்டத்திலேயே முதலாவது மக்கள் மீள்குடியமர்வு முழங்காவில் கிராமத்திலேயே இடம் பெற்றது.

இதேவேளை முழங்காவிலில் உற்பத்தியாகும் விவசாயப் பொருள்களுக்கு சிறந்த சந்தை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என மரக்கறிச் செய்கையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# கள் விற்பனை நிலையத்தை இடமாற்றுமாறு வேண்டுகோள்

அக்கராயன்,பெப்.8

அக்கராயன் கமநலசேவை நிலையத்துக்கு எதிர்ப்புறத்தில் அமைந்துள்ள கள் விற்பனை நிலையத்தை ஒதுக்குப் புறமான வேறு இடத்துக்கு இடமாற்றுமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அக்கராயன் கமநல சேவை நிலையத்தில் பசளை விநியோகம் நடைபெறும் போது முரண்பாடுகள் ஏற்படுவதற்கு இந்தக் கள் விற்பனை நிலையம் முக்கிய காரணமாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக கமநலசேவை நிலையத்துக்கும் கள் விற்பனை நிலையத்துக்கும் குறுக்கே வேலியொன்றை அமைக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

இங்கு வரும் சிலர் கமநல சேவை நிலையத்தில் பணிபுரியும் அதிகாரிகளிடமோ கள்ளுத் தவறணை எங்கு உள்ளது என்று கேட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

**சிலர் கமநல சேவை நிலையத்தில் பணிபுரியும் அதிகாரிகளிடமோ கள்ளுத் தவறணை எங்கு உள்ளது என்று கேட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.**

அக்கராயன் ஓர் உப நகரமாக வளர்ந்துவரும் நிலையில் மக்கள் நெருக்கமாக வசிக்கும் பகுதியில் கள் விற்பனை நிலையம் இயங்கி வருவது பெரும் இடராக மாறியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

# மரங்களைக் கடத்தியவருக்கு தண்டம்

அனுமதி பெறாது லொறியொன்றில் முதிரை மரங்களை ஏற்றிச் சென்றவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அண்மையில் கிளிநொச்சிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான வகையில் சென்ற லொறியொன்றை மறித்துச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் அங்கு முதிரை மரங்களை ஏற்றப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தனர்.

இதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கடந்த 5 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிமன்ற சந்தேக நபருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பு வழங்கியது. (க-18)

# சமூக ஆதரவு மையங்கள்

கிளிநொச்சி,பெப்.8

கிளிநொச்சி மாவட்டத்தில் சமூகம் சார் உளநல விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமூக ஆதரவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பூநகரி தருமபுரம், மலையாளபுரம் ஆகிய இடங்களிலேயே இந்த சமூக ஆதரவு மையங்கள் இயங்கி வருகின்றன.

மேலும் நாச்சிக்குடாவில் சமூக ஆதரவு மையம் அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருவதாக கிளிநொச்சி பொது மருத்துவமனையின் உளநல மருத்துவர் மா.ஜெயராசா தெரிவித்தார். (க-18)

# மோசமான நிலையில் நாச்சிக்குடா வீதி

பூநகரி, பெப்.8

பூநகரி-நாச்சிக்குடா வீதி சேதமடைந்து குன்றும் குழியுமாக மாறியுள்ளதால் போக்குவரத்து செய்வதில் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுமார் 700 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள இந்தக் கிராமத்தில் இந்தப் பிரதான வீதி மோசமான நிலையில் காணப்படுகின்றது.

மேலும் வீதியிலிருந்து சுமார் ஆறு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நாச்சிக்குடா கிராமத்தின் ஒரு கிலோ மீற்றர் நீளமான வீதி அரைகுறையாகப் புனரமைக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்கள் அதிகளவில் பயன்படுத்தும் இந்த வீதியூடாகப் பயணிப்பதில் அதிக சிரமங்கள் ஏற்படுகின்றன.

பாடசாலை மாணவர்களும் இந்த வீதி புனரமைக்கப்படாமையால் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர். (க-18)

# கொள்ளை, திருட்டு கிழக்கில் அதிகரிப்பு

## பல சம்பவங்கள் பதிவு

மட்டக்களப்பு,பெப்.8
மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் திருட்டுச் சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

செவ்வாய்க்கிழமை இரவு மட்டக்களப்பு சந்தைப்பகுதியில் மாநகரசபையின் கட்டடத் தொகுதியில் அமைக்கப்பட்டிருந்த பிரபல பலசரக்குக் கடையொன்று உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது.

கூரையைப் பிரித்து உள் நுழைந்த திருடர்கள் வர்த்தக நிலையத்தில் இருந்த பணம் மற்றும் தொலைபேசி மீள் நிரப்பு அட்டை என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். திருடப்பட்ட பொருள்கள் சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியானவை என்று பொலிஸார் தெரிவித் தனர்.

இதேவேளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தனது மகளோடு சைக்கிளில் சென்ற பெண்ணொருவரின் தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களினால் பறித்துச் செல்லப்பட்டுள்ளது.

சனநடமாட்டம் அதிகமுள்ள பகுதியான மட்டக்களப்பு, பார் வீதியிலேயே இந்த துணிகரக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

**சனநடமாட்டம் அதிகமுள்ள பகுதியான மட்டக்களப்பு, பார் வீதியிலேயே துணிகரக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.**

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



உள்ளூர் பொருளாதார ஆட்சி செயற்றிட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளுக்கான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் என்ற தொனிப் பொருளில் மூன்று நாள் வதிவிடச் செயலமர்வு வியாழக்கிழமை மட்டக்களப்பு ஈஸ்ட் லகுன் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகான முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜித் கலந்து கொண்டு மங்கல விளக்கை ஏற்றி வைத்தார்.

# யானைத் தாக்குதல் குறித்து 17 இல் உயர்மட்டக் கூட்டம்

## செல்வராசா எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்புமாவட்டத்தில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் யானை தாக்குதல்களால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் எதிர்வரும் 17ஆம் திகதி உயர் மட்டக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

வன ஜீவராசிகள் அமைச்சில் அமைச்சர் விஜயமுனி சொய்சாவை மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்டுள்ள யானைத் தாக்குதல்களால் ஏற்பட்ட உயிரிழப்புகள், அழிவுகள் குறித்த அமைச்சருக்கு விரிவாக எடுத்துக்கூறினேன். இவற்றைத் தடுத்து மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்த நடவடிக்கையெடுக்குமாறு அவரிடம் கேட்டுக் கொண்டேன்.

இது தொடர்பில் பதில் அளித்த அமைச்சர், யானைத் தாக்குதல்கள் குறித்து ஆராய மட்டக்களப்புக்கு வருகை தருகிறேன். எதிர்வரும் 17ஆம் திகதி யானைத் தாக்குதல் குறித்து ஆராய்வதற்கு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கூட்டத்தை நடத்துவோம் என்று என்னிடம் உறுதியளித்தார் - என்றார். (ச)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
12 ★ 08 ★ 1932



மறைவு
09 ★ 01 ★ 2014

## அமரர் கணபதி தங்கமுத்து

எமக்கு காவல் தெய்வமாக வாழ்ந்தவரே பெற்றவள் தாயாக
இருந்தாலும் எம்மை தாலாட்டி சீராட்டி வளர்த்தவர்
நீங்கள் தானே அம்மம்மா கண்கள் கனக்கின்றது நெஞ்சம்
விம்முகின்றது என் கனவினிலே அடிக்கடி நீங்கள் தானே
அம்மம்மா நோயுற்றால்மருந்தல்ல அம்மம்மா
நாவூறு பார்த்ததும் பறந்து போகும் பிணி எல்லாம்... பசி என்றால்
புட்டு, புட்டுக்கு அம்மியில் அரைத்த சம்பல் இனி யாரிடம்
செல்வோம் நாங்கள் சேலை மடிப்பில் கட்டி வைத்திருந்த பணம்
எடுத்து சொட்டுத்தீன் வாங்கித் தந்தது மறந்து விடுவோமா
நேற்றுப் போல இருக்கின்றது... நீங்கள் இவ்வுலகை
விட்டுச் சென்றபொழுது எடுத்த புகைப்படங்களையே தினம்
தினம் பார்த்து விழிகளை ஈரமாக்கி தனிமையில்...

பேரப்பிள்ளைகள்
(கோபி, லவன்,
சுவன், மது, காவிஜா)

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(44384)(3.6.4)

# பாதசாரிக் கடவைக்கு கல்முனையில் வர்ணம்



கல்முனை,பெப்.8
கல்முனைப் பிரதேசத்தில் வர்ணம் அழிவடைந்துள்ள பாதசாரிகள் கடவைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மீண்டும் செப்பனிடப்படுகின்றன.

கல்முனைப் பிரதேசத்தில் அதிகரித்துள்ள வாகனப் போக்குவரத்து காரணமாகவே பாதசாரிகள் கடவைகள் துரிதமாக அழிவடைந்து வருகின்றன.

இதன் காரணமாக பாதசாரிகளும், வாகன சாரதிகளும் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனைக் கவனத்தில் கொண்டு கல்முனை வீதி அபிவிருத்தி அதிகார சபை அழிவடைந்திருந்த பாதசாரிகள் கடவைகளுக்கு வர்ணம் பூசி செப்பனிட்டு வருகின்றது. (ச)

# ‘கோணேஸ்வரம்’ நூல் வெளியீடு

திருகோணமலை,பெப்.80
வரலாற்றுப் பெருமை மிக்க திருகோணேஸ்வரம் ஆலயம் சார்ந்த இதுவரை காலமும் வெளிவந்த வரலாறு உள்ளிட்ட ஆன்மிக இலக்கியங்களின் தொகுப்பு நூலான ‘திருகோணேஸ்வரம்’ நூல் வெளியீட்டு விழாவும் கல்விக்கான மூன்றாம் கட்ட நிதியுதவி வழங்கும் வைபவமும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

ஆலய பரிபாலன சபை செயலர் கணபதிப்பிள்ளை அருள் சுப்பிரமணியத்தால் திருக்கோணேஸ்வரம் நூல் தொகுக்கப்பட்டுள்ளது. (ச-40)

# பல்கலையில் பட்டிப்பொங்கல்

மட்டக்களப்பு,பெப்.8
கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறை இறுதி வருட மாணவர்களின் ஏற்பாட்டில் பட்டிப்பொங்கல் விழா புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பல சம்பிரதாய நிகழ்வுகளும், கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

இந்தக் கலந்துரையாட லின் போது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு செயற்கை மாடுகளின் பயன்பாடு மற்றும் நன்மை, தீமைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது. (ச)

# சிறுபான்மையினரும் இந்நாட்டு மக்களே

## நிந்தவூர் மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவிப்பு

அம்பாறை,பெப்.8
சிறுபான்மை சமூகங்களாக நாமிருப்பினும், நாமும் இந்த நாட்டு மக்கள் மட்டுமன்றி நாட்டில் முழு உரிமையும் கொண்டவர்களென்பது உறுதியான விடயமாகும்.

இவ்வாறு நிந்தவூர் மாவட்ட வைத்திய அதிகாரி ஆகில் அஹ்மத் சரிபத்தீன் கூறினார்.

இலங்கையின் 66 ஆவது சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுபான்மை சமூகங்களின் தலைவர்களும் ஒன்றிணைந்தே இந்த நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடி, சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தனர். பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலும் அதில் உரிமை பாராட்டுவதிலும் நாம் பின்னிற்கக்கூடாது.

சிறுபான்மைச் சமூகத்தவர்களாகிய நாமும் இந்த நாட்டு மக்களே என்ற உரிமையை எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுக்க முடியாது.

நாம் இந்த நாட்டுக்குரியவர்களென்பதையும், நாடு நமக்குச் சொந்தமானதென்பதையும் எமது ஒவ்வொரு செயற்பாட்டிலும் மிளிரச் செய்ய வேண்டும். இந்த உரிமைக்கான தொனி நம் சொல்லிலும், செயலிலும் வெளிப்பட வேண்டுமென்பதில் நாம் எந்தவித தயக்கமும் காட்டக் கூடாது.

எனவே எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டின் உரிமையுள்ள மக்கள் நாம் என்பதை எப்போதும் விட்டுக் கொடுக்கக் கூடாது - என்றார். (ச-30)

# அழுத்தங்களைப் பிரயோகித்தால் இனங்களுக்கு இடையில் விரிசல்

## தென்னாபிரிக்கத் தூதரிடம் ஹக்கீம் தெரிவிப்பு

இலங்கை அரசின் பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு சம்பந்தமான விடயங்களில் சர்வதேச சமூகம் கூடுதலான அழுத்தங்களைப் பிரயோகிக்குமானால், அது இனங்களுக்கிடையிலான விரிசலை அதிகரித்து, நல்லிணக்க முன்னெடுப்புகளைப் பாதிப்படையச் செய்யும்.

இவ்வாறு தென்னாபிரிக்க தூதர் ஜிஓப் டொயிட்ஜ்யிடம் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சர்வதேச சமூகம் சுமத்தும் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்கும், சகல இன மக்களினதும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கை அரசு தயாராகி வருகிறது என்று அமைச்சர் கூறினார்.

உள்நாட்டில் உண்மையைக் கண்டறிந்து, நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆர்வமாக இருப்பதாகவும், அதுபற்றி அவர் தம்மிடம் நம்பிக்கை தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகளில் அதிக அக்கறை காண்பித்து வரும் தென்னாபிரிக்க குடியரசின் இலங்கைக்கான தூதர் ஜிஓப் டொயிட்ஜ், நீதியமைச்சர் ஹக்கீமை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நீதியமைச்சில் சந்தித்து இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

இலங்கையின் பிரச்சினைகளுக்கு உள்நாட்டில் காணப்படும் தீர்வே சாலச்சிறந்ததாக அமையுமென்று தாம் கருதுவதாக தூதர் ஜிஓப் டொயிட்ஜ், அமைச்சர் ஹக்கீமிடம் கூறியதோடு, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரை அவற்றைப் பற்றி ஆராய்வதற்கு ஓர் உள்நாட்டுப் பொறிமுறையைக் கையாள்வதே மிகவும் உகந்தது என்றார்.

போர் முடிவடைந்து, அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் சூழ்நிலையில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தென்னாபிரிக்க முதலீட்டாளர்களை ஊக்குவிக்குமாறும் அமைச்சர் ஹக்கீம் அந்நாட்டு தூதரிடம் வேண்டுகோள் விடுத்தார். (ச-10)



தென்னாபிரிக்க குடியரசின் இலங்கைக்கான தூதர் ஜிஓப் டொயிட்ஜ், நீதியமைச்சர் ஹக்கீமைச் சந்தித்து உரையாடினார்.

## இலக்கத் தகடற்ற வாகனங்களை பயன்படுத்த தடை



அஜித் ரோஹண

கொழும்பு, பெப்.8

தேர்தல் காலப்பகுதியில் இலக்கத் தகடுகள் அற்ற வாகனங்களைச் சிலர் பயன்படுத்துவதாகக் கிடைத்துள்ள தகவல்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

வாகனங்களை இலக்கத்தகடு இல்லாது பயன்படுத்துவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

சட்ட அனுமதி பெற்ற வாகனங்கள் மாத்திரமே கறுப்புக் கண்ணாடிகளுடன் பயணிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்புத் தரப்பினர், பொலிஸார் மற்றும் அங்கீகாரம் பெற்றவர்கள் தவிர வேறு எவரும் துப்பாக்கிகளைப் பயன்படுத்த முடியாது.

எவரேனும் அவற்றைப் பயன்படுத்துவார்களாயின் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## சவாலை எதிர்கொள்ள மக்கள் சக்தி தேவை

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.8

நாடு சர்வதேசத்தில் எதிர்நோக்கியுள்ள சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கு மக்கள் சக்தியும் ஆதரவும் தேவை என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை, ருஹூனுமாகம்புர நிர்வாகக் கட்டடத் தொகுதிக்கு முன்னால் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

ஜெனீவாவில் எமது நாட்டுக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு எதிர்ப்பை தெரிவிப்பதற்கு சிறந்த சந்தர்ப்பம் இதுவாகும் என்று அவர் கூறினார்.

இந்தத் தேர்தலின் போது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசுக்கு ஆதரவு தெரிவிப்பதன் ஊடாக இதனை சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்ட முடியும் என்று அவர் குறிப்பிட்டார். ஒரு சிலரின் செயலால் பல்வேறு அழுத்தங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



தென்மாகாண சபைத் தேர்தலுக்காக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக வேட்புமனு தாக்கல் செய்ய அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் வேட்பாளர்கள் வருகை தந்தனர். அருகில் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் காணப்படுகின்றனர். (ச)

## ரஷ்ய நாட்டு பெண்ணுக்கு அபராதம்

கொழும்பு, பெப்.8

வெலிகம, கப்பரத்தோட்ட பகுதியில் சட்ட விரோதமாக கட்டடங்கள் நிர்மாணிக்க அத்திபாரம் இட்ட ரஷ்யா நாட்டுப் பெண்மணியொருவருக்கு மாத்தறை நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது குற்றத்தை ஏற்றுக்கொண்ட ரஷ்யா நாட்டுப் பெண்மணிக்கு 50,000 ரூபா அபராதம் செலுத்துமாறு மாத்தறை நீதிமன்ற நீதிவான் ருவன் எசிரிர குமார உத்தரவிட்டார்.

பிரதேச வாசிகள் இந்தப் பெண்ணுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தங்க பிஸ்கட்டுக்களை கடத்தியவர் மாட்டினார்

கொழும்பு, பெப்.8

தங்க பிஸ்கட்டுக்களை கடத்த முயன்றதாக கூறப்படும் 40 வயதான இலங்கையர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர் என்று சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார். இந்த நபர் 15.5 மில்லியன் ரூபா பெறுமதியான 31 தங்க பிஸ்கட்டுக்களை வைத்திருந்தார் என்றும் அவர் கூறினார்.

இந்த சந்தேக நபர் 16 தங்க பிஸ்கட்டுக்களை தனது பாதணிக்குள்ளும், 15 தங்க பிஸ்கட்டுக்களை அவரது காற்சட்டையின் இடுப்புப் பகுதிக்குள்ளும் மறைத்து வைத்திருந்ததார் என்று அவர் கூறினார். (ச)

## கடைத் தொகுதியில் தீ பரவியது

கொழும்பு, பெப்.8

மல்வான, முச்சந்தி பகுதியிலுள்ள கடைத் தொகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தீ பரவியுள்ளது.

அதிகாலை 4.30 மணிக்குத் தீ பரவ ஆரம்பித்ததுடன், தீயணைப்பு சேவைப் பகுதியினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இதேவேளை, களனி, கொஹொல்வில வீதியிலுள்ள பிளாஸ்ரிக் உற்பத்தி நிலையமொன்றிலும் திடீரெனத் தீப்பிடித்துள்ளது.

இந்த இடரால் பிளாஸ்ரிக் உற்பத்தி நிலையத்துக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

# போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த விசேட செயற்றிட்டம்

## நடைமுறைப்படுத்த அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, பெப்.8

போதைப் பொருள் ஒழிப்புக்கான விசேட வேலைத்திட்டத்தை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த, போதைப் பொருள் ஒழிப்புக்காக விசேட வேலைத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பாக நேற்றுமுன்தினம் மாலை அலரி மாளிகையில் நடைபெற்ற விசேட பேச்சின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



போதைப் பொருள் ஒழிப்புக்கான விசேட வேலைத் திட்டத்தை தயாரிப்பது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பேச்சு இடம்பெற்றது. இந்தப் பேச்சில் பிரதமர் டி. எம். ஜயரத்ன, அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, திஸ்ஸ கரலியத்த, சந்திரசிறீ கஜதீர, பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

போதைப்பொருள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுவது, பாடசாலை மாணவர்கள் அவற்றுக்கு அடிமையாவது ஆகியவற்றைத் தவிர்ப்பதற்காக தேசிய வேலைத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பாக பேச்சில் ஆராயப்பட்டது.

போதைப்பொருள் தொடர்பான சட்டங்களைக் கடுமையாக்குமாறும் போதைப் பொருளுக்கு அடிமையானோரை முறையான புனர்வாழ்வில் ஈடுபடுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நாட்டில் தார்மிக சமுதாயத்தை உருவாக்க மஹிந்த சிந்தனை கோட்பாட்டின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மதுவுக்கு முற்றுப்புள்ளி திட்டம் கடந்த காலத்தில் நாடு முழுவதும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

போதைப்பொருள் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

நாட்டுக்குள் போதைப் பொருள் கொண்டு வரப்படுவதைத் தவிர்ப்பதற்காக சுங்கப் பரிசோதனைகளுக்காக நவீன தொழில் நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்துவதை துரிதப்படுத்துமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வலி.வடக்கு மக்கள் மீளக்குடியமர்வில் தொடரும் இழுத்தடிப்புத் தந்திரம்....

நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தும் பணிகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்தாதீர்கள் - பயன்படுத்த வேண்டாம். இத்தகைய பணிகளில் சிவில் நிர்வாகத்தினரே கடமைக்கு அமர்த்தப்பட வேண்டும். இத்தகைய பணிகள் கட்டளை இட்டுச் செய்யப்பட வேண்டியவை அல்ல-

சிவில் நிர்வாகத்தினரால் ஆற்றப்பட வேண்டிய பணிகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவதால், பொதுமக்கள், அந்தப் பணிகள் குறித்து தமது கருத்துக்களை - அபிப்பிராயங்களை வெளிப்படுத்த முடியாது உள்ளனர் - தமக்குள் அஞ்சுகின்றனர்.

சிவில் நிர்வாகத்தினர் மூலம் செய்யப்பட வேண்டிய பணிகளை இராணுவத்தினரைக் கொண்டு ஆற்றுவதால், மக்கள் நிர்க்கதி அடைகின்றனர்-

இதனை வேறு எவரோ, அல்லது நாமோ கூறுவதாக நினைத்து விடாதீர்கள். அரசின் அமைச்சர்களில் ஒருவரான, இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான, அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவே இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதனையும் அவர் தமது கட்சிக் கூட்டம் எதிலும் பேசுகையில் கூறவில்லை. மக்கள் மன்றமான நாடாளுமன்றத்தில், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை, பெற்றோலியக் கைத்தொழில்கள் முதலான அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதம் ஒன்றில் (2013-12-05 ஆம் திகதி) கலந்துகொண்டவேளை அமைச்சர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருந்தார்.

அமைச்சரின் காலம் முந்திய கருத்தை இங்கு ஞாபகப்படுத்துவது. அல்லது முக்கியத்துவம் வழங்கி இப்போது தெரிவிப்பது ஏன் என்று சலித்துக் கொள்ளாதீர்கள். அமைச்சர் வாசுதேவ நாணயக்காரா தெரிவித்த கருத்து, வலி.வடக்குப் பிரதேச மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில், எழுந்துள்ள புதிய சங்கடமான, குழப்பம் நிறைந்த நிலையை (முன்னரே) அச்சொட்டாக விவரணப்படுத்துவதாக அமைகிறது என்பதனைச் சுட்டிக்காட்டுவதே இதன் நோக்கம்.

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பில், வெவ்வேறு - வித்தியாசம் வித்தியாசமான - புள்ளி விவரங்கள் கிடைக்கின்றன: சரியான புள்ளி விவரங்களை திரட்டுங்கள் என்று யாழ்.மாவட்டத்தின் புதிய இராணுவத் தளபதி, வலி.வடக்கு நலன் புரி நிலையங்களின் தலைவர்களிடம் தெரிவித்தமையே அமைச்சரின் நாடாளுமன்ற உரையை மீள் நினைவுக்குக் கொண்டுவரக் காரணமாக அமைந்தது.

இடம்பெயர்ந்தவர்கள் சார்பில் ஒரு புள்ளி விவரமும், பிரதேச செயலகத்தால் மற்றொரு புள்ளி விவரமும், மீள்குடியேற்ற அமைச்சால் வேறு ஒரு புள்ளி விவரமும் தரப்பட்டுள்ளன. ஆகையால் சரியான புள்ளி விவரங்களைத் திரட்டுங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, வலிகாமம் வடக்கு மக்கள் தத்தமது சொந்த இடங்களில் குடியேற்றப்படுவர் என்றும், அதுவரை ஆர்ப்பாட்டத்திலோ போராட்டத்திலோ ஈடுபட வேண்டாம் என்றும் இராணுவத் தளபதி கேட்டுள்ளார்; அறிவுறுத்தி உள்ளார்.

அரசாங்கத்தின் - இராணுவத் தளபதியின் - இந்தப் புதிய நிலைப்பாடு (வாய்ப்பாடு என்றும் கூறலாம்) குறித்து வடக்கின் சிவில் சமூகத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

வலி.வடக்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர வேண்டிய மக்கள், நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாகவே தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். சரியான பதிவுகளே அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன -

நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாகத் தமது பதிவுகளை மேற்கொண்டவர்களின் பெயர்களை நீக்குவதற்கு எவருக்கும் உரிமை இல்லை - என்று சிவில் சமூகத்தினர் அழுத்தம் திருத்தமாக - நியாயத்தை, நீதியை - எடுத்துக் கூறி உள்ளார்கள்.

நீதிமன்ற உத்தரவின் பெறுபேறாக -

எத்தன்னை பேர் மீளக்குடியமர உள்ளனர்? அவர்களுக்கான உதவிகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட உள்ளன? என்பவை தொடர்பான விடயங்களில் இராணுவமோ அன்றி வேறு எந்தத் தரப்பினருமோ மூக்கை நுழைக்க முடியாது. வேறு எந்தத் தரப்பும் இடையூறாகவும் இருக்க முடியாது.

ஒட்டு மொத்தத்தில், வலி.வடக்கில், அந்த மண்ணையே சொந்த மண்ணாக, பூர்வீக மண்ணாகக் கொண்ட மக்களை, மீளக்குடியமர நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும், இழுத்தடிக்கும் போக்கைக் கொள்ளும் பாங்கு, விவகாரத்தை மேன்மேலும் பெரிதாக்குவதற்கான உத்தியாகவே கருத முடிகிறது.

இடம்பெயர்ந்தோர் குறித்து நாட்டின் பாதுகாப்புத் தவிர்ந்த அரசின் சிவில் செயற்பாடுகளில் இராணுவத்தினரின் பங்கு தலையீடு, புரியாத ஒன்றாக உள்ளதாக, கடந்த டிசெம்பர் மாதம் இங்கு வந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரி சலோகா பெயானி தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடக்கூடியதாகும்.

இலங்கையில், போரினால் இடம்பெயர்ந்தோர் தொடர்பில் தேவையற்ற விடயங்களில் இராணுவத்தினர் தலையீடு செய்கின்றனர். இது தொடர்பில் (ஐ.நா.ஊடாக) அழுத்தங்களைக் கொடுப்பேன் என்று அவர் தெரிவித்தமை சிவில் சமூகத்தினரின் ஆதங்கத்தை வலுப்படுத்துகிறது. அரசாங்கம் அது குறித்துக் கருத்தில் கொள்ளுமா என்பது பெரும் வினாவாக எழுந்து உயர்ந்து நிற்கிறது.

# தூக்கி எறியப்பட வேண்டிய பண்டாரநாயக்க சிந்தனை

ராஜராஜன்

இந்த நாட்டிலே இன முறுகல்கள் ஏற்படுவதற்கு வழி அமைத்துக் கொடுத்தவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரும், முன்னாள் பிரதமருமான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க என்றால் அது மிகையாகாது. அவரது வாயிலிருந்து வெளிவந்த 24 மணித்தியாலங்களுக்குள் சிங்களம் மட்டும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவேன் என்ற இனவெறி கலந்த வார்த்தைகள் பெரும்பான்மையினச் சிங்கள மக்களின் இரத்தத்தைச் சூடேற்றியது. இதன் விளைவாகவே 1958 இல் தமிழர்களுக்கு எதிரான கொடியதொரு இனக் கலவரம் இடம்பெற்றது. ஆனால் இதற்கு வழிவகுத்த பண்டாரநாயக்காவால் அதிக காலம் ஆட்சியில் இருக்க முடியவில்லை. பௌத்த துறவி ஒருவரே அவருக்குக் காலனாக மாறி அவரது உயிரைப் பறித்தார். அதற்குப் பின்னர் ஆட்சிக் கதிரையில் அமர்ந்த தலைவர்கள் அவரது ஏனைய சிந்தனைகளைக் கடைப்பிடித்தார்களோ இல்லையோ, அவரது தமிழர் விரோதப் போக்குச் சிந்தனையை இம்மியும் பிசகாது சிக்கெனப் பிடித்துக் கொண்டனர். சிறுபான்மையின மக்களின் உதவியின்றி பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆதரவு இருந்தாலே ஆட்சியில் அமர்ந்து கொள்ளலாம் என்ற கணிப்பு அவர்களின் மனங்களில் மேலோங்கிக் காணப்பட்டது- காணப்படுகின்றது. பல்லின மக்கள் வாழுகின்ற இலங்கை போன்றதொரு சிறிய தேசத்தில் இத்தகைய சிந்தனைகள் கடும் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளத் தவறியதன் காரணமாகவே இந்த மண் செந்நீரில் குளிக்க வேண்டிய அவலம் ஏற்பட்டது.



> 1958 இல் தமிழர்களுக்கு எதிரான கொடியதொரு இனக் கலவரம் இடம்பெற்றது. ஆனால் இதற்கு வழிவகுத்த பண்டாரநாயக்காவால் அதிக காலம் ஆட்சியில் இருக்க முடியவில்லை. பௌத்த துறவி ஒருவரே அவருக்குக் காலனாக மாறி அவரது உயிரைப் பறித்தார். அதற்குப் பின்னர் ஆட்சிக் கதிரையில் அமர்ந்த தலைவர்கள் அவரது ஏனைய சிந்தனைகளைக் கடைப் பிடித்தார்களோ இல்லையோ அவரது தமிழர் விரோதப் போக்குச் சிந்தனையை இம்மியும் பிசகாது சிக்கெனப் பிடித்துக்கொண்டனர்.

### இனவாதம் பேசுவதே அரசியல்வாதிகளின் பிழைப்பு

அமரர் பண்டாரநாயக்காவுக்குப் பின்னர் அவரது மனைவி, மகள் ஆகியோர் ஆட்சிப் பொறுப்பில் இருந்துள்ளனர். ஆனால் அவர்களும் பண்டாரநாயக்காவின் அரசியல் நிலைப்பாட்டுச் சூத்திரத்தையே பின்பற்றினார்கள். இவ்விடயத்தில் தற்போதைய ஜனாதிபதி இன்னமும் ஒருபடி மேலே போய்விட்டார் என்றே கூற வேண்டும்.

இனவாதம் பேசுவது என்பது இந்த நாட்டின் அரசியல்வாதிகளின் பிழைப்புக்கு உதவி செய்யலாம். ஆனால் மக்களின் மகிழ்ச்சிக்கு உதவவே உதவாது. அரசியல் என்பதொரு சாக்கடை என்ற அறிஞர் பேர்னாட்ஷாவின் கருத்துக்களை மெய்ப்பிக்கும் வகையிலேயே இங்குள்ள அரசியல்வாதிகள் நடந்து கொள்கின்றனர். இனங்களுக்கிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதும், தமக்கு வாக்களித்த மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டு கட்சி மாறி பதவிச் சுகத்தை அனுபவிப் பதும் அதற்குமொரு காரணத்தைச் கூறிச் சமாளிப்பதும் பெரும்பாலான அரசியல்வாதிகளுக்கு கைவந்த கலை யாகவே மாறிவிட்டது. இன்றுள்ள அரசை நாம் எடுத்துக் கொண்டால் அமைச்சரவையில் முக்கிய பொறுப்புக் களை வகிக்கும் பலர் மாற்றுக் கட்சிகளிலிருந்து அரசு பக்கம் தாவிச் சென்றவர்களாகவே காணப்படுகின்றனர். எத்தகைய குற்ற உணர்வும் இல்லாது இவர்களால் எவ்வாறு நடந்து கொள்ள முடிகின்றது என்பது ஆச்சரியத்துக்கு உரியதொன்றே. இன்றைய ஆட்சியில் பண்டாரநாயக்க குடும்பம் திட்டமிடப்பட்ட வகையில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்குக் கூட அங்கு இடமும் இல்லை, மதிப்பும் இல்லை. ராஜபக்ஷ குடும்பத்தவர்களே எங்கும் எதிலும் நிறைந்து காணப்படுகின்றனர். ஆட்சி அதிகாரங்கள் அவர்களின் கைகளிலேயே உள்ளன. ஒரு கை அசைவினால் இன்று எதையும் சாதிக்கும் திறன் அவர் களுக்கு உண்டு. எவராலுமே அசைக்க முடியாத மலையாக அவர்கள் நிமிர்ந்து, உயர்ந்து நிற்கின்றனர்.

### தமிழர் விடயத்தில் மட்டும் ஒன்றுபடும் சிங்களக் கட்சிகள்

பெரும்பான்மையினத் தலைவர்கள் தமக்குள் பிணக்குகளை ஏற்படுத்திக் கொண்டாலும், சிறுபான்மையினத்தவர் தொடர்பான பிரச்சினைகள் வரும்போது தமக்குள் ஒன்றுபட்டு விடுவார்கள். இதுதான் இந்த நாட்டிலே காலாதிகாலமாக நடந்து வருகின்றது. சிறுபான்மை மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்ற விடயத்தில் இந்த நாட்டின் பிரதான கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தமக்குள் முரண்பட்டுக் கொண்டதாகச் சரித்திரமே கிடையாது. மாறாக எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் விடயத்தில் ஒன்றுபட்டு நிற்பார்கள். சில சிறிய பெரும்பான்மை இனக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அவ்வப் போது சிறுபான்மையினருக்கு ஆதரவாகக் குரல் எழுப்புவார்கள். ஆனால் பெரும்பான்மை மக்கள் இதைக் கருத்தில் கொள்வதில்லை.

### நியாயமாக நடந்திருந்தால் ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது

தற்போதைய அரசு நியாயமாக நடந்து கொண்டிருந்தால் இலங்கை விவகாரம் ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டிய அவசியமே எழுந்திருக்காது. ஏதோ புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும், இங்குள்ள பிரதான தமிழர் கட்சியும் தான் ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணைக்கு மூல காரண மெனத் தென்னிலங்கையில் சூடான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சில இனவாதத் தலைவர்கள் இவற்றுக்கெல்லாம் ஒரு படி மேலே போய் ஜெனீவாப் பிரேரணை தனிநாட்டுக்கான ஓர் அத்திபாரமே எனக் கூக்குரல் இடுகின்றனர். சிந்திக்கத் தெரிந்த எவரும் இதன் உண்மைத் தன்மையை இலகுவில் புரிந்து கொள்வார்கள். ஆனால் அவர்கள் சிந்திப் பதாகவே தெரியவில்லை. சிந்திக்கத் தொடங்கிவிட்டால் மனதில் வீணான மாற்றங்கள் ஏற்பட்டுவிடும் என்பதைப் புரிந்து கொண்ட மேதாவிகள் இவர்கள்.

### நிச்சயமற்ற நிலை நோக்கி நகரும் நாட்டின் எதிர்காலம்

இறுதிப் போரின் பின்னராவது அரசின் நிலைப்பாட்டில் மாறுதல்கள் வருமென்ற எதிர்பார்ப்புக்கள் வீணாகிவிட்டன. இனவாதிகள் இதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்குத் தயாரில்லை என்பது தெளிவாகப் புரிந்து விட்டது. இந்த நிலையில் இந்த நாட்டின் எதிர்காலமே நிச்சயமற்றதொரு நிலையை நோக்கி நகர ஆரம்பித்துள்ளது.

தற்போதைய ஜனாதிபதி தொடர்பாக ஆரம்பத்தில் சிறுபான்மை மக்கள் அதிகளவு நம்பிக்கை கொண்டிருந்தனர். மனித உரிமைகள் தொடர்பான செயற்பாட்டாளர் என்ற வகையில் அவருக்குப் பெருமதிப்பும் இருந்தது. மேலும் பண்டாரநாயக்க, ஜெயவர்த்தன குடும்பங்களைச் சாராததொரு தலைவர் என்ற வகையிலும் பெருமளவு மக்கள் அவரால் ஈர்க்கப்பட்டனர். ஆனால் இன்று அந்த நிலை குறைந்த அளவிலேயே காணப்படுவதாக அரசியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### நல்ல தலைமைகள் தென்பகுதியில் உருவாக வேண்டும்

என்னதான் இடர்கள் வந்தாலும், பதவியில் அமர்வதை நோக்கமாகக் கொள்ளாது இந்த நாட்டில் வாழுகின்ற மக்கள் அனைவருக்கும் சம உரிமை உண்டென முழங்கக்கூடிய துணிவுள்ள தலைவர்கள் தென்பகுதியில் உருவாக வேண்டும். ஆரம்பத்தில் மக்கள் இதனை நிராகரிக்கலாம். ஆனால் காலப்போக்கில் உண்மை நிலையை அவர்கள் உணரும் போது ஏற்றுக்கொள்ளவே செய்வார்கள். ஏனென்றால், மேன்மேலும் இன மோதல்களால் ஏற்படும் துன்பங்களை அனுபவிப்பதற்கு அவர்கள் தயாரில்லை. மக்களைக் குழப்புவதே இந்த அரசியல்வாதிகள்தான் என்பதில் சந்தேகமே இல்லை. மக்களை நல்வழிப்படுத்துவதும் அரசியலின் ஓர் அங்கம் என்பதை இவர்கள் மறந்து விடுகின்றார்கள்.

பண்டாரநாயக்கா என்றாலே அவர் மீது தமிழ் மக்கள் ஒருபோதுமே நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கவில்லை. ஏனென்றால் தமிழ் மக்களுக்கு அவர் நல்லது எதையும் செய்யவில்லை. இனவாதத்தை ஆரம்பித்த பிதாமகரான அவர் தென்பகுதி பெரும்பான்மை மக்களால் இன்றுவரை மறக்கப்படாது போற்றப்படுவதில் விந்தையொன்றும் இல்லை. ஏனெனில் அவர்களது மனநிலை அவ்வாறு உருவாக்கப்பட்டுவிட்டது.

எனவே இனியாவது தென்பகுதித் தலைவர்கள் பண்டாரநாயக்கா ஆரம்பித்து வைத்த பாதையில் பயணம் செய்வதை விடுத்துப் புதியதொரு இன நல்லுறவை வளர்க்கும் பாதையில் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். இது போன்றதொரு சிந்தனை அவர்களது மனங்களில் முளைவிட ஆரம்பித்தாலே போதும், இந்த நாடு பிணக்குகளும், பேதங்களும் இல்லாததொரு சொர்க்கபூமியாக மாறிவிடும்.

# இந்திய மண்ணிலதான் என்ர உயிர் போகவேணும்

## முதல் முறையாக மனம் திறக்கும் முருகனின் தாயார்!

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை கைதியாக இருப்பவர் முருகன். இருபத்து மூன்று வருடங்களாக தனது மகனைப் பற்றி வாய் திறக்காத முருகனின் தாயார் சோமணி தற்போது மனம் விட்டுப் பேசியிருக்கிறார். தமிழக சஞ்சிகையொன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் இருந்து.

***இலங்கையில் எங்கே வசித்தீர்கள்? அங்கே எப்படி இருந்தீர்கள்?***

யாழ்ப்பாணத்தில் இருந்து முப்பது கிலோமீற்றர் தூரம் இருக்கிற இத்தாவில், பளை, தான் எங்கட ஊர். நல்ல உழைப்பாளி குடும்பம். விவசாய காணியெல்லாம் இருந்தது. என்னோட கணவர் நல்ல முருக பக்தர். அங்கிருக்கிற கோயிலில் பூசாரியா வேலை செய்தவர். எனக்கு ஐந்து ஆம்பிள பிள்ளைகள். நான்கு பொம்பள பிள்ளைகள். மூத்தவ மகள். இரண்டாவதா பிறந்த மகன் போராளியா இயக்கத்துக்கு போயிற்றார். மூன்றாவதாக முருகன் பிறந்தவர்.

***போராளியாகச் சென்ற மூத்த மகன் எங்கு இருக்கிறார்?***

போராளியாக இருந்த என்ர மகன் போர் நிறுத்த காலகட்டத்தில் இயக்க வேலை விபத்தில் மாவீரராகிட்டார். அப்போ இயக்கத்துக்கும் சிங்கள படைகளுக்கும் சண்டையிருந்தது. இந்தியப் படைகள் வந்தபின்னாடி எங்கட சனத்த அப்போ ஒன்றும் செய்யேல்ல. நல்லாத்தான் இருந்தார்கள் . மகன் சாவடைந்தபோது அந்த உடலை வீட்டுக்கு கொண்டு வந்தார்கள். மக்கள் எல்லாம் மரியாதை செலுத்தினார்கள். அப்போது இந்தியப் படைகளும் வந்து நின்று பார்த்துட்டு துயரம் விசாரித்து விட்டு போய்விட்டார்கள். அந்த நேரம் எங்கட வீட்டுல இந்திராகாந்தி படம், ராஜீவ்காந்தி படம் மாட்டி வச்சிருந்தனாங்கள். அந்தப் படம் பள்ளிகூட போட்டியில முருகன் வரைந்து வாத்தியாரிடம் நூறு ரூபாய் பரிசு வாங்கியது. அதைத்தான் ப்ரேம் போட்டு சுவற்றில் தூக்கியிருந்தோம். இந்தியப்படையினர் அதையும் விசாரித்தார்கள்.

அதன் பின்பு ஒரு தடவை இந்தியப் படைகள் வந்தார்கள். அப்போது மாவீரராகிப்போன எங்கட பெரிய மகன் படத்தையும் இந்திராகாந்தி படத்துக்குப் பக்கத்தில மாட்டி வைத்திருந்தம். பார்த்துட்டு ஒன்றுமே சொல்லவில்லை.

***இந்தியப்படைகள் அங்கிருக்கும் தமிழர்களுக்கு எதிராகத் திரும்பியதா? உங்களுக்கு எதிராக ஏதாவது செய்தார்களா?***

இந்தியப் படைகளுக்கும் இயக்கத்துக்கும் பிரச்சினையாகிப்போன பிறகு நிலைமை மோசமாய் போய்விட்டது. யாரை நம்பினமோ அவங்களே இப்படியாகி நிக்கிறப்போ என்னெண்டு சொல்றது. அந்தச் சமயத்தில நாங்க மாவீரராகிப்போன எங்கட மகனின் படத்தை கழட்டி மண்ணுக்குள்ள புதைச்சிட்டம். அப்போதும் ஒரு தடவை இந்தியப் படையினர் வந்தனர். சுவரைப் பார்த்து இந்திராகாந்தி படமிருக்கு. ராஜீவ்காந்தி படமிருக்கு. உங்கட மகன் படம் எங்கே என்று கேட்டார்கள். பயத்தில இப்படி எடுத்து மறைச்சுட்டோம்என்று சொன்னோம். அப்படி செய்யக்கூடாது. என்னயிருந்தாலும் அவர் ஒரு போராளி. மாவீரர் படத்தை அப்படி வைக்கக்கூடாது. எங்க இருக்கிறது என்று கேட்டார்கள். மண்ணுக்குள்ள இருந்து எடுத்துக் கொடுத்தோம். அதை இந்தியப்படையினர் வாங்கித் துடைச்சு ஒழுங்குபடுத்தி சுவரில் மாட்டிப் போட்டு போனார்கள்.

***சரி, முருகன் எப்போது இயக்கத்துக்குப் போனார். எப்போது இந்தியாவுக்கு வந்தார். நினைவிருக்கிறதா?***

ஓம். நன்றாக நினைவிருக்கு . என்னுடைய பெரிய மகன் இறந்த பிறகுதான் முருகன் இயக்கத்துக்குப் போனவர். இப்பதான் ஒரு பிள்ளையக் கொடுத்திட்டோம். இன்னொரு பிள்ளையையும் கொடுக்கணுமா. என்னாகுமோ என்ற தவிப்பு ஒருபுறம். மறுபுறம் நாட்டுக்காக இதையெல்லாம் செய்யத்தான் வேணும் என்ற நினைப்பு. தவியாய் தவிப்போம். அப்பதான் ஒரு தடவ வீட்டுக்கு முருகன் வந்தார். எங்காவது வெளிநாட்டுக்குப் போ என்றோம். பார்க்கலாம் என்று சொல்லி விட்டுப் போனவர். பிறகு கனநாள் கழிச்சு வெளிநாடு போறேன் என்று சொன்னார். அப்பத்தான் இங்க தமிழ்நாட்டுக்கு வந்தார்.



நளினியுடன்
மகள் அரித்திரா

***அதன் பிறகு என்ன நடந்தது? முருகன் என்ன ஆனார் என்ற விவரம் எல்லாம் உங்களுக்கு எப்போது தெரியவந்தது?***

ஒன்றுமே புரிய இல்லை. எந்தத் தகவலுமில்லை. இப்படி நடந்துபோச்சு என்று எனக்கு கன காலம் கழித்துத்தான் தெரியவந்தது. என் பிள்ளைகளுக்கு தெரிந்திருக்கும். அம்மா கஷ்டப்படுவா என்று மறைத்திருக்கலாம். பேப்பரில வந்த படத்தைக் காட்டி உன்ர மகன் தானே என்று கேட்டார்கள். எனக்குக் குழப்பம். அப்போது மொட்டையடிச்ச தலையோட இருந்த வர். பெயரும் வேற முருகன் என்று இருக்கு. அங்க அவரோட உண்மையான பெயர் சிறீகரன். இதனாலயும் குழப்பம். மனசு கிடந்து அடிச்சுக்கொண்டது.

***பிறகு எப்போது இங்கே வந்தீர்கள். எத்தனை ஆண்டுகள் கழித்து முருகனைப் பார்த்தீர்கள்?***

ஒன்றரை வருஷம் கழிச்சு, என்ர மகன்ர முகத்தைப் பார்க்க வேணுமென்று நான் பழைய பேப்பரை எல்லாம் கிளறிப் பார்த்துட்டு இருந்தபோது , ஒரு கடிதாசி கிடந்தது. எடுத்துப் பார்த்தா என்ர மகன் முருகன் எழுதினதுதான். அம்மா, எனக்கொரு மகள் பிறந்திருக்கா. நீங்க வந்து அழைச்சிட்டுபோய் வளருங்கோ. எனக்கு என்னவும் நடக்கலாம் என்றபடி எழுதியிருந்தது. ஓ....எனக்கு பெரு அதிர்ச்சி எப்ப கல்யாணம் நடந்தது. எப்போ குழந்தை பிறந்தது என்று தவிச்சுப் போயிற்றன். எப்படியாவது போய்ப் பார்க்கலாமென் றால் முடியேல்ல. பிள்ளைகள் பயத்தில விடேல்ல. பணமும் தரேல்ல.கடைசியா நான் நாள் கணக்கா தேங்காய் மட்டை சேகரித்து, அதை வித்துப்போட்டு பணத்தை சேர்த்து வச்சுத்தான் இங்க வந்து சேர்ந்தன். என்னடா நடந்தது என்று கேட்டன். கர்ப்பிணிப் பெண்ணை அப்படியான இடத்துக்கு அனுப்ப யாரும் சம்மதிப்பாங்களாம்மா என்று நடந்ததைச் சொன்னவர். எனக்கு என் மகன் செய்திருப்பான் என்று நம்ப இல்ல. எங்கட நேரம். இப்படியாகிப்போச்சு.

***உங்க மருமகளையும், பேத்தி அரித்திராவையும் எங்கு சந்தித்தீர்கள்?***

என்ர மருமகள் நளினிய பூந்தமல்லி சிறையிலதான் பாத்தன். என்னெண்டு சொல்ல. கடைசியா அவதான் எனக்கு ஆறுதல் சொன்னா. அப்ப தான் பேத்தி எங்க இருக்கிறா என்று கேட்டன். கோயமுத்தூர்ல இருக்கிறா .. எனக்கு ஒன்றும் புரிய இல்ல. என்ன ஆச்சு தென்றால் குழந்தை அரித்திரா உள்ள மிகவும் வும் பயந்தபடியே இருந்திருக்கா. இதுக்கு மேலயும் உள்ளுக்க வச்சிருக்கக்கூடாதென்று, கோயமுத்தூருக்கு அனுப்பியிருக்கிறார்கள் . அதே வழக்கில கூட இருந்த சக சிறைவாசி ஒருவர். அவரின் அம்மாவிடம் அனுப்பி வளர்க்க ஒப்படைத்திருந்தார்கள் . பிறகு நான் தேடிப் போய் அலைந்து தான் என்ர பேத்தியப் பார்த்தன். பையனமாதிரியே இருந்தா. கூட்டின்று வந்தன்.

***1998ஆம் ஆண்டு, முதன் முறையாகத் தீர்ப்பு வந்தபோது விடுதலையாகி விடுவார்கள் என்ற எண்ணத்தில் இருந்தீர்களா?***

அப்போது நான் இங்கதான் சென்னையில் இருந்தேன்.கொஞ்சப் பேரைத் தவிர்த்து மற்றவர்கள் விடுதலையாகி விடுவார்கள் . இவர்கள் இரண்டு பேரில் ஒருத்தர் விடுதலையா விடுவினும் என்று நம்பியிருந்தோம். அன்று நிறையப் பேருக்குச் சமைச்சு வச்சிருந்தோம். கடைசியாப் பார்த்தா எல்லாருக்கும் தூக்கு தண்டனைன்னு சொல்லிற்றினம் . சத்தம் போட்டு அழமுடியேல்ல. இங்க வாடக வீட்டுல இருந்தம். நான்தான் முருகனின் அம்மா என்று யாருக்கும் தெரியாது. குழந்தை அரித்திராவுக்கு ஏன் அழுகிறோம் என்று தெரியாது. ஆனா அவளும் அழுதா. அதை என்னென்டு சொல்றது.

***சரி. உங்கள் மகன் முருகனை சந்திக்கும் போதெல்லாம் என்ன உணர்வீர்கள்? பட்ட கஷ்டமெல்லாம் எப்படி?***

என்ர மகனைப் பார்க்கப் போக வழி தெரியாமப் போய் எங்கெங்கோ எல்லாம் அலைஞ்சிருக்கிறன். ஜெயில் வாசலிலேயே ரெண்டு மூன்று நாள் படுத்திருக்கிறன். அப்பவும் அனுமதி கிடைக்காது. பிறகுதான் பார்க்க விடுவாங்கள். ஒவ்வொரு தடவையும் பார்க்கும் போதும், வெளிய வரும்போதும் என்ர பிள்ள உயிரோட வருவானா. கிடைப்பானா என்று தான் வருத்தமா இருக்கும். இங்கே போகாத கோயில் இல்ல. வேண்டாத சாமி இல்ல.

கடைசியா ஒரு ஆசை. என்னோட உயிர் எங்கேயும் போகக்கூடாது. இந்த மண்ணு லதான் உயிர் போகவேணும். ஏனென்றால் அப்ப தான் என் மகன் முருகன் வந்து எனக்கு இறுதிக் கிரியை செய்ய முடியும். மற்ற இடமென்றால் முடியாது. என்னோட மற்றப் பிள்ளைகள் எல்லாம் எங்கிருந்தாலும் இங்க வந்திருவார்கள். முருகனால அப்படி வெளியில எங்கும் வர முடியாது. அதனால் என் உயிர் இங்கதான் இந்தியாவுக்குள்ள போக வேணுமென்று வேண்டுறன் . வேற என்ன செய்ய முடியும்.

***உங்கள் மருமகள் நளினியைச் சந்திக்கும் போது என்ன பேசுவீர்கள்?***

அவ என்னுடைய மகளப்பா.. கொள்ளை ஆசை வச்சிருப்பா. ஒவ்வொரு முறையும் நளினிதான் எனக்கு ஆறுதல் சொல்லுவா. இப்போ பார்த்த போதும் அப்படித்தான். ஒன்றும் கவலைப் படாதியள். கெட்டது ஏதும் நடக்காது என்று நம்பிக்கையாச் சொன்னா. என்ன இருந்தாலும் மருமகளோட மனசுல என்ன இருக்குமெண்டு தெரியாதா?.. ஒன்பது பிள்ளைய பெற்றவளாயிற்றே. தான் பெற்ற குழந்தைய பார்க்க முடியேல்ல. மடியில கிடத்திக் கொஞ்ச முடியவில்லை என்று எவ்வளவு சுமை இருக்கும் நளினியிடம் . அது சொல்லி மாளாது.

இந்தமுறை சந்திச்சப்போ மகள் அரித்திராவோட போட்டோவ எடுத்து வந்தீர்களா என்று கேட்டா. நான் வழக்கம்போல இல்லேம்மா. அதுல நிறைய பிரச்சினை இருக்கு. அவளோட படம் எப்படியாகிலும் வெளியில வந்தா பிள்ளையோட படிப்பு போய்விடும். அவ மனமும் வருத்தமாயிடுமென்று சமாதானம் சொன்னன். அந்த வலைக் கம்பியிலேயே தலைய அடிச்சிக்கிட்டு நளினி அழுதவா. நான் என்ன செய்ய முடியும். நளினி ரொம்பவும் அழுதா.

***இப்போது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள். இன்றைய நிலையில் எப்படியான பிரச்சினைகளை எதிர்கொண்டு நிற்கிறீர்கள்?***

ஒரு பிரச்சனையுமில்லேப்பா. மிகவும் கஷ்டப்பட்டுதான் இருந்தோம். இப்போ அந்தக் கஷ்டம் குறைஞ்சிருக்கு. முருகனுக்கு அடுத்தவர் சுவிஸ்க்கு போனார். அப்படியே ஒவ்வொருத்தராக ஏழு பிள்ளைகளையும் வெளிநாட்டுக்கு கூப்பிட்டுட்டார் . கடுமையான உழைப்பு. அந்த குளிரில் நேரம் காலம் பார்க்காம உழைத்தார்கள் . இப்போ பரவாயில்ல. எல்லோருக்கும் கல்யாணம் ஆயிற்று . முருகனோட அப்பா, நான், அரித்திரா எல்லாம் ஒரு வீட்ல இருந்தோம். முருகன்ர அப்பா அந்த குளிரில் இருக்க முடியாது. கடைசிக் காலத்தில நான் என்னோட மண்'ணுலேயே கிடந்து போறன் என்று இத்தாவில். பளைக்கு சென்றுவிட்டார் . அங்க எங்கட குடும்பத்துக்கு முருகன் கோயில் இருக்கு. பூசாரியா இருந்து அங்கேயே தங்கி விட்டார். நான் வருஷம் ஒருக்கா வந்து பார்த்துட்டுப் போவன். இங்க வந்து முருகனையும் பார்த்துட்டு லண்டன் போவன்.



முருகனுடன்
மகள் அரித்திரா

***கடைசியா இப்போது 2011ஆம் ஆண்டு மூன்று பேரின் கருணை மனு நிராகரிக்கப்பட்டபோது. தூக்குத் தண்டனைக்கான நாள் குறிக்கப்பட்டபோது....?***

(கண்கள் கலங்கி குரல் தழுதழுக்கிறது.) என்னவென்று சொல்ல. அப்போ நாங்க எல்லாரும் லண்டனில்தான் இருந்தோம். உடனே வந்து போக விசா கிடைக்கவில்லை . நானும் என்னோட மனுஷனும், அரித்திராவும் லண்டனுக்கு வெளியே ஒரு ஊரில் இருந்தம். லண்டனுக்குள் ரயிலில் வர பதின்மூன்று மணிநேரமாகும். எங்கட ஏழு பிள்ளைகளோட கவலையும் கூடிப் போச்சு. பத்து பதினைஞ்சு நாள் யாரும் யார் வீட்லேயும் சமைக்க இல்ல. சாப்பிட இல்ல.

நாங்க இருக்கிற பகுதியில எந்தக் கோயிலும் இல்ல. லண்டனுக்குள்ளதான் ஒரு பெருமாள் கோயில் இருக்கு. நாங்க மூன்று பேரும் புறப்பட்டு அங்க போயிட்டோம். இரவில் உறவுக்காரங்க வீட்டில் இருப்போம். பகல் முழுக்க அந்த கோயிலில் கிடப்போம். -சாமி தான் துணை. சாமிதான் விடிவென்று வேண்டிக்கொண்டு கிடப்போம். ... ஒரு நாளா, ரெண்டு மாதமா, 23 வருஷமப்பா... நான் அழுத கண்ணீரு ஆற்றை நிரப்பியிருக்குமே.

என்னெண்டு சொல்ல.. இலங்கையிலும் இருக்க முடிய இல்ல. இங்கால வெளி தேசத்திலையும் நிற்க முடியேல்ல. இங்க வந்து நிக்கலாமென்றால் அதுவுமில்ல. அங்கொரு பிள்ளை, இங்கொரு பிள்ளையெண்டு ஓடி ஓடி நான் பட்ட கஷ்டம் அந்தச் சாமிக்குதான் தெரியும். அழுதழுது கண்ணே போயிடுச்சு. லண்டன் பெருமாள் கோயில்ல கிடந்தப்போ பேத்தி அரித்திராதான் எனக்கு ஆறுதல் சொல்லுவா. அழவே மாட்டா. தைரியமா இருப்பா . ஆனா பட்டென்று காணாமப் போயிடுவா.. பார்த்தா கோயிலில் ஒரு பக்கமா இருந்து வருவா.

கண்ணெல்லாம் சிவந்து போயிருக்கும். வீங்கியிருக்கும். மனசுதீர தனியா அழுதுட்டு முகத்தை கழுவி வந்து நிக்கிறா என்று தெரியும். என்னவெண்டு கேட்க ஏலும். அந்த பிள்ளையோட நிலமைய நினைச்சு பார்க்க ஏலாது .. மனசு உடைஞ்சு போவேன்.

***உங்களுக்கென்று ஒரு விருப்பம், அதாவது ஆசை இருக்குமில்லையா. என்ன மாதிரியான விருப்பத்தை வைத்திருக்கிறீர்கள். நினைக்கிறீர்கள்.?***

எனக்கொரு நம்பிக்கை இருக்கு அய்யா. என்ர பிள்ளைகள் அறிவு, சாந்தன், முருகன் மூன்று பேருக்கும் நல்லது நடக்கும். மூன்று பேரோட தூக்குத் தண்டனையும் ரத்தாகும். எல்லாத் தலைவர்களும் மனசு வைத்தால் வெளியில வந்திருவார்கள் . அப்போ எனக்கொரு ஆசை பாக்கியிருக்கு.. என்ர மற்ற பிள்ளைகளுக்கு எல்லாம் எந்தக் குறையும் வைக்கேல்ல. அதனால நளினிக்கும் முருகனுக்கும்... கோயில்ல வச்சி முறையா எல்லாரையும் அழைச்சு.. அவங்களுக்காக எவ்வளவோ பேரு, இங்க இந்த மண்ணுல கஷ்டப்பட்டிருக்காங்க. பாடு பட்டிருக்காங்க. அப்படி எல்லாரையும் அழைத்து ஒரு கல்யாணத்தை செய்து வைக்கவேணும் . பிறகு கண்ண மூடினாலும் பரவாயில்ல..

***இங்குள்ளவர்களுக்கு கடைசியா என்ன சொல்ல வருகிறீர்கள்? என்ன கருத்தை வைத்திருக்கிறீர்கள்?***

நான் என்னய்யா சொல்ல முடியும். காஞ்சிபுரம் போய் செங்கொடியோட இடத்தைப் பார்த்து கும்பிட்டு வந்திருக்கேன். லண்டனில் இருந்து மற்ற பிள்ளைகள் வந்தாலும் அங்க போய் கும்பிட்டுதான் திரும்புவார்கள். எங்கள் வீட்டு பூசை அறையில், எங்களின் குலதெய்வமாக செங்கொடியின் படமும் இருக்கு. இந்த இடத்தில எத்தனை பேர் இப்படித் தியாகம் செய்து அவர்களுக்காக பாடுபட்டிருக்கினம். எத்தனை பேர் சிறைபட்டிருக்கினம். எத்தனை பேர் கொடுமைய சந்திச்சிருக்கினம். (கண்கள் கலங்கி நிற்கிறது) யாரை மறக்க முடியும். யாரை விடமுடியும். அத்தனை பேரையும் நான் மனசால கும்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறன் .



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. மாலையிலிருந்து தடைகள் நீங்கும்.



**இடபம்**: பழைய பிரச்சினைகளுக்கு சுமுகத் தீர்வு காண்பது நல்லது. திடீர்ப் பயணங்களால் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். எதிலும் நிதானித்துச் செயற்படுங்கள்.



**மிதுனம்**: மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். காணாமல்போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்களால் புதிய அனுபவம் உண்டாகும்.



**கடகம்**: புதிதாகச் சில முடிவுகள் எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். உதவி கேட்டு வருபவர்களுக்கு உங்களாலானவற்றைச் செய்து கொடுப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் கோரிக்கையை ஏற்பர்.



**சிங்கம்**: கோபத்தைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். நேர்மறை எண்ணங்கள் வரக்கூடும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்



**கன்னி**: உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகு முறையை மாற்றுங்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள்.



**துலாம்**: புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். புதிய அலுவல்களைத் தொடங்குவதானால் முன்எச்சரிக்கையுடன் செயற்படப் பாருங்கள்.



**விருச்சிகம்**: கனிவாகப் பேசிக் காரியம் சாதிப்பீர்கள். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமடைவீர்கள்.



**தனுசு**: புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும். நட்புவழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.



**மகரம்**: எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். வெளியூர்ப் பயணங்களால் மகிழ்ச்சி கிடைக்கும். புதிய வேலை அமையும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும்.



**கும்பம்**: பூர்வீகச் சொத்துப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். உங்களைத் தவறாக நினைத்துக் கொண்டிருந்தவர்களின் மனசு மாறும். உறவுகள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.



**மீனம்**: சோர்வு நீங்கித் துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

## நாளை

**தை-27 ஞாயிற்றுக்கிழமை | 09.02.2014**

திதி: தசமி மு.இ.08.40 வரை
நட்சத்திரம்: ரோகிணி
பி.ப.02.04 வரை

சுபநேரம்: 09.35-11.05 வரை
இராகுகாலம்:.05.05-06.35 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### முதற்படிகள்

பக்தியைப் பற்றிக் குறிப்பிட்ட ஆசிரியர்கள் ஆண்டவனிடம் கொள்ளும் ஆழ்ந்த அன்புதான் பக்தி என்று விளக்குகின்றனர். எதற்காக ஒருவன் கடவுளை நேசிக்க வேண்டும் என்ற கேள்விக்குப் பதில் கண்டு பிடித்தாக வேண்டும். இதை நாம் அறிந்து கொள்ளாத வரையில், இந்த விடயத்தைப் பற்றி எதுவுமே புரிந்து கொள்ள முடியாது. ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்ட இரண்டு வாழ்க்கை இலட்சியங்கள் உள்ளன. எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாயினும், சமயப் பற்றுள்ள நாம் எல்லோரும் அறிந்த ஓர் உண்மை, மனிதன் உடல் மட்டுமன்று, ஆன்மாவும் கூட என்பதுதான். ஆனால் மானிட வாழ்க்கையின் குறிக்கோள் என்ன என்பது பற்றி மிகுந்த கருத்து வேறுபாடுகள் உள்ளன. மேலை நாட்டு மக்கள், பொதுவாக உடலைப் பற்றியதில் மிகுந்த அக்கறை காட்டினார்கள். இந்தியாவிலோ, பக்தியைப் பற்றிக் குறிப்பிடும் ஆசிரியர்கள் மனிதனது ஆன்மாவுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். இந்த வேறுபாடு கீழ்த் திசைக்கும் மேல் திசைக்கும் இயல்பாய் அமைந்துள்ளது போல் தோன்றுகின்றது. அன்றாடப் பேச்சு வார்த்தைகளிலும் இதையே நாம் காண்கிறோம். இங்கிலாந்தில் மரணத்தைக் குறிப்பிடும் போது, அவன் ஆவியைத் துறக்கிறான் என்று கூறுகிறார்கள். ஆனால் இந்தியாவிலோ, அவன் உடலைத் துறந்து விடுகிறான் என்று குறிப்பிடுகின்றனர். முதலில் கூறியதின் கருத்தாவது மனிதன் உடலில் ஆவி உள்ளது என்பது பொருள். மற்றது மனிதன் ஆன்மா; அவ்வான்மாவுக்கு உடல் உண்டு என்பதாகும். இதிலிருந்து சிக்கலான பிரச்சினைகள் பல எழுகின்றன. மனிதன் ஓர் உடல்; அதில் ஆவி உள்ளது என்ற கொள்கையினர் உடலுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பது தெரிகிறது. மனிதன் ஏன் வாழ்கிறான் என்று அவர்களைக் கேட்டால், உடைமைகள், சொத்து, உறவு முதலியவற்றால் இன்பம் பெறுவதற்கே என்று அவர்கள் பதில் கூறுவர்.

## தந்திர குணம் கொண்ட எலிமான்



எலிமானின் தோற்றம்

ஆபிரிக்காவின் ஈரப்பதமான காடுகளில் டிராகுலிடே என்னும் சிறிய வகை மான்கள் காணப்படுகின்றன.
இவற்றுக்கு எலிமான் என்ற பெயரும் உண்டு, ஓர் எலியின் தோற்றத்தில் காணப்படுவதால் இந்தப் பெயரைப் பெற்றன.
ஓர் அடி பத்து அங்குல உயரத்துக்கு வளரும் இந்த மான்கள், வெளிர் மஞ்சள் நிறத்தில் காணப்படும். உடம்பில் புள்ளிகள் இருக்கும்.
இவைகளின் விசேட குணம் என்னவென்றால், சிங்கம், புலிகள் துரத்தினால் நீருக்குள் பாய்ந்து அதிவேகமாக நீந்தித் தப்பிச்சென்று விடுகின்றன.
நீர் நிலைகள் இல்லாத இடங்களில் மாட்டிக் கொண்டால், சிங்கம், புலிகளால் பிடிக்க முடியாத மிக உயரமான கிளைகளை, தம்முடைய பற்களால் பற்றிப் பிடித்துக் கொண்டு நீண்டநேரம் தொங்கிக் கொண்டே தப்பித்து விடுகின்றன.
அதுமட்டுமல்லாமல் தம்முடைய குட்டிகளை பாறைகளுக்கு அடியில் மறைத்து வைக்கும் தந்திர குணமும் கொண்டவை.
சுமத்ரா தீவுகள், இந்தியா உள்ளிட்ட சில தெற்காசிய நாடுகளிலும் இவ்வகை மான்கள் காணப்படுகின்றன.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | | 6 | 8 | | 1 |
| 7 | 5 | 4 | 1 | | | 6 | | |
| | | 6 | 9 | | 2 | | | |
| 2 | | | | 8 | | 5 | 4 | |
| | 6 | 7 | | | | 3 | 1 | |
| | 8 | 5 | | 1 | | | | 6 |
| | | | 8 | | 1 | 9 | | |
| | | 9 | | | 7 | 4 | 8 | 5 |
| 6 | | 8 | 5 | | | | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 6 | 8 | 3 | 7 | 9 | 2 | 1 |
| 9 | 7 | 3 | 5 | 1 | 2 | 4 | 8 | 6 |
| 2 | 1 | 8 | 6 | 9 | 4 | 3 | 7 | 5 |
| 6 | 3 | 4 | 2 | 5 | 8 | 7 | 1 | 9 |
| 7 | 8 | 5 | 9 | 6 | 1 | 2 | 3 | 4 |
| 1 | 9 | 2 | 4 | 7 | 3 | 5 | 6 | 4 |
| 8 | 2 | 9 | 7 | 4 | 6 | 1 | 5 | 3 |
| 5 | 6 | 1 | 3 | 2 | 9 | 8 | 4 | 7 |
| 3 | 4 | 1 | 1 | 8 | 5 | 6 | 9 | 2 |

# தலைக்கு வெளியே மூளையுடன் பிறந்த குழந்தை



பிரிட்டனில் தலைக்கு வெளியே மூளையுடன் பிறந்த பெண் குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.
பிரிட்டனைச் சேர்ந்த ஜெஸ்ஸிகா வில்லியம்ஸ்- ஆரன் மார்டின் தம்பதி களின் குழந்தையே தலைக்கு வெளியே மூளையுடன் பிறந்துள்ளது. இவர்களுக்கு ஏற்கெனவே ஆண் குழந்தை உள்ள நிலையில், இரண்டாவதாக ஜெஸ்ஸிகா கர்ப்பமடைந்தார்.
கர்ப்பமடைந்த 17ஆவது வாரத்தில், ஸ்கான் எடுத்துப் பார்த்த போது, குழந்தையின் தலைக்கு வெளியே மூளை வெளிவந்து, தோலினால் சூழப்பட்டு இருப்பது தெரியவந்தது. எனினும் தனது கருவைக் கலைக்க இயலாத ஜெஸ்ஸிகா, றோயல் விக்டோரியா இன்பர்மறி என்ற மருத்துவமனையின் ஆலோசகரை நாடியுள்ளார். இதனையடுத்து கடந்தாண்டு ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி, அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு தாயும், சேயும் பத்திரமாக காப்பாற்றப்பட்டனர். குழந்தைக்கு பெயித் மார்டின் என பெயரிட்டனர், பெயித் பிறந்த போது 6 செ.மீ-ஆக இருந்த மூளையின் சுற்றளவு, சிறிது சிறிதாக பருமனடையத் தொடங்கியது.
எனவே கடந்த 10ஆம் திகதி மீண்டும் குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை செய்து, தலைக்கு வெளியே இருந்த மூளையை மருத்துவர்கள் சரிசெய்தனர்.
தற்போது குழந்தை நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாக குழந்தையின் பெற்றோர் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர்.

# ரஷ்யாவில் சாவு வீதம் அதிகரிப்பு


## ‘வொட்கா’ மதுவினால்



ரஷ்யாவில் அகாலச் சாவுகள் அதிகரித்துள்ளன. பெருமளவிலான இத்தகைய அகாலச் சாவுகளுக்கு 'வொட்கா' மதுபானத்தை அதிகளவில் அருந்துவதே காரணமென பரிசோதனை ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.
லன்செற் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டஇந்தப் பரிசோதனையின் போது, ரஷ்யாவில் உள்ள ஆண்களில் நான்கில் ஒரு பங்கினர் 55 வயது பூர்த்தியாவதற்கு முன்னரே சாவைத் தழுவிக் கொள்வது தெரிய வந்துள்ளது.
இந்தச் சாவுகளில், பெருமளவானவைக்கு மதுசாரமே காரணமாக உள்ளமை தெரியவந்துள்ளது. மதுசாரம் சம்பந்தப்பட்ட இத்தகைய பெருமளவிலான சாவுகள் ஈரலில் நோய் அல்லது மதுசாரம் விஷமாவதன் காரணமாகவே இடம்பெறுகின்றன. சிலர் குடிபோதையில் விபத்துக்களுக்கு உள்ளாகுகின்றனர். மேலும் சிலர் குடிபோதையில் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டுக் கொள்வதாலும் உயிரிழப்புக்களுக்கு உள்ளாகி விடுகின்றனர். இந்த ஆய்வு தொடர்பாக 1,51,000 ரஷ்யர்களின் மதுபானம் அருந் தும் தன்மைகள் ஆராயப்பட்டதோடு, 10 ஆண்டுகள் காலமாக இது தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டன. இந்தப் பரிசோதனை நடத்தப்பட்ட காலகட்டத்துள் அதில் பங்கேற்றிருந்தோரில் 8,000 பேர் சாவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-22)




# வாய்ப் புண்ணுக்கு இயற்கை வைத்தியம்



தேன், சுத்தமான நெய் அல்லது கிளிசரின் ஆகியவற்றை வாய்ப்புண் உள்ள இடத்தில் தடவுவது பயன் தரும்.
வாழைப் பழத்தைத் தயிருடன் கலந்து, காலை உணவாக உட்கொண்டால், வாய்ப்புண் மூலம் ஏற்படும் எரிச்சல் அன்று முழுவதும் இருக்காது.
தக்காளிப் பழத்தைச் சிறு துண்டுகளாக்கி வாயில் போட்டு மென்று உண்பது வாய்ப்புண்ணை ஆற்றிவிடும்.
மிதமான சூடுள்ள நீரில் உப்பு மற்றும் எலுமிச்சைச் சாற்றைக் கலந்து கொப்பளிப்பதால் நல்ல பயன் அளிக்கும்.
மஞ்சள் தூளை நீரிட்டுக் கொதிக்க வைத்து, சிறிது ஆறிய பின் மிதமான சூட்டில் வாய் கொப்பளித்தால் பயன்கிடைக்கும்.
மாதுளம்பழத் தோலை நீரில் கொதிக்க வைத்து, வடிகட்டிய நீரைக் கொண்டு வாய் கொப்பளித்தால் வாய்ப்புண் எரிச்சல் மறையும்.



# உணவின்றித் தவிக்கும் பனிக் கரடிகள்




**வேட்டையாடுவதால் பனிக் கரடிகள் இனம் வேகமாகக் குறைவடைந்து வருவதாக சில ஆண்டுகளுக்கு முன்பு சர்ச்சை எழுந்தது. தற்போது உணவுப் பழக்கம் மாறுவதால் பனிக் கரடிகளுக்கு ஆபத்து அதிகரிக்குமோ என்று ஆய்வறிக் கையில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பனிக் கரடிக்கு இது போதாத காலம். ஆமாம், ஆர்ட்டிக் துருவப் பிரதேசத்தில் மட்டுமே வாழ்ந்து வரும் இந்த விலங்குகள் உணவு கிடைக்காமல் திண்டாடி வருவதாக எச்சரிக்கிறது அமெரிக்க இயற்கை வரலாற்று அருங்காட்சியகம்.
இந்த அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட ஆய்வறிக்கையில், அந்த விலங்குகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து விளக்கப்பட்டிருக்கிறது.
புவி வெப்பமடைதல் பிரச்சினை காரணமாக ஆர்ட்டிக் பனிப்பாறைகள் வேகமாக உருகுவது முக்கியப் பிரச்சினையாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் பனிப்பாறைகள் உருகி நீர்மட்டம் உயர்ந்தது, பிறகு புதுத் தண்ணீர் பனிப்பாறையாக உறைந்ததால் பனிக் கரடிகளுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகப் பனிக் கரடிகள் உணவின்றி மடியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினை ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்துவருவதாக ஆய்வறிக்கையில் தகவல் வெளியாகியுள்ளது.
குறிப்பாக, கனடாவை ஒட்டியுள்ள ஆர்ட்டிக் மேற்கு ஹட்சன் விரிகுடாவில் வாழும் பனிக் கரடிகள் தங்கள் உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. பனிக் கரடிகளின் முக்கிய உணவு கடல் சிங்கம் (சீல்). ஆனால், சீல்கள் வேட்டையாடப்பட்டு எஞ்சிய மாமிசம் மட்டுமே பனிக் கரடிகளுக்குக் கிடைக்கிறது. இதனால், ஆர்ட்டிக் பகுதிகளில் வாழும் மான்கள், பனி வாத்துகள் ஆகியவற்றைத் தற்போது அவை உண்பதாக ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
ஏற்கனவே அருகி வரும் இனமாகவும், பாதுகாக்கப்பட வேண்டிய இனமாகவும் பனிக் கரடிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. புவி வெப்ப மடைதல் காரணமாகப் பனிப் பிரதேசங்களில் மாறிமாறி ஏற்படும் பருவநிலை மாற்றம் காரணமாக, இவற்றுக்கு ஆபத்து மேலும் அதிகரித்துள்ளது. ஏற்கனவே வேட்டையாடுவதால் பனிக் கரடிகள் இனம் வேகமாகக் குறைந்து வருவதாக சில ஆண்டுகளுக்கு முன்பு சர்ச்சை எழுந்தது. தற்போது உணவுப் பழக்கம் மாறுவதால் பனிக் கரடிகளுக்கு ஆபத்து அதிகரிக்குமோ என்று ஆய்வறிக்கையில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதத்தில் கோடைகாலம் தொடங்கும் என்பதால் இந்தப் பிரச்சினை மோசமடை யும் என்றும் அமெரிக்க விஞ்ஞானி கள் எச்சரித்துள்ளனர். வேட்டையாடுதல் மற்றும் புவி வெப்பமடைதல் பிரச்சினைகளில் இருந்து பனிக் கரடிகளைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சர்வதேச இயற்கை வளம், இயற்கை பாதுகாப்பு ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

# மரண அறிவித்தல்

## கந்தையா நடராஜா (சிவபாதம்)

(முன்னாள் பொறியியலாளர் இலங்கை மின்சாரசபை, உரிமையாளர், தாட்சாயினி மின் உபகரண நிலையம், அச்சுவேலி)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், பத்தமேனி, அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நடராஜா 03.02.2014 திங்கட் கிழமை அதிகாலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தையா தம்பதியரின் அன்புப் புதல்வனும், பத்தமேனியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு. திருமதி. சதாசிவம் தம்பதியரின் அருமை மருமகனும், சயந்திராவின் (பவா) அன்புக் கணவரும், ஏக புத்திரி தாட்சாயினியின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகராஜா, சண்முகம் மற்றும் சோமசுந்தரம், காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிறிதரன், சிறிகுகன், சிறிகரன், சிறி பவன், திருமதி சதாயினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குள இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**சயந்திரா- மனைவி,**
**தாட்சாயினி - மகள்.**

**பத்தமேனி,**
**அச்சுவேலி.**

(சி/11446)
(10.6.3)

# மெய்வன்மைப் போட்டி

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி பாலராணி சிறிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்ள வுள்ளார். (ந-35)

♦♦♦

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை கந்தசாமி ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி பிரதா கிரிதரன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், ஜே/201 கிராம அலுவலர் சி.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

♦♦♦

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை அதிபர் என்.சுபாரட்ணசிங்கி தலைமையில் இடம்பெறவுள்ளன.
இதில் வலிகாமம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளரான எஸ்.தேவமனோகரன் முதன்மை விருந்தினராகவும், சங்கானைக் கல்விக் கோட்டத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஏ.எஸ்.மரியாம் பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (க)

♦♦♦

இணுவில் இந்துக் கல்லூரியின் 150 ஆவது இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெறும் போட்டியில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் க.கனகசபாபதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-10)

♦♦♦

தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.
வித்தியாலய அதிபர் இரா ஸ்ரீநடராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரனும், சிறப்பு விருந்தினராக கிராம சேவையாளர் ப.குமரேசனும் கலந்து கொள்வர். (ந-400)

♦♦♦

புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய ஆங்கில பாட உதவிகல்விப்பணிப்பாளர் ஐ.செல்வராசா கலந்து கொள் வார். (ந)

# நூல் வெளியீடு

இந்து சமய பண்பாட்டில், பலி என்ற கு.கோபிராஜ் எழுதிய நூலின் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கந்தர்மடம் இந்து சமய பேரவையில் நடைபெறவுள்ளது.
யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணஐயர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள ஓய்வு நிலைப் பணிப்பாளர் சிவ மகாலிங்கம், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்வார். (ந)

# கும்பாபிஷேகம்

மிருசுவில் கோவிற்குளம் அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணிக்கு நடைபெறவுள்ளது.
கும்பாபிஷேகத்தை பிரதம குரு சிவஸ்ரீ சிதம்பர இந்திரராஜா குருக்கள் நடத்தி வைப்பர்.

♦♦♦

நவாலி சிந்தாமணி விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் என ஆலய பிரதம குரு வி.வெங்கடசுப்பிரமணியக் குருக்கள் அறிவித்துள்ளார். (ந-50)

♦♦♦

யாழ். அரியாலை நீர் நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.21 மணிக்கு நடைபெறவுள்ளது.

# மரண அறிவித்தல்



## திருமதி லோகேஸ்வரி நாகராசா

### (நர்மதா கோல்ட் சென்ரர் - கொழும்பு, யாழ்ப்பாணம்)

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், இல.11, கெலன்கடுவ பிளேஸ், 1st செப்பல் லேன், கொழும்பு - 6 ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரி நாகராசா 06-02-2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா நாகராசா (ஸ்தாபகர் - நர்மதா கோல்ட் சென்ரர் , இல.151, செட்டியார் தெரு, கொழும்பு -11, நர்மதா நகை மாடம், இல.169, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்)அன்பு மனைவியும் லோகேஸ்வரன் (ராசன்- ஜேர்மனி), ஸ்ரீரஞ்சனி (கலா- பிரான்ஸ்), இராஜேஸ்வரன்(சூட்டி- ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (கண்ணன், நர்மதா கோல்ட் சென்ரர்- கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயும், சரோஜினிதேவி(ஜேர்மனி), கந்தசாமி (பிரான்ஸ்), மல்லிகாராணி (ஜேர்மனி), சசிகலா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தவராசா மற்றும் கந்தசாமி (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான தர்மராஜா, தயாபரன், இரத்தினமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தங்கம்மா, செல்வநாயகி (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் சுபாஜினி(U.K) ஆகியோரின் மைத்துனியும், துசித்தா, சோபியா, கோபிகா(ஜேர்மனி), கஸ்தூரி, நர்மதா(பிரான்ஸ்), திவிசன், தர்சன், அயிசன்(ஜேர்மனி), கஜானனன் (கொழும்பு *சர்வதேச பாடசாலை), கீர்த்தனா (கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்), அருண்(கொழுப்பு சர்வதேச பாடசாலை)* ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.11, கெலன் கடுவ பிளேஸ், 1st செப்பல் லேன், கொழும்பு - 6 இல் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (08.02.2014) சனிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 09:00 மணி தொடக்கம் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 11:00 மணியளவில் தகனக்கிரியைக்காக பொறளை, கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(44469)(2.6.3)

**கண்ணன்:** (நர்மதா கோல்ட் சென்ரர்) 077 789 4566
**சூட்டி** : 0049 2403 504 883 (ஜேர்மனி)
**கலா** : 0033 1426 22786 (பிரான்ஸ்)

தகவல்:

**குடும்பத்தினர்.** (கொழும்பு)

## மன்னார் நகரசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின்
# வெற்றிடங்களை நிரப்புதல்- 2014

முகாமைத்துவசேவைகள் திணைக்களத்தினால் மன்னார் நகரசபைக்கு 01.01.2013 முதல் அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கமைவாக,வடமாகாணஉள்ளூராட்சிஅமைச்சுசெயலாளரின் NP/14/01/ET/ET5/SER.MIN/GEN/2013 இலக்க 20.01.2014 ஆம் திகதிய கடிதம், மற்றும் NP/14/01/ET5/SER.MIN/GEN/2013 சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாகக் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளில் காணப்படும் பதவிகளின் வெற்றிடங்களுக்கு உரிய ஆள்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைவாகப் பின்வரும் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி இல | பதவிகள் | தரம் | சம்பளஅளவு |
|---|---|---|---|
| 01 | காரியாலயகாரியசகாயர் (K.K.S.) | III | 11,730 – 10x120 - 10 x 130 - 10 x 145 - 12 x 160 – 17600 |
| 02 | இயந்திரவேலைக்காரர் (Meachanic III) | III | 12210 - 10x130 - 10x145 – 10x160 - 12x170 - 18,600 |
| 03 | இயந்திர இயக்குனர் (Machine Operator- III) | III | 12210 - 10x130 - 10x145 – 10x160 - 12x170 - 18,600 |
| 04 | நூலகபரிசாரகர் (Library Attendant -III) | III | 11,730 – 10x120 - 10x130 - 10x145 - 12x160 – 17600 |
| 05 | பராமரிப்பாளர் (Caretaker) | III | 11,730 – 10x120 - 10x130 - 10x145 - 12x160 – 17600 |
| 06 | சாரதி(Driver) | III | 12470 – 10x130 - 10x145 – 10x160 – 12x170 - 18860 |
| 07 | வேலைத் தொழிலாளி (Work Labourer-III) | III | 11,730 – 10x120 - 10x130 - 10x145 - 12x160 – 17600 |
| 08 | சுகாதாரத்தொழிலாளி (Health Labourer- III) | III | 11,730 – 10x120 - 10x130 - 10x145 - 12x160 – 17600 |
| 09 | சேமக்காலைதொழிலாளி (Cemetery Labourer- III) | III | 11,730 – 10x120 - 10x130 - 10x145 - 12x160 – 17600 |

**கல்வித்தகைமைகள்**

**காரியாலயகாரியசகாயர்/ இயந்திரஇயக்குனர்/ இயந்திரவேலைக்காரர்/ நூலகபரிசாரகர்/ சேமக்காலைதொழிலாளி/ வேலைத்தொழிலாளி/ சுகாதாரத்தொழிலாளி/ பராமரிப்பாளர்/சாரதி**

கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக, ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் உரிய தகைமையாகக் கருதப்படும். ஒரே தடவையில் 05 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

**சேவைநிபந்தனைகள்**

1. இப்பதவிநிரந்தரமானதும்,ஓய்வூதியத்திற்குஉரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள்,அநாதைகள் ஓய்வூதியத்திற்குசம்பளஅளவிற்கேற்பபங்களிப்புச்செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்றுவருடதகுதிகாண் நிலையில் குறித்தபதவியில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத்தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதியன்று 18வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.(ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாக மாட்டா.)
3. விண்ணப்பதாரி நன்நடத்தை உடையவராகவும், சிறந்த தேகஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி மன்னார் நகரசபை எல்லைக்குள் குறைந்தது தொடர்ச்சியாக 05 வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (இதனை உறுதிப்படுத்த கிராம சேவகர், பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி அல்லது வாக்காளர் பட்டியல் சமர்ப்பிக்கவேண்டும்.)

**சாரதிபதவிக்கான ஏனைய தகைமைகள்**

1. சாரதி பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட C, C1 தர வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை விண்ணப்ப இறுதித் திகதிக்கு மூன்று (3) வருடத்திற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
2. மோட்டார் வாகன சாரதியாக மூன்று வருட அனுபவத்திற்கான சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரி குறைந்தது 5 அடி 2 ½ அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி இரவு, பகல் எந்நேரமும் சேவையாற்றக் கூடிய சிறந்த உடல் உறுதியைக் கொண்டிருப்பதுடன், சிறந்த கண்பார்வையைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
5. பெருந்தெருவிதி முறை பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. விண்ணப்பதாரி கழிவகற்றும் உழவு இயந்திரம் உட்பட அனைத்து வாகனங்களும் செலுத்துதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. மன்னார் நகரசபையில் ரூபா 100/= செலுத்தி உரிய விண்ணப்பபடிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தித் தகைமைகளுக்கான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்துத் தனது கையெழுத்தில் பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.
2. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படல் வேண்டும்.
4. ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் தனித்தனியாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.
5. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 22.02.2014 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு **செயலாளர், நகரசபை மன்னார்** என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. ஆள்சேர்ப்பு விதிகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகுதியற்றவரென நியமனத்திற்கு முன்னரோ அல்லது நியமனத்தின் பின்னரோ இனங்காணப்படின் அல்லது முன்வைக்கப்பட்ட தகவலொன்று பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

**தெரிவுசெய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக் குழு ஒன்றினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுத் தெரிவு செய்யப்படுவதுடன், விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைய ஒழுகுதல் அவசியமாகும்.

- ❖ மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளில் பதவி இலக்கம் 06, 07, 08 ஆகிய இலக்க பதவிகளுக்கான உரிய கல்வித் தகைமைகளுடன் போதியவிண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதசந்தர்ப்பத்தில் தரம் 08 சித்திகவனத்தில் கொள்ளப்படும். மற்றும் பதவி இலக்கம் 09 இற்கு உரிய கல்வித்தகைமைகளுடன் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதசந்தர்ப்பத்தில் தரம் 06 சித்திகவனத்தில் கொள்ளப்படும்.
- ❖ குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தொடர்பாக அதனுடன் தொடர்புடைய அனுபவத்திற்கு முன்னுரிமைவழங்கப்படும்.

**சேவியர்லெம்பட்றெனால்ட்,**
செயலாளர்,
நகரசபை மன்னார்

(C/11448)(2.6.3)

## பொதுக் கூட்டம்

வலி வடக்கு மீள் குடியேற்றம் புனர் வாழ்வு சங்கத்தின் நிர் வாக சபைக் கூட்டம் இன்று வலி வடக்குபிரதேசசபைமண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

◆◆◆

அழிக்கப்பட்ட ,பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்கள் தொடர்பான விபரங் களை எழுத்துமூலம் காலம் தாழ்த் தாது உடன் அனுப்புமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டு கோள் விடுத்துள்ளது.
இது தொடர்பான கூட்டம் நல்லூர், கோவில் வீதியில் அமைந்துள்ள இந்து மாமன்றத்தில் நாளை ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 2.மணி முதல் 4 மணிவரை நடைபெற வுள்ளது.

◆◆◆

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற் றுக்கிழமை மாலை 6 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் வே.நடராஜா தலைமையில் நடைபெறும். (ந)

# நடமாடும் சேவை

கிளிநொச்சி, செப்.8
மெத்தா செயற்கை அவயவ நிறுவனத்தின் நடமாடும் இலவச சேவை கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளன.
இந்த நடமாடும் சேவை இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கிளிநொச்சி ஏ-9 வீதியில் அமைந்துள்ள கருணா நிலையத்திலும்,
எதிர்வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை முல்லைத்தீவு கள்ளப்பாடு, மீனவர் கூட்டுறவுச் சமாசத்திலும் நடைபெற வுள்ளன.
இந்த நடமாடும் சேவையில் புதிய செயற்கைக் கால்களுக்கு அளவு எடுப்பதுடன் செயற்கைக் கால்களை திருத்த விரும்புவோரும் பயன் பெற லாம். (ந)

# மெய்வன்மைப் போட்டி.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி அதிபர் கி.கிருஷ்ணாகரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப.1.30 மணிக்கு நடை பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஶ்ரீதரன், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம் மின் பொறியியலாளர் திட்டமிடல் (வடக்கு) திருமதி தனுஜா அரவிந்தநாத், யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள விவ சாயப் பணிப்பாளர் கி.ஶ்ரீபால சுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-35)

◆◆◆

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதா னத்தில் நடைபெறும்.
கல்லூரி அதிபர் க.அருந்தவ பாலன் தலைமையில் நடை பெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப் பிரமணியம் கலந்து கொள்வார். (ந-9)

◆◆◆

நெல்லியடி மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை ஞாயிற் றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத் தில் அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள் ளது.
பிரதம விருந்தினராக மருத்துவர் என்.பரமசோதி கலந்து கொள்வார். (ந-35)

◆◆◆

உரும்பிராய் இந்துக் கல்லூரி யின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் அ.அருணந்தி சிவம் தலைமையில் நடை பெறும். நிகழ்வில் பிரதம விருந் தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கர நேசன், சிறப்பு விருந்தினராக மாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராசா, வடமாகாண சுகாதார அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர் கோ.சபேசன் ஆகி யோர் கலந்து கொள்வர். (ந)

◆◆◆

மல்லாகம் மகா வித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத் தில் அதிபர் ந.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் .
நிகழ்வில் பிரதம விருந்தினராக த் தெல்லிப்பளை கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர் சு.சண்முக குலகுமார் சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் ஓய்வு பெற்ற வட பிராந்திய முகாமையாளர் சி.விக்கினராசா ஆகியோர் கலந்து கொள்வர். (ந -86)

◆◆◆

வல்வெட்டித்துறை கம்பர்மலை வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை 1.30 மணிக்கு பாடசாலை மைதானத் தில் அதிபர் மு.இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.
பிரதம விருந்தினராக வடமாகாண உடற் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் கலந்து கொள்ளவுள்ளார். (ந-35)

## வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்

**மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம், யாழ்ப்பாணம்.**

மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணத்தின் கீழ் உள்ள மன்னார் மாவட்ட அலுவலகத்துக்கு வாடகை அடிப்படையில் வான் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரலை இல.40, றக்கா லேன், சுண்டுக்குளியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் பார்வையிட்டு கேள்வி பத்திரங்களைப் பெற்று 19.02.2014 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னாரக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**எந்திரி.செ.மோகனதேவன்** - தலைவர்,
**பெறுகைக் குழு,**
**கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்,**
**இல.40, றக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**
தொலைபேசி இலக்கங்கள்: **021 222 8091 / 021 320 2638**

(சி/11451)
(10.6.3)



இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதிய திட்டத்தில் இணைக்கப்பட்டு, ஓய்வூதியம் பெற முன்னர் உயிரிழந்த பயனாளிக்கான இறப்புப் பணிக்கொடை கொடுப்பனவான ரூபா 25 ஆயிரம், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினிவரதலிங்கத்தினால், பயனாளி ஒருவருக்கு வழங்கப்படுகின்றது. (ந-5)

## மகாத்மா காந்தி புலமைப் பரிசிலுக்கு வடமாகாணத்தில் 30 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம்.பெப்.8

இந்திய அரசால் 7 ஆவது தடவையாக வழங்கப்படும் மகாத்மா காந்தி புலமைப் பரிசில் திட்டத்தில் இலங்கையின் 25 மாவட்டங்களில் இருந்தும் 150மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த வருடம் வட மாகாணத்தில் இருந்து 30மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். இந்தியத் துணைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் இருந்து யாழ்.இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, ஹாட்லிக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 6 மாணவர் களும்-

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 6 மாணவர்களும்-

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 6 மாணவர்களும்-

வவுனியா மாவட்டத்தில் வவுனியா மத்திய மகா வித்தியாலயம், இறம்பைக்குளம் மகளிர் மத்திய மகா வித்தியாலயம், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, தமிழ் மத்திய மகா வித்தியாலயம், விபுலானந்தாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 6 மாணவர்களும்-

மன்னார் மாவட்டத்தில் தலை மன்னார் பியர் அ.த.க பாடசாலை, புனித சேவியர் ஆண்கள் கல்லூரி, முருங்கன் மகா வித்தியாலயம், வங்காலை புனித ஆன் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 6 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கு அவர்களுடைய உயர்தரக் கல்வியைப் பூர்த்தி செய்யக்கூடியதாக மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா வீதம் இரண்டு வருடங்களுக்கு 48 ஆயிரம் ரூபாவை வழங்க இந்திய அரசு முன்வந்துள்ளது. கடந்த 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-14)



நர்மதா நகைமாட ஸ்தாபகரான
பொன்னையா நாகராசா
அவர்களின் மனைவியும்
நாகராசா ஜெகதீஸ்வரன் (கண்ணன்)
அவர்களின் தாயுமான
திருமதி லோகேஸ்வரி நாகராசா
அவர்களின்

மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைவதுடன் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

நர்மதா நகை மாடம்
யாழ்ப்பாணம்.
பணியாளர்கள். (44471) (7.6.3)

## சட்டமேதை ஜீ.ஜீ. பொன்னம்பலம் (Q.C) அவர்களது 37 ஆவது சிரார்த்ததின நிகழ்வுகள்

09.02.2014



தமிழர் தம் மாபெரும் தலைவர்,
சட்டமேதை,
இராணி வழக்கறிஞர்
அமரர் ஜீ.ஜீ.
பொன்னம்பலம் (Q.C)

அவர்களது 37 ஆவது சிரார்த்த தினமாகிய நாளை (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை குருநகரில் அமைந்துள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தும் நிகழ்வுகள் அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளன.
அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அப்பாத்துரை விநாயகமூர்த்தி,
நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் தலைவர்
ஆதரவாளர் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்.
(சி/11436) (3.6.4)

## மரண அறிவித்தல்

### திருமதி சாந்தினி (சாந்தி) கந்தையா



கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தினி (சாந்தி) கந்தையா 05.02.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம்-ஞானசௌந்தரி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தையாவின் (ஆட்டோ சாரதி) அன்பு மனைவியும், கிரிஜா, கிசோபா, கிருத்திகன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02. 2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவரசதிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மல்லிகைத்தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டி. (33356) (10.6.3)
தகவல்: குடும்பத்தினர்.
T.P: 077 922 8356

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
17.12.1961

உதிர்வு
12.02.2011

### திருமதி புஸ்பவதி ஆனந்தராசா

திதி: நவமி

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலயத்தே மிளிர்ந்தீரே!
கூரறிவு கொண்டோராய் எமையென்றும் வளர்த்தீரே!
பாரினிலே பண்புயர் தெய்வமாய் திகழ்ந்தீரே!
பல்லாண்டு சென்றிடினும் மறவோமே உம்மை
என்றும் நினைவில்

ஆனந்தா வீதி,
மானிப்பாய்.
குடும்பத்தினர்.

## நன்றி நவிலலும் அந்தியேட்டிஅழைப்பும்

### கு.ஜெயராணி (பேபி)



கடந்த 10.01.2014 சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு கு.ஜெயராணி (பேபி) அவர்களின் பிரிவு கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலமும் எமதுதுயரத்தில் பங்கெடுத்துக் கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
அத்துடன் அன்னாரின்அந்தியேட்டி கிரியைகள் இன்று (08.02.2014) சனிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்குதொண்டைமானாறில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும்கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம்
12.09.1954

மறைவு
10.01.2014

(44480) (7.6.3)

அ.இராசகுமாரன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

குடும்பத்தினர்.
வடக்குத் தெரு,
தொண்டமானாறு.

### புதிய முகாமையாளர் பதவி ஏற்பு

மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளையின் முகாமையாளராக ஜீ.விஜயகுமார் பொறுப்பேற்றுள்ளார்.

கிளை முகாமையாளராக கடமையாற்றிய க.சண்முகலிங்கம் கடந்தவெள்ளிக்கிழமை இளைப்பாறியதை அடுத்து யாழ்ப்பாணம் பிரதான வீதிக் கிளையில் கடமையாற்றிய விஜயகுமார் கிளை முகாமையாளராக நியமிக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ஓ-9)

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
12 * 03 * 1964

இறப்பு
03 * 02 * 2008

### குட்டியன் ஜெயராசா

(சின்னத்தம்பி-வளர்க்காடு, வல்வெட்டித்துறை)

திதி: 08.02.2014

ஆண்டுகள் ஆறு ஆனதன்றோ
ஆயினும் உங்கள் நினைவு ஆறவில்லை
நித்தம் உங்கள் நினைப்பினிலே
நீண்ட யுகமும் கழிகின்றதே
நான் வாழும் காலம் எப்பொழுதும்
நிழலாய் என்னுடன் இருந்திடுவீர்
உங்கள் ஆன்மா இளைப்பாறிடவே
உங்கள் உயிராய் இங்கு வீழ்ந்திருப்பேன்.

"பவளவனம்",நவிண்டில் (44455)(3.6.4)
நினைவுகளுடன்
மனைவி ஜெ.ரஞ்சினி.

## அந்தியேட்டி அழைப்பு

அமரர்
### கணபதி தங்கமுத்து



தோற்றம்
12*08*1932

மறைவு
09*01*2014

கடந்த 09.01.2014 சிவபதமடைந்த அமரர் கணபதி தங்கமுத்து அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் இன்று (08.02.2014) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறஉள்ளதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

(41649) (3.6.4)
குடும்பத்தினர்.
மீசாலை கிழக்கு, மீசாலை.

### கால்வாய்நோய்; தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுப்பு

வரணிப் பிரதேசத்தில் கால்நடைகளுக்குக் கால்வாய் நோய் தொடர்பான தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தின் அனுசரணையுடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதே நேரம் கடந்த வருடம் கால் நடைகளுக்கு இலக்கம் இடப்பட்ட மைக்கான உறுதிச் சீட்டுக்கள் கால்நடை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. (ந-122)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ திருக்குடும்பக் கன்னியர் மட பாடசாலையின் இசை ஆசிரியராக சேவையாற்றி தற்போது யாழ். கல்வி வலயத்தில் சங்கீத பாட ஆசிரிய ஆலோசகராக பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ள

திருமதி

**சாந்தினிமாலா தர்மராஜன்**

(Dip. in Music, Dip.in Edu.)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் பணி சிறக்கவும் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று சேவையாற்ற வேண்டுமெனவும் வாழ்த்தி நிற்கின்றோம்.

*Congratulation*

**இசையாசிரியர் கழகம்**
**யாழ்.வலயம்.**

(44486)(5.6)

## கைவிடப்பட்ட படைமுகாமிலிருந்து வெட்டி எடுக்கப்படும் மண் அணை

கைதடி - நுணாவில் பகுதியில் 523 ஆவது படையணி தலைமை அலுவலகம் இருந்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்த மண் அணை இரவிரவாக இனந்தெரியாதோரால் வெட்டி அள்ளப்பட்டு வாகனங்களில் ஏற்றிச் செல்லப் படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியிலிருந்த 523 ஆவது தலைமை அலுவலகம் அல்லாரை தம்பு தோட்டத்துக்கு இடம் மாறிய போதிலும் சிறிய முகாம் இருந்து வந்ததாகவும் அங்கிருந்த முகாமில் இருந்தவர்களும் வெளியேறியதை அடுத்து இரவு வேளையில் வாகனங்களில் வருவோர் மண் அணையை வெட்டி ஏற்றிச் செல்வதாகவும் தெரிவித்தனர்.

முகாம் இருந்த பகுதியில் வெட்டி மண் அணை அமைக்கப்பட்டதாகவும் காணி இதுவரை உரியவர்களிடம் கையளிக்காததால் அங்குள்ள பள்ளங்களை மூடுவதற்கு பயன் படுத்தவிருந்த மண் அணையை எடுத்துச்செல்வது குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## தேவை

1) காசாளர் - (பெண்) தகைமை - க.பொ.த (உயர்தரம்) முன் அனுபவம் விரும்பத்தக்கது

2) பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்) இரவு பகல் சேவை

காலம் 09.02.2014 (ஞாயிறு) நேரம் காலை 10 மணி

இடம் யாழ்.வைத்தியசாலை 515 பலாலி வீதி , பரமேஸ்வரா சந்தி திருநெல்வேலி

தொலை பேசி - 021 2225535, 021 222 1011

## கண்ணீர் அஞ்சலி

திருமதி சுபத்திரா சுரேந்திரசர்மா (சங்கீத ஆசிரியை)
அவர்களின் பாசமிகு தாய்

**ஸ்ரீமதி வாலாம்பிகை அம்மா சண்முகசுந்தரக்குருக்கள்**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (44485)(2.6)

**இசையாசிரியர் கழகம், யாழ்.வலயம்.**

## கண்ணீர் அஞ்சலி

திருமதி யசோதை சிவபாதசக்தி (சங்கீத ஆசிரியை)
அவர்களின் அன்புக் கணவர் **செ.சிவபாதசக்தி**
(கணித ஆசிரியர்)

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (44484)(2.6)

**இசையாசிரியர் கழகம், யாழ்.வலயம்.**

## கண்ணீர் அஞ்சலி



**சின்னையா**
**அன்னபூரணம்**

அம்மம்மா என அழைக்க இனியார்
அம்மம்மா இருக்கிறார்கள் உங்கள்
ஆசைமுகம் காணத் துடித்தேன்
இறுதிவரை அதுவும் எட்டவில்லை
வையகத்தில் உங்களைப் போற்ற
வாழந்து காட்டி முடித்துவிட்டீர்கள் அம்மம்மா. உங்கள் ஆத்மா சாந்தி பெற கண்ணீர்ப் பூக்களைத் காணிக்கையாக்குகின்றோம்.

வசந்தராசா சுகந்தினி (சுதா பேர்த்தி)

162 பார்பண்ணை வீதி திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## A/L Chemistry Personal/Group Classes

Basic, General, Organic, Inorganic, physical, chemistryகடந்த காலவினாக்கள் ஆசிரியரால் B.Sc(cey), M.Sc(cey)(Chemistry)கற்பிக்கப்படும்.

தொடர்பு: 077 6038915

## குத்தகைக்கு

யாழ். ஊரெழு கிளானை பகுதியில் 4 பரப்பு வாழைத் தோட்டக் காணி பயிர்ச் செய்கைக்கு குத்தகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு: 075 500 1211 / 011 250 6811

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

42 நாள் நிரம்பிய ஜேர்மன் சப்பேட், அல்சேஷியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 302 4483
(44502)(4.6.3)

## விற்பனைக்கு

ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யும் கொம்பிறசர் பாத்தும் Deep Freezer ம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 327 7784
(சி/11455)(4.6.3)

## தேவை

உயர்தர அசைவ உணவகத்துக்கு அனுபவம் உள்ள சமையல் கலைஞர்கள் தேவை.

தொடர்பு: 077 7913490

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 ★ 06 ★ 1953 | | 30 ★ 01 ★ 2011 |



**அமரர் கதிரவேலு குணசேகரம்**

திதி: அபரபக்க திரயோதசி

அமைதிப் பூங்கா அமரராகி
ஆண்டொன்று கழிந்ததுவோ
அவதிப்பூக்கள் நாங்களாகி
அன்று தொட்டு அலக்கழிந்தோம்
அருளும் தெய்வம் அப்பாவாகி
அவன் அடியில் அமைந்ததுபோல்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். மனைவி, பிள்ளைகள்
T.P:0778894334 (சி/8010)(2-6-7)

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை பிறக்சிற் (புஸ்பம்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பிறக்சிற் (06.02.2014) கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், சரோஜினிதேவி (சில்லாலை), ஜெயராசா (மன்னார்), சுகுணராசா (கனடா), புவனராசா, சுதர்சினி, ஜான்சினி ஆகியோரின் பாசமிகு தாயும், மாட்டின் (சில்லாலை), தரளம் (மன்னார்), கனடாவில் வசிக்கும் துசித்தா, காந்தினி, விஜயரட்ணம், காந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற பாவிலுப்பிள்ளை மற்றும் பத்திநாதர், செலஸ்ரின்பிள்ளை, மேரி செசிலியா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


சில்லாலை,
தொடர்பு: 077 3166 119 (44487)(10.6)

தகவல்: **பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சத்தியபாமா குமாரசுவாமி

(இளைப்பாறிய ஆசிரியை, மங்கையர்க்கரசி வித்தியாசாலை)



யாழ்ப்பாணம், திருநெல்வேலி, மணல்தரை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியபாமா குமாரசுவாமி (05.02.2014) புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் அருளம்பலம் குமாரசுவாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளைப் பாறிய ஆசிரியரும், பிரபல சிறுகதை எழுத்தாளருமான க.தி.சம்பந்தனின் அருமைத் தங்கையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:** (2.6)(44483)
Dr.ரேணுகா ராசரெத்தினம் - மகள் (லண்டன்)
Mrs.மைத்ரேயி போகரெத்தினம் - மகள் (லண்டன்)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்



தாண்டிக்குளத்தைப் பிறப்பிடமாகவும், எல்லப்பர் மருதங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் நேற்று முன்தினம் (06.02.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்ற சிவராசா (ஆசிரியர்) மற்றும் கருணாநிதி பத்மநாதன் (ஆசிரிய ஆலோசகர் - வவுனியா தெற்கு கல்வி அலுவலகம்) ஸ்ரீதரன் (சுவிஸ்) காலஞ்சென்ற உலகநாதன் (மோகன்) மற்றும் அகிலன் (ஜேர்மனி), யமுனாராணி (நோர்வே), மருதராணி ஆகியோரின் அன்புத்தாயும் அருணோதயம், திலகவதி, சுபேந்திரினி (ஆசிரியர் வ / பூந்தோட்டம் ம.வி), பிறேமா (சுவிஸ்), குலநாதன் (நோர்வே), சிவநேசன் ஆகியோரின் மாமியும் புஸ்பராசமணி, பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தாரணி ஆரிணி, கபிலன், முகுந்தினி, குமுதினி, வரதீபன், கமலேந்திரன், அஜந்தனா, ஆவினன், சிறோஜன், சாருசன், சாரணன், சுவாதி, கிருசாந், லக்சன், தர்சாந் ஆகியோரின் பேர்த்தியும் மௌளி, சகானா, வர்சா, சாகித்யா, கோகுலன், மினுசன், தஜிதன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எல்லப்பர் மருதங்குளத்தில் நாளை (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எல்லப்பர் மருதங்குளம் குடும்ப மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் : குடும்பத்தினர்
077 9363067

எல்லப்பர் மருதங்குளம் வவுனியா

## மரண அறிவித்தல்

### திருமதி சரோஜினிதேவி கணேசரட்ணம்



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் யாழ்.கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில் வீதியை வதி விடமாகவும், இரத்ம லானை அத்திடிய வீதியை இருப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி கணேசரட்ணம் அவர்கள் 2014.02.04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இறையடி எய்தினார்.

அன்னார் சங்கானையைச் சேர்ந்த இராஜரட்ணம் கணேசரட்ணம் (முன்னாள் ஊழியர்,காகித ஆலை, வாழைச்சேனை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சரஸ்வதி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - சரஸ்வதி தம்பதியரின் மூத்த மருமகளும், சுரேஸ்குமார் (ஆஸ்திரே லியா), நரேஸ்குமார் (லண்டன்), நந்தினி(நந்தா) ஆகி யோரின் அன்புத் தாயும், சிவஜா (ஆஸ்திரேலியா), கேதீஸ்வரி (லண்டன்), தர்மராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், ஆகாஷ், சிந்துஜா, கைலாஷ், தரண்யா, ஹனுஜன், நிருஜா (கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), சாருஜன் (கொ/இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி) ஆகியோரின் அன்புப் பாட்டியும், திருமதி பத்மாதேவி, திருமதி சுசீலாதேவி, காலஞ்சென்ற இராஜேந்திரன்(ராசா) ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் தர்மபாலன், இலங்கரட்ணம், விநாயகமூர்த்தி, திலகவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 6/2, அத்திடிய வீதி, இரத்மலானை இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக இன்று (2014.02.08) சனிக்கிழமை வைக்கப்பட்டு, நாளை (2014.02.09) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும் ஈமைக் கிரியைகளின் பின்னர் முற்பகல் 10.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்: கணவர் - கணேசரட்ணம்,
மகன்மார்: சுரேஸ்குமார், நரேஷ்குமார்
மகள்: நந்தினி (நந்தா)
தொலைபேசி இல. 0771900683,0112610863 (2.6)(C/11461)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்



### அருணாசலம் திருமால்

அல்லையம்பதி துன்னாலை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட அருணாசலம் திருமால் நேற்று (07.02. 2014) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம்-பரிமளம் தம்பதியரின் பாசமிகு மகனும், புஸ்பலோஜினியின் அன்புக் கணவரும், திருசாந் (வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர்), பிரசாந், சரண்ஜா ஆகியோரின் அன்புத் தந் தையும், சுபத்திரா (யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி, PGDE, யாழ். பல் கலைக்கழக ஆசிரிய மாணவி), ஜெயந்தினி (புலோலி கிழக்கு அ.த.க. பாட சாலை) லிங்கேசன் ஆகியோரின் அன்பு மாமனும், ஷங்கவி, சித்தாத் ஆகியோரின் அன்புப் பேரனும், பராசக்தி, மகாலக்ஸ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

துன்னாலை, கரவெட்டி.

## மரண அறிவித்தல்



### திருமதி நந்தகுமாரி மதியழகன்

மன்னாரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நந்தகுமாரி மதியழகன் நேற்று (07.02. 2014) வெள்ளிக்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் நல்லூர் கல்வியங்காடு காசிப் பிள்ளை வித்தியாலய ஆசிரியையும், மதி யழக னின்(உரிமையாளர்,சாயி கொமினி கேசன், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு) பாசமிகு மனைவியும், ரங்கராஜா (டிசைன், ரெக்ஸ்ரைல்ஸ், மன்னார்)- யோகம்மா தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் பாக்கி யலட்சுமி தம்பதியரின் அன்பு மரு மகளும், வரதராஜன், தவராஜன் (நந்தினி, போன் சொப், மன்னார்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை மன்னார் உப்புக்குளம் இல்லத்தில் நடை பெற்று பி.ப. 3. 00 மணிக்கு தகனக்கிரியைக்காக மன்னார் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

# மாணவர்களுக்கு பாதுகாப்புத் திட்டம்

## *ஆராய்கிறது கல்வி அமைச்சு*

கொழும்பு, பெப்.8

பாடசாலை மாணவர்கள் பல்வேறு விபத்துகளுக்கு உள் ளாவதைத் தடுப்பதற்கான புதிய பாதுகாப்புத் திட்டமொன்றைத் தயாரிப் பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஏனைய நாடுகளில் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக முன்னெடுக் கும் வழிமுறைகளையும் இந்தத் திட்டத்துக்குள் உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலர் அனுர திசாநா யக்க தெரிவித்தார்.

இதற்கான ஆலோசனைகளை கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தனக்கு வழங்கியுள்ளார் என்று அவர் கூறினார்.

நாட்டில் காணப்படுகின்ற நடைமுறை ரீதியிலான குறைபாடுகளை புதிய திட்டத்தின் ஊடாக நிவர்த்தி செய்துகொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் பாடசாலை நேரம் நிறைவடைந்த பின்னர் பிள்ளைகள் மீது பெற்றோர்கள் கவனம் செலுத்து வதற்கும், அதிபர் களை தெளிவுபடுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் குறிப் பிட்டார். (ச)




60/= இல் அத்தனையும் உங்கள் கையில்

நலமுள்ளதொரு குடும்பம்

தாயும் பிள்ளையும்

பரிபூரண பலன்பெற இன்றே வாங்கி படியுங்கள்

உங்கள் அபிமான மாதச் சஞ்சிகை

"ஒளி அரசி"

இல்லத்தரசிகளின் தோழி

வடமாகாண தொடர்புகளுக்கு 0716182182

தேசிய தொடர்புகளுக்கு T.P 0714273035


## மரண அறிவித்தல்

### திருமதி பூரணம் இரத்தினம்



யாழ். கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட பூரணம் இரத்தினம் கடந்த 05.02.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - ராசம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற தம்பு - பொன்னாட்சி தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புமனைவியும் கமலேஸ்வரி (கனடா), சிவக்குமார் (இலங்கை), கிருஸ்ணகுமார் (கனடா), உதயகுமார் (கனடா), மகேந்திரகுமார் (கனடா), செல்வகுமார் (கனடா), ஜெயராணி (கனடா), ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் பரமேஸ்வரி (கனடா), அமிர்தலிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற சதாசிவம் (அச்சா), வசந்தா (இலங்கை), வனிதா (கனடா), தர்சினி (கனடா), மைதிலி (கனடா), கருணானந்தன் (பிரித்தானியா), சுரேந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் நிசாந்தி, நிசாலினி, சாருஜி, வாருஜி, கீர்த்தன், நிரோசன், டினுஜன், துஜன், நிலானி, தர்மிகா, லயனி, பிருத்திகா, சூர்யா, நிலா, யதுசன், வினிஜா, தனுஜா, ஜிவித்திரா, பானுஜா, கிருசான், வைகுந்தன், துசாந், தனிஸ்வரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் டெவன், நதீஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 01.00 - பி.ப. 3.00 கனடா நேரப்படி நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
கமலேஸ்வரி (கனடா - +19058266984)
சிவகுமார் (இலங்கை - +9477 6624567, +94757431755)
உதயகுமார் ( கனடா - +16475289124)
குமார் (கனடா - +16472096005)
ஜெயகுமார் (கனடா - +16475886669)

தகவல்:
பிள்ளைகள், (சிவகுமார், ஜெயக்குமார்)

## பாவனைக்கு உதவாத தேயிலை சிக்கியது

கொழும்பு, பெப்.8

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யுனி பில்ட் தோட்டத்தில் வீடு ஒன்றில் இருந்து சட்ட விரோதமாக விற்பனைக்கு வைக் கப்பட்டிருந்த பாவ னைக்கு உதவாத தேயிலை கைப்பற் றப்பட்டுள்ளது.

இவ்வாறு 400 கிலோ கிராம் பாவனைக்கு உதவாத தேயிலைத் தூள் ஹற்றன் பொலி ஸாரால் நேற்று முன் தினம் வியாழக் கிழமை கைப்பற்றப் பட்டுள்ளது.

ஹற்றன் பொலி ஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படை யில் சந்தேகநபர் ஒரு வரும் கைது செய்ய பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடு பட்டு வருகின்றனர். (ச)


ஆங்கிலம் கற்பதற்கு எதுவும் தடையில்லை
உங்களிடம் அதற்கான ஆர்வமிருக்குமிடத்து



ஆங்கிலமொழி அறிவினை வளர்த்துக் கொள்ள ஆர்வமுள்ளவரா நீங்கள்? தொழில்புரிபவரா?, மாணவரா? எந்த வகையினராயினும் மாலை நேரம் மற்றும் வார இறுதி ஆங்கில கற்கை நெறிகளை IDM Chavakachcheri யிடம் இருந்து கற்கும் வாய்ப்பு தென்மராட்சி மக்களுக்கு...... யாழ் நகரின் பிரபல விரிவுரையாளரின் வழிகாட்டல்களுடன் ....ஆர்வமுள்ளவர்கள் கீழ்வரும் வினாக்களுக்கு சரியான பதிலை SMS அனுப்பி எதிர்வரும் 15ம் திகதி இடம்பெறவுள்ள அறிமுக வகுப்பில் இலவசமாக கலந்து கொள்ளும் வாய்ப்பை பெற்றிடுங்கள்.

1.Which word is most used in english?
A) is B) to C) the

2.Ravi and i ____ going to shop?
A) is B) am C) are

3.How do you get to School?
A) by bus B) in bus C) with bus

(கேள்வி) (பதில் ) Sent to 077 555 81 55

உதாரணம் கேள்வி 1 க்கான பதில் C எனில் 1 C என type செய்து அனுப்பவும்

IDM சாவகச்சேரி, தொலைபேசி – 021 7 200 600
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகில்,
ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ்க்கு மேல் (2ம்) மாடியில்


## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

### 2014 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி செலுத்துவதற்கான கால நீடிப்பு

எமது வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி 2014 ஆம் ஆண்டிற்கான முழு ஆதனவரியினையும் 10% கழிவுடன் செலுத்துவதற்கான கால எல்லையை 28.02.2014 ஆம் திகதி வரை நீடிப்பதென சபையினால் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

நகராட்சி மன்ற அலுவலகம்
சாவகச்சேரி.
07.02.2014

(சி/7643) (10.6)

இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்.

தோற்றம் 27 . 11 . 1956



மறைவு 09 . 01 . 2014

### அமரர் ஐயாத்துரை பாஸ்கரன்

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் பங்கு பற்றி உத விகள் புரிந்வர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (08.02.2014) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மத சாந்திப்பிரார்த்தனையி லும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளு மாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள் ளுமாறு அனைவரையும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

481, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.


HP யின் உத்தியோகபூர்வ வியாபார பங்காளர் நளினின் Mega offer

NALIN Information Technologies(Pvt)Ltd.

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

யாழ்ப்பாணத்திலும்

HP Pavilion 15 i3 3rd gen

500 GB / 4 GB / 15.6" LED
Wifi / BT / Webcam/
Optional Win 8

Free
STC HSPA 7.2 Multi Dongle
Head phone
Mouse
HP Original Bag

With Warranty

64,900/= மட்டுமே

முந்துங்கள் ! கையிருப்பு உள்ளவரை மட்டுமே !

BRANDED PC & Laptop

HP Genuine warranty
1 year parts Warranty
2 years service free

சுன்னாகத்திலும்

Assemble Pc யின் விலையில்
நீண்டகால பாவனைக்கு HP Dualcore Pc

2030 Dualcore processor
500 GB (7 200) / 2 GB (DDR 3)/
DVD writer / Card Reader /
18.5" LED HP / Optional Win 8

49,500/= மட்டுமே Free Head phone

021 222 1121 077 766 7975 021 222 4994 facebook/nalin_it

Branch: No. 116 G, K.K.S. Road, Chunnakam. 021 224 2222 077 714 0431

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சர்வாதிகாரிகளான

தையே புகுத்தியுள்ளது. மக்கள் பெருவாரியாகப் பிற நாடுகளில் தஞ்சம் புகுந்தார்கள். ஆனால் அவர்களின் உறவினர்கள் பலர் இங்கு தொடர்ந்து தங்கியிருந்தார்கள். தங்கியிருந்த அவர்களுக்கு வெளிநாட்டுப் பணம் படிப்படியாக வரத் தொடங்கியது.

இந்தத் திடீர்ப் பணப் புழக்கம், எமது மக்களிடையே இருந்து வந்த கடின உழைப்பு முறை, சிக்கன முறை, பண்பாட்டு முறைகளையெல்லாம் ஆட்டம் காண வைத்தது.

இது கல்வியிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. முன்னர் படித்தால்தான் முன்னேற முடியும், படித்தால்தான் அரச உத்தியோகம் பெற முடியும் என்றெல்லாம் இருந்தது. அதனால் மாணவர்கள் படிக்க வேண்டும், முன்னேற வேண்டும் என்ற ஒருவித உத்வேகத்துடன், அவாவுடன், வெறியுடன் படித்தார்கள்.

**வெளிநாட்டு மோகம்**

வெளிநாட்டில் இருந்து வந்த அந்நியச் செலாவணி அந்த வெறியை மழுங்கடைய வைத்தது. எந்தச் சிறிய வேலை பார்க்கும் உறவினரின் வெளிநாட்டுப் பணம் கூட இங்கு வந்ததும் பல மடங்காக மாறி விடுகின்றது. அதைக் கொண்டு செலவு செய்வதால் இங்குள்ளவர்களுக்குக் கல்வியில் சிறக்க வேண்டும் என்ற எண்ணம் போய் எப்படியாவது வெளிநாட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி நிற்கத் தொடங்கியது. அது மட்டுமல்லாமல் வாழ்க்கைத் தரமும் மாற்றமடைந்தது. எல்லோர் கைகளிலும் தொலைபேசி, கணினி, இணையம் என்று மாறியது.

வெளிநாடுகளில் எந்தளவுக்குத் தொலைக்காட்சி, கணினி என்பன அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்ததோ அந்த அளவுக்கு அவை எங்கள் கல்வி வளர்ச்சிக்குத் தடையாக அமைந்தன. படங்கள் பார்ப்பது அதுவும் பாலியல், வன்முறை போன்ற கருக்களைக் கொண்டவற்றை விரும்பிப் பார்ப்பது, கையடக்கத் தொலைபேசிகளில் காதல் பேச்சுப் பரிமாற்றங்களில் ஈடுபடுவது என்று இளைஞர், யுவதிகள் மனங்கள் கல்வியின் பால் செல்லாமல் வேறு புலன்களைப் பூர்த்திப்படுத்தும் திசைகளில் செல்ல, வெளிநாட்டுப் பணத்தினூடான புதிய பொருளாதாரவளர்ச்சிஇடமளித்துள்ளது.

**காற்றில் பறக்கும் பாரம்பரியம்**

எமது பாரம்பரிய விழுமியங்கள் பல காற்றில் விடப்பட்டு வருகின்றன. களியாட்டங்களில் மனம் போவதால் மாணவர் மத்தியில் புகைத்தல், மது அருந்துதல், போதைப் பொருள் பாவித்தல், பெண்களுடன் சேஷ்டைகளில் ஈடுபடுதல், கோஷ்டிகளாகச்சென்று சண்டைகளில் ஈடுபடல் போன்ற பழக்கங்களுக்கு அடிமையாக்கல் போன்றவை உள்ளடக்கப்பட்டு எமது பாரம்பரியம் பிறழ்ந்து போகின்றது.

வசதியாகப் பணம் வந்து கொண்டிருப்பதனால் காசினால் எதையும் சாதிக்க முடியும் என்ற மனோநிலை இளைஞர், யுவதிகளிடையே பரவி வருகின்றது. விபத்துக்கள் நடந்தால் பொலிஸார் கையில் பெருந்தொகைப் பணத்தைத் திணித்துத் தப்பிக்கப் பார்க்கின்றார்கள். இதை எனக்குப் பொலிஸார் சிலரே கூறிக் குறைபட்டுக் கொண்டார்கள்.

**மதிப்புக் கொடுக்காமை**

குடும்பங்களில் பாச உணர்ச்சிகளுக்குப் பதில் பண உணர்ச்சியே மேலோங்கி வருகின்றது. பாரம்பரியமாக வயது முதிர்ந்தோர்களுக்கு மரியாதை செலுத்தும் எமது பண்பு இளைஞர்களிடம் இருந்து விடை பெற்றுச் செல்வதாகவே உணர்கின்றேன். சிங்கள இளைஞர்கள், யுவதிகள் முதியவர்கள் காலில் விழுந்து குறிப்பிட்ட சில சுபமுகூர்த்த நாள்களில் ஆசீர்வாதம் பெறுவதை நான் கண்டுள்ளேன். அதே நேரம் தாய் தந்தையரை, ஆசிரியர்களை எடுத்தெறிந்து பேசும் தமிழ் இளைஞர், யுவதிகளையும் அவதானித்துள்ளேன்.

வறுமை எம்மிடம் இருந்த போது, இயலாமை எம்மை வாட்டியபோது எமது பாரம்பரியமானது, அதை எல்லாம் எதிர்த்து முன்னேறிக் கல்வி, பொருளாதார வளர்ச்சியில் முன்னேற வைத்தது. இன்று சகலதும் எமக்குக் கிடைத்தவுடன் எதற்குப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் இளைஞர்கள் யுவதிகள் மனதில் படிந்துள்ளது.

**இலவசங்கள்**

பாடசாலைகளில் அரசியல் காரணங்களுக்காக இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசச் சீருடைகள், இலவச உணவுகள் கொடுக்கின்றார்கள். ஆனால் இவையாவும் நாம் எதிர்பார்க்கும் குணங்களுக்கு மாறான குணங்களையே மாணவர்களிடையே பரவவிடுவதாக உணர்கின்றேன். அதற்காக எதனையும் கொடுக்காதீர்கள் என்று நான் கூறவரவில்லை. மாணவர்கள் மத்தியில் இவற்றின் பெறுமதியை எடுத்துக் கூறப் பெற்றோரும் மற்றோரும் முன்வர வேண்டும். இவை இன்று கிடைக்கின்றன. ஆனால் கிடைக்காமல் இருந்த நாள்களை அவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். வருங்காலத்திலும் இவை தடைப்பட வாய்ப்பிருப்பதை எடுத்துக் கூறுங்கள்.

எமது பிழையான நடவடிக்கைகள் கர்ம வினைப்படி எமக்குத் தண்டனை விதிக்கும் செயற்பாடுகளைக் கட்டாயம் கொண்டு வரும் என்பதை எமது மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் ஏதோ ஒரு பெறு பயன் எமக்கு எதிர்காலத்தில் கிடைக்கும் என்பதை நாங்கள் உணர்ந்து கொள்வோம்.

**சர்வாதிகாரிகளுக்கு நடந்தது என்ன ?**

சர்வாதிகாரிகளாக இருந்த எகிப்தின் ஹோஸ்னி முபாரக்கையும், ஈராக்கின் சதாம் ஹூசைனையும், பாகிஸ்தானின் முஷாரப்பையும் பாருங்கள். அவர்கள் இருந்த நிலை என்ன ? கடைசிக் காலத்தில் அவர்கள் அனுபவித்தது என்ன? இவை எல்லாம் 'நீ விதைத்ததையே அறுவடை செய்வாய்' என்ற யேசுவின் முது மொழிக்குச் சான்றாக எம் கண் முன்னாலேயே நடந்தேறியுள்ளன. எமது முதியவர்களின் ஆரம்ப கால வாழ்க்கை முறை எவ்வாறிருந்தது அதன் பின்னர் அரசியலில் என்ன நடந்தது, எமது வாழ்க்கை எவ்வாறு இப்பொழுது மாறியுள்ளது, இந்த மாற்றம் தொடர்ந்தால் எவ்வாறானதொரு நிலையை நாங்கள் சந்திக்க நேரிடும் என்பதை மாணவ மாணவியர் சற்று நேரம் எடுத்துச் சிந்திக்க வேண்டும்.

இன்று வெறும் புலன் இன்பங்களுக்கு இடம் கொடுப்பதால் பயன் என்ன வரக்கூடும் என்பதை ஊகித்து அறிந்து கொள்ள வேண்டும். எவ்வாறு சில சூழல் சக்திகள் எம்மைத் தவறான வழிகளில் கொண்டு செல்ல முனைகின்றன என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எமது வெளிநாட்டு மோகம் எம்மவரிடையே இனியாவது குறைய வேண்டும்.

**உங்களுக்காகவே நாங்கள்**

வடக்கு மாகாண சபையில் புதிதாகப் பதவி ஏற்றிருக்கும் நாங்கள் சுயதொழில்கள் ஊடாக, கூட்டுறவின் ஊடாகப் பொருளாதாரத்தை மேம்படுத்த வழிமுறைகளை அடையாளம் கண்டு கொண்டிருக்கின்றோம். பலவித எதிர்ப்பாடுகள், தடைகள் மத்தியிலும் இதனைச் செய்து கொண்டிருக்கின்றோம். எமது மாணவ மாணவியர் வெளிநாடுகளுக்குப் படையெடுத்தீர்களானால் யாருக்காக நாங்கள் இங்கு பாடுபட வேண்டும்? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் ? என்றார் முதலமைச்சர்.

சர்வாதிகாரிகளுக்கு நடந்ததை முதல்வர் சுட்டிக்காட்டிய விதம், மறைமுகமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சாடித்தான் என்று அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனாலும் முதலமைச்சர் எந்தவொரு இடத்திலும் நேரடியாக அவ்வாறு குறிப்பிடவில்லை. (த-5)

### ஜெனிவா பிரேரணை

இம்முறை இலங்கை அரசுக்கு எதிராகக் கடுமையான பிரேரணையைக் கொண்டு வர அமெரிக்கா தீர்மானித்துள்ளது. இந்நிலையில், அமெரிக்காவுக்கான இந்தியத் துணைத் தூதுவர் தேவயானி சோதனையிடப்பட்ட விவகாரம் மற்றும் இலங்கையுடனான சம்பூர் உடன்படிக்கை உட்பட இந்தியாவின் பொருளாதார திட்டங்களும் மேலும் சில விடயங்களும் இந்தப் பிரேரணை தொடர்பில் டில்லியைச்சிந்திக்கவைத்துள்ளது.

அதேவேளை, ஈழத் தமிழர்களுக் காகக் குரல் கொடுத்து வரும் தமிழகத்தின் செயற்பாடுகள், அண்மையில் இடம் பெற்ற மாநிலத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்வி மற்றும் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய விடயங்கள் ஜெனிவாப் பிரேரணையை டில்லி அரசு ஆதரிக்கவேண்டும் என்றதொரு நிலையை ஏற்படுத்தியுள்ளன.

இவ்வாறான நிலையில், அடுத்த மாதம் ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள கடுமையான பிரேரணை விடயத்தில் எத்தகைய நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது தொடர்பில் இந்தியா தற்போது தீவிரமாக ஆலோசித்து வருகின்றது.

'மதில் மேல் பூனை' என்ற நிலைப்பாட்டில் இருந்துவிட்டு இறுதியில் இந்தப் பிரேரணை தொடர்பில் அமெரிக்காவுடன் இரகசியப் பேச்சு நடத்தி அதனை நீர்த்துப்போகச் செய்துவிட்டே அதற்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கும் என்று டில்லி இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

இதேவேளை, அண்மையில் டில்லி சென்ற இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், அங்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் நடத்திய பேச்சின்போது ஜெனிவாவில் இம்முறை அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணைக்கு எதிராக இந்தியா வாக்களிக்க வேண்டும் என்று கேட்டிருந்தார். எனினும், பீரிஸின் இந்தக் கோரிக்கைக்கு டில்லி அரசு சாதகமான பதில் எதனையும் வழங்கவில்லை எனத் தெரிய வந்துள்ளது. (த-சி)

### பால்மாவின்

வான ஜோன் அமரதுங்க நேற்று நாடாளுமன்றில் விசேட கூற்றொன்றை விடுத்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆரோக்கியமான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதே எமது ஆட்சியாளர்களின் கொள்கையாக இருந்தது என ஜோன் அமரதுங்க கூறினார். எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் கொள்கை அதுவல்ல. பால்மாவின் விலையைத் தாழ்வு மட்டத்தில் பேணுவோம் என நாம் ஒரு போதும் கூறவில்லை. ஏனெனில், தேசிய உற்பத்தியினூடாக நாட்டில் தன்னிறைவை ஏற்படுத்துவதே எமது கொள்கையாகும்.

இதற்கமைய தேசிய பால் உற்பத்தியாளர்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதே எமது நோக்கமாகும். 2020 ஆம் ஆண்டில் நாட்டின் திரவப்பால் உற்பத்தியை நூற்றுக்கு நூறு வீதமாக்குவோம். அதனால் அதிகரிக்கப்பட்டுள்ள பால்மாவின் விலையை ஒருபோதும் குறைக்கமாட்டோம்.

பால்மாவின் விலையைக் குறைத்தால் எமது நாட்டின் தேசிய பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவர். பாலை பாதையில் கொட்டவேண்டிய நிலையும் ஏற்படும். அதனால் பால்மா விலையைக் குறைக்கமாட்டோம் - என்றார். (த-சி)

### இலங்கை

வவுனியா பூவோயா இராணுவ முகாமில் கடந்த மாதம் 27 ஆம் திகதி தொடக்கம், இந்தப்பயிற்சிவழங்கப்பட்டுவந்தது. அமெரிக்காவின் பசுபிக் இராணுவத்தின், நான்காவது மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவு இந்தப் பயிற்சிகளை வழங்கியது.

இதன்போது, அமெரிக்க இராணுவத்தின் மருத்துவ, கால்நடை மருத்துவ, வெடிபொருள் நிபுணர்களும் பயிற்சிகளை வழங்கினர்.

2003 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில், கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்கு அமெரிக்கா உதவிகளை வழங்கி வருகிறது. 2003 தொடக்கம் 2013 வரையிலான காலப்பகுதியில், 35.5 மில்லியன் டொலரை இந்தப் பணிக்காக அமெரிக்கா செலவிட்டுள்ளது.

இந்த ஆண்டில், மேலதிகமாகக் கருவிகள் மற்றும் பயிற்சிகளுக்காக அமெரிக்கா 2.7 மில்லியன் டொலரைச் செலவிடவுள்ளது என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (த-5)

### பூஸா ராணுவ

முதலில் காலியில் உள்ள பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களைப் பார்வையிடுவதற்காகச் சென்றிருந்தனர்.

இதன்போது, பூஸா தடுப்பு முகாமுடன் இணைந்திருந்த இராணுவ முகாம் ஒன்றுக்குள் அவர்கள்திடீரென உள்நுழைந்து தேடுதல் நடத்தும் பாணியில் பார்வையிட்டுள்ளனர்.

**இரகசியத் தடுப்புமுகாம்**

போரின் இறுதிக்கட்டத்தில் படையினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளின் உயர் மட்டத் தலைவர்கள் பலர், இன்னமும்எங்குள்ளனர்என்று தெரியாதுள்ளது. இவர்கள் இரகசியத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், பூஸா தடுப்பு முகாமுக்கு அருகில் இருந்த படையினரின் முகாமும் அத்தகைய இரகசியத் தடுப்பு முகாமாகப் பயன்படுத்தப்படலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே ஸ்ரீபன் ராப் குழுவினர் அதற்குள் நுழைந்து பார்வையிட்டதாகத் தெரிகிறது.

**முறையற்ற செயல்**

பூஸா தடுப்பு முகாமுடன் இணைந்த இராணுவ முகாமுக்குள், ஸ்ரீபன் ராப் தலைமையிலான குழுவினர் அத்துமீறி நுழைந்ததாக அரச வட்டாரங்கள் குற்றம்சாட்டியுள்ளன. அது தடுப்பு முகாமின் பாதுகாப்புக்கான முகாம் என்பதை அமெரிக்க அதிகாரி தெரிந்து கொண்டிருக்கவேண்டும் என்றும், அமெரிக்காவின் இந்த அணுகுமுறையை இலங்கை அரசினால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளதாக 'ஐலண்ட்' தனுசெய்தியில்குறிப்பிட்டுள்ளது. (த-5)

### சீனா

சீன வெளிவிவகார அமைச்சர் வேங் யீ விடுத்துள்ள அழைப்பையேற்று அவர் சீனப் பயணத்தை மேற்கொள்கிறார் என்றும் மேற்படி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமைகள் சபையில் இந்த ஜனவரி முதல் மூன்றாண்டுகளுக்குப் பணிபுரிய சீனா உட்பட 14 நாடுகளை கடந்த நவம்பரில் ஐ.நா. பொதுச்சபை தெரிவுசெய்தமை குறிப்பிடத்தக்கது.

சீனாவுடன் அல்ஜீரியா, கியூபா, பிரான்ஸ், மாலைதீவு, மெக்ஸிக்கோ, மொராக்கோ, நமிபியா, சவூதி அரேபியா, தென்னாபிரிக்கா, முன்னாள் யூகோஸ்லேவிய குடியரசான மெசிடோனியா, வியட்நாம், ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகளே தெரிவு செய்யப்பட்டுள்ளன. (த-சி)

### வன்னியில்

கள் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் இதனை முற்றாக நிராகரித்துள்ளதாக ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர், போரின்போது தாம் பாதுகாப்புத் தரப்பினருடன் நேரடித் தொடர்பில் இருந்ததாகவும், எந்த வகையிலும் இனப்படுகொலைகள் இடம்பெறவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

போர்க் காலப்பகுதியில் பொதுமக்கள் காயமடைந்தமை துரதிஷ்டவசமான விடயம். ஆனால் திட்டமிட்டு அவர்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தவில்லை, என்றார் திஸார சமரசிங்க. (த)

### ஜெனிவா செல்லும்

தீர்மானத்தை இலங்கை எதிர்க்கும் தானே என்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் வினவியதற்கு, இந்த ஆண்டு குறித்த தீர்மானத்தை இலங்கை வித்தியாசமான முறையில் கையாளும் என்று அவர் கூறினார்.

ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ-மூன் நியமித்த விசேட நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையிலேயே இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. எனவே குறித்த அறிக்கையைச் சட்ட ரீதியாக இலங்கை எதிர்கொள்ளப்போகின்றதா என்று அவரிடம் மீண்டும் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், அவ்வாறு செய்யப்படும் என்றுதான் எதிர்பார்க்கவில்லை என்று குறிப்பிட்டார்.

ஜெனிவாவுக்குச் செல்லும் இலங்கைக் குழுவில் நீங்கள் இடம்பெறுவீர்களா என்று அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு, நேரடியாகப் பதிலளிப்பதைத் தவிர்த்த அவர், நான் ஏற்கனவே சர்வதேச நாடுகளுக்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளேன். ஜெனிவா அமர்வுக்குச் செல்லும் தூதுக் குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே தீர்மானிப்பார். அவர் இன்னமும் குழுவைத் தீர்மானிக்கவில்லை என்று கூறினார். (த-5)

### சர்வதேச

மீதான சர்வதேச விசாரணை குறித்து முடிவெடுக்க வேண்டியது உறுப்பு நாடுகளின் விவகாரமே'என்று, ஐ.நா பொதுச் செயலரின் பதில் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவைத் தளமாக கொண்ட அமைப்பு ஒன்று வெளியிட்ட ஆய்வு அறிக்கையில், போரின்போது இடம் பெற்ற பெரும்பாலான போர்க் குற்றங்களுக்கு இலங்கை இராணுவமே பொறுப்பு என்றும் போர்க்குற்றச் சாட்சியங்களை அழிக்கும் நடவடிக்கைகளில் இலங்கை இராணுவம் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இது குறித்து, ஐ.நா. பொதுச்செயலரின் பதில் பிரதிப் பேச்சாளரிடம் கேள்வி எழுப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**பொறுப்பு கூறவேண்டும்**

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றக் குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக்கூறப்பட வேண்டும் என்ற ஐ.நா. பொதுச் செயலரின் நிலைப்பாட்டில் தான் ஐ.நா தொடர்ந்தும் உள்ளது. நம்பகமான உள்நாட்டுத் தேசிய செயல்முறையா, அனைத்துலக விசாரணைப் பொறிமுறையா என்பதை தீர்மானிக்க வேண்டியது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் தான். நாம் அவர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கியுள்ளோம்.

எதற்காகப் பொறுப்புக் கூறப்படவேண்டும் என்று ஐ.நா வலியுறுத்துகின்றது என்பதையும் தெளிவுபடுத்திவிட்டோம். தீர்ப்புக் கூறுவதை நாம் உறுப்பு நாடுகளிடமே விட்டு விட்டோம்' என்று பர்ஹான் ஹக் மேலும் தெரிவித்துள்ளார். (த-5)

# பெண்கள் கிரிக்கெட்டில் அசத்தியது மனோகரா



மனோகரா வி.க. முதலாமிடம்



கலைமதி வி.க. இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், பெப்.8
கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் மனோகரா இளைஞர் கழக அணி சம்பியனானது.

**முதலில் துடுப்பெடுத்தாடிய மனோகரா இளைஞர் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங் கள் நிறைவில் ஒரு இலக்கை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.**

கடந்தவாரம் மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மனோகரா இளைஞர் கழக அணியை எதிர்த்து கலைமதி இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய மனோகரா இளைஞர் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் தனுசியா 28 ஓட்டங்களையும் விர்துசா 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
66 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய கலைமதி இளைஞர் கழக அணி சகல இலக்குகளையும் இழந்து 30 ஓட்டங்களை மட்டும் பெற்றது.
பந்து வீச்சில் மனோகரா இளைஞர் கழக அணி சார்பில் தனுசியா 2 இலக்குகளை வீழ்த்தினார். (த-23)

## கொக்குவில் வளர்மதியின் கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.8
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் சனசமூக நிலையம் வருடந்தோறும் நடத்தும் 'விக்ரம், ராஜன் கங்கு' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
பிற்பகல் ஒரு மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.8
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் லீக் அணிகளுக்கு இடையிலான சிரேஷ்ட லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உடுப்புக்குளம் அலை ஓசை வி.க. மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத் தில் வவுனியா உதைபந் தாட்ட லீக் அணி மோதவுள் ளது.
இதேவேளை இன்று பி.ப. 3 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (த-23-86)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.8
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.ஸி. ஸி.ஸி. விளையாட் டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 6 மணிக்கு இடம் பெறும் ஆண்களுக்கான காலிறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## பளையில் கபடி, எல்லே போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.8
பளைப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களின் ஆண்கள், பெண்களுக்கான கபடி, எல்லே போட்டிகள் இன்றும் நாளையும் பளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் இன்று சனிக்கிழமை ஆண், பெண்களுக்கான கபடிப் போட்டியும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆண் கள், பெண்களுக்கான எல்லே போட்டியும் இடம்பெறவுள்ளது என விளையாட்டு உத்தி யோகத்தர் தெரிவித்துள்ளார். (த-23)



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்துடன் இணைந்து கொழும்பு மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்திய அகில இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வைச் சிறப்பிக்கும் வகையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க அணியினர் வெற்றிக் கிண்ணத்துடன். (த-23)

## வலைப்பந்தாட்டத்தில் வென்றது லக்கிஸ்ரார்



யாழ்ப்பாணம், பெப்.8
கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.
கடந்த செவ்வாய்க்கிழமை வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 29.22 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (த-23)

## கண்டாவளை பெண்களுக்கான உதைபந்தாட்டம்



யாழ்ப்பாணம், பெப்.8
கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

## யாழ். மத்தி - மாத்தளை தோமஸ் கிரிக்கெட் போட்டி சமநிலையில்

யாழ்ப்பாணம், பெப்.8
யாழ்.மத்திய கல்லூரி மாத்தளை, சென்.தோமஸ் கல்லூரி ஆகியவற்றின் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கு இடையிலான நட்பு ரீதியான கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.
கடந்த வாரம் மாத்தளை சென்.தோமஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில்தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 75 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சலக இலக்குகளையும் இழந்து 344 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் நிரேஷன் 103 ஓட்டங்களையும், அலன்ராஜ் 70 ஓட்டங்களையும்,சௌமிதரன் 58 ஓட்டங்களையும், சஞ்சயன் 31 ஓட்டங்களையும், டினோஷன் 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் மாத்தளை சென்.தோமஸ் கல்லூரி அணி சார்பில் டில்சாந் பத்துக 28 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 95 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை வீழ்த்தினர்.
தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய மாத்தளை சென்.தோமஸ் கல்லூரி அணி 60 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் ராஜபக்ஷ 50 ஓட்டங்களையும், குமரசேரி 22 ஓட்டங்களையும், டில்சாந் 25 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் மதுஷன் 22 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 64 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், நிருபன் 15 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 56 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் வீழ்த்தினர்.'பலோ ஒன்' முறையில் ஆட்டத்தை நிறுத்திய யாழ். மத்திய கல்லூரி அணி மாத்தளை சென்.தோமஸ் கல்லூரி அணியை இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுபெடுத்தாடப் பணித்தது.
இதற்கமைய தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய மாத்தளை சென்.தோமஸ் கல்லூரி அணியினர் 54 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது.



நிரேஷன்

இதில் நிமால் 24 ஓட்டங்களையும், அசாந் 44 ஓட்டங்களையும், கென்டங்க 30 ஓட்டங்களையும் பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் நிரூபன் 14 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 4 இலக்குகளையும், தனுஷன் 3 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
யாழ்.மத்திய கல்லூரி அணி 48 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் அன்றைய நாள் போட்டி நேரம் முடிந்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)

# உலக 20/20 தொடருக்கான இங்கிலாந்து அணி தயார்



உலக 20/20 தொடர் மற்றும் மேற்கிந்திய தீவுகள் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. கெவின் பீற்றர்சன் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. கிரேம் சுவான் ஓய்வு பெற்றுள்ளார். டானி பிரிக்ஸ், போய்ட் ரங்கின் ஆகியோர் அணியால் விலக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து 19 வயதுக்குட்பட்ட அணியைத் தலைமை தாங்கிய மொய்ன் அலி மற்றும் ஸ் ரீபன் பரி ஆகியோர் அணிக்குள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரது பெறுதிகளும் கழக மட்டப் போட்டிகளில்நல்லமுறையில்உள்ளன. மொய்ன் அலி இடதுகைத் துடுப்பாட்ட வீரர். அதேவேளை இடதுகை சுழற்ப் பந்துவீச்சாளர். இவர் கெவின் பீற்றர்சனின் இடத்தில் விளையாட அதிக வாய்ப்புக்கள் உள்ளன. இதேவேளை கடந்த காலங்களில் இங்கிலாந்து அணிக்காக சிறப்பாக விளையாடிய மிக்கேல் லம்ப், அலெக்ஸ் ஹேல்ஸ், லூக் ரைட் ஆகியோர் அணியில் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஸ்டுவோர்ட் புரோட் அணியின் தலைவராக தொடர்கின்றார். மேற்கிந்திய தீவுகள் ஒரு நாள் தொடரில் இருந்து ஓய்வின் நிமிர்த்தம் அலிஸ் ரயர்குக் விலகியுள்ளதால் ஸ்டுவோர்ட் புரோட் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹரி கோர்னி புதிய பந்துவீச்சாளராக மேற்கிந்திய தீவுகள் தொடருக்காக இணைக்கப்பட்டுள்ளார்.

சர்ச்சைகளின் பின்னர் தெரிவு செய்யப்பட்டுள்ள இங்கிலாந்து அணி இது. தெரிவுக் குழு வின் தலைவராக ஜேம்ஸ் விடேகர் பொறுப்பேற்று தெரிவுசெய்துள்ள அணி இது. இந்தத் தெரிவில் பயிற்றுவிப்பாளர் அஸ்லி ஜைல்ஸ், மற்றும் டெஸ்ட், ஒருநாள் போட்டி அணியின் தலைவர் அலிஸ்ரயர்குக் ஆகியோர் ஈடுபட்டனர்.

**அணி விவரம்**

ஸ்டுவோர்ட் புரோட், ஓய்ன் மோர்கன், மொய்ன் அலி, ரவி போபரா, டிம் பிரஸ்னன், ஜோஸ் பட்லர், ஜேட் டோர்ன்பக், அலெக்ஸ் ஹேல்ஸ், க்றிஸ் ஜோர்டான், மிக்கேல் லம்ப், ஸ்ரீபன் பரி, ஜோ ரூட், பென் ஸ்டோக்ஸ், ஜேம்ஸ் ட்ரெட்வெல், லூக் ரைட்.

(த)

# தடுமாறுகிறது இந்தியா

இந்தியா - நியூஸிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி ஆக்லாந்தில் நேற்று முன்தினம்தொடங்கியது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில் நியூஸிலாந்து அணி 4 இலக்குகள் இழப்புக்கு 329ஓட்டங்களைக் குவித்தது.

நேற்று 2-ஆவது நாள் ஆட்டத்தில். மெக்குல்லம் - அன்டர்சன் ஜோடி இந்திய பந்து வீச்சை விளாசி தள்ளியது. இதனால் நியூஸிலாந்து அணியின் ஓட்டம் மளமள வென்று உயர்ந்தது. அன்டர்சன் 77 ஓட்டங்களைப் பெற்று இஷாந்த் சர்மா பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வாட்லிங் வந்த வேகத்திலேயே வெளியேறினார். இவரது இலக்கையும் இஷாந்த் சர்மா கைப்பற்றினார். அதன்பின் மெக்குல்லத்துடன் டிம் சவுத்தி ஜோடி சேர்ந்தார். சிறப்பாக ஆடிய மெக்குல்லம் இரட்டை சதம் அடித்தார். இது அவருக்கு 2 ஆவது இரட்டை சதமாகும். சவுத்தி 27 ஓட்டங்களிலும், சோதி 23,ஓட்டங்களிலும் வாக்னர் 8 ஓட்டங்களிலும்ஆட்டமிழந்தனர். கடைசி இலக்காக பிரண்டன் மெக்குல்லம் ஆட்டமிழந்தார். அவர் 224 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் நியூஸிலாந்து அணி 503 ஓட்டங்களைக் குவித்தது. இஷாந்த் சர்மா 6 இலக்குகளையும் , ஸகீர் கான் 2 இலக்குகளையும் முகமதுசமி, ஜடேஜா தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.


பின்னர் முதல் இன்னிங்ஸை இந்திய அணி விளையாடியது. தொடக்க வீரர்களாக முரளி விஜய், ஷிகர் தவான் களம் இறங்கினர். தொடக்கமே கடும் அதிர்ச்சியாக இருந்தது. போல்ட் வீசிய பந்தின் தவான் டக்' அவுட் ஆனார். அடுத்து களம் இறங் கிய புஜாரா ஒரு ஓட்டத்துடன் வெளியேறினார். ஆட்டத்தின் முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே2 இலக்கை இழந்தது.

அடுத்த அதிர்ச்சியாக வீராட்கோஹ்லியும் வெளியேறினார். 4ஓட்டங்கள் எடுத்திருந்தபோது டிம் சவுந்தியின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் முரளிவிஜய், ரோகித்சர்மா ஜோடி பொறுமையாக ஆடியது. முரளிவிஜய் 26 ஓட்டங்களில் வாக்னர் பந்தில் போல்டு ஆனார். அப்போது அணியின் ஓட்டம் 51 ஆக இருந்தது. அடுத்து ரோகித்சர்மாவுடன் ரகானே ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிதானமாக ஆடியது. ரோகித்சர்மா அரை சதம் அடித்தார் இறுதியில் இந்திய அணி 2-ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 4இலக்குகளை இழந்து 130ஓட்டங்களை எடுத்தது. இன்று போட்டியின் 3 ஆவது நாளாகும். (400)



# பங்களாதேஷ் அணிக்கு வெற்றி இலக்கு 467



இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற வேண்டுமாயின் பங்களாதேஷ்அணி467ஓட்டங்களைப்பெறவேண்டும். இலங்கை பங்களாதேஷ் அணிகள் மோதும் டெஸ்ட் போட்டி செற்றாங்கில் இடம்பெற்று வருகின்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 587 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் முதல் இன்னிங்ஸில் இலங்கை பெற்ற 587 ஓட்டங்களை துரத்திப்பிடிக்க களமிறங்கிய பங்களாதேஷ் சிறப்பாக செயற்பட்டு பொலோஒன் முறையை தவிர்த்து சகலஇலக்குகளையும் இழந்து 426 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக சமுர் ரகிம் 106 ஓட்டங்களையும் இம்ருல் கைஸ் 115 ஓட்டங்களையும் பெற்றனர் அதன் பின் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த இலங்கை அணி ஏற்கனவே 161 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த நிலையில் தற்போது 4இலக்குகள் இழப்பிற்கு 305 ஓட்டங்கள் பெற்று 467 ஓட்டங்களை பங்களாதேஷ் அணிக்கு வெற்றி இலக்காக நிர்ணயித்தது இலங்கை அணி சார்பாக சங்கக்கார 105 ஓட்டங்களை பெற்றார். சந்திமால் 100 ஓட்டங்களுடனும் மத்தியூஸ் 43 ஓட்டங்களுடன் களத்தில உள்ளனர். இதனை அடுத்து இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களா தேஷ் நேற்றைய ஆட்ட நேர முடிவில் இலக்குகளை இழப்பின்றி 12 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தமிம் இக்பால் 7 ஓட்டங்களுடனும்ரகிம் 4ஓட்டங்களுடனும்களத்தில் உள்ளனர் இன்று போட்டியின் இறுதி நாளாகும். (த-400)

# ஐ.பி.எல்லில் பீற்றர்சனுக்கு மவுசு

இங்கிலாந்து கிரிக்கெட் அணி முன்னணி வீரரான கெவின் பீற்றர்சனை அந்த் நாட்டு கிரிக்கெட்சபைஅணிக்குத்தேர்வுசெய்யாமல் கழற்றி விட்டுள்ளது.

ஆஷஸ் தொடரின் மோசமான தோல்விக்குப் பீற்றர்சன் பலிக்கடாவாகி உள்ளார். அவர் இங்கிலாந்து அணியில் இடம் பிடிப்பது என்பது இனிமேல் முடியாது. இந்த முடிவு பீற்றர்சனுக்குக்கடும்அதிர்ச்சிஅளித்து உள்ளது.

ஆனால் இந்தப் புறக்கணிப்பு பீற்றர்சனுக்கு 7ஆவது ஐ.பி. எல். கிரிக்கெட்டில் அதிக மவுசை கூட்டியுள்ளது. சிறந்த அதிரடி துடுப்பாட்ட வீரரான அவர் 20/20 கிரிக்கெட்டில் முத்திரை பதிக்க கூடியவர். தொடர்ந்து ஆறு,நான்கு என விளாசக்கூடிய ஆற்றல் படைத்தவர். அவரை ஏலத்தில் எடுக்கக் கடும் போட்டி இருக்கும்.

பீற்றர்சனைத் தங்களது அணிக்கு ஏலத்தில் எடுத்தால் அவர் பாதியில் தேசிய போட்டிக்குச் செல்ல மாட்டார் என்று ஐ.பி.எல். அணிகள் கருதுகின்றன.

# கம்பீர் ஆலோசனை

அந்நிய மண்ணில் விளையாடும் போது தொடரைச் சிறப்பான முறையில் தொடங்குவது மிகவும் முக்கியம் என இந்திய அணியின் கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் தொடக்க வீரர் கௌதம் கம்பீர்(வயது - 32). இது வரையிலும் 54 டெஸ்ட் (4021 ஓட்டங்கள்), 147 ஒரு நாள்(5238 ஓட்டங்கள்), 37 20/20 (932 ஓட்டங்கள்) போட்டிகளில் விளையாடி உள்ளார்.

மோசமான உடற்தகுதி காரணமாக இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்ட கம்பீர், மீண்டும் அணிக்குத் திரும்ப முயற்சித்து வருகிறார்.

இந்நிலையில் இந்திய அணியின் தொடர் தோல்விகள் குறித்து கூறுகையில், தென்னாபிரிக்கா அல்லது நியூசிலாந்து என எங்கு சென்றாலும் தொடரில் சிறப்பான தொடக்கம் வேண்டும்.

இது மிகவும் முக்கியம், இல்லையெனில் மீண்டும் வருவது கடினமாகிவிடும்.

தற்போதைய டெஸ்ட் தொடரில் இந்திய அணி திறமையுடன் செயற்படும் என தான் நம்புகிறேன்.

கடந்த 2009 இல் நியூஸிலாந்துக்கு முதல்முறையாகச் சென்ற போது, என் மீது அதிக எதிர்பார்ப்பு இருந்தது. இதற்கேற்ப சிறப்பாக விளையாடினேன்.

சர்வதேச அரங்கில் நமது செயற்பாட்டுக்கு மன உறுதியும் கைகொடுக்கும் என்று தெரிவித்துள்ளார். (த)

# தொடரை வென்றது இலங்கை

இலங்கை 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிக்கும், ஆஸ்திரேலிய 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிக்கும் இடையில் 50 பந்துப்பரி மாற்றங்கள் கிரிக்கெட் போட்டி இலங்கையில் நடைபெற்றது.

இந்தத் தொடரின் 3 போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது. மூன்றாவதும் இறுதியுமான போட்டி கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது.

இதில் இலங்கை 19 வயதுக்குட்பட்ட அணி 2 இலக்குகளால் வெற்றி பெற்றது.



முதலில் துடுப்பாடிய ஆஸ்திரேலிய 19 வயதுக்குட்பட்ட அணி 49.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அலெக்ஸ் கிரெகரி 50 ஓட்டங்களையும், சீன் வில்லிஸ் 46 ஓட்டங்களையும், ஜரொன் மோர்கன் 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் அனுக் பெர்னாண்டோ 4 இலக்குகளையும் லக்ஸான் ஜயசிங்ஹ 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பாடிய இலங்கை 19 வயதுக்குட்பட்ட அணி 49.2 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. திலக்ஸா சுமனசிறி 50 ஓட்டங்களையும், ஹர்ஷா ராஜபக்ஷ 36 ஓட்டங்களையும், ப்ரியமால் பெரேரா 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தோமஸ் அன்றுஸ் 3 இலக்குகளையும், கய் வோல்க்கர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (த)

City & Guilds

**A/L தகுதியுடன், உயர் கல்விக்கான பொறியியல் வகுப்புக்கள் யூன் 2014**

| Subjects | Diploma | Ad. Diploma |
|---|---|---|
| Civil Engineering / Quantity Surveying | Sat. 9:00AM - 12:00 Noon<br>Sun. 9:00AM - 12:00 Noon | Sat. 2:00PM - 4:00PM<br>Sun. 2:00PM - 4:00PM |
| Electrical and Electronic Engineering | Tue. 2:00PM - 5:00PM<br>Wed. 2:00PM - 5:00PM | Tue. 5:30PM - 8:00PM<br>Wed. 5:30PM - 8:00PM |

HNDE / Open University / NCT மாணவர்கள் Ad. Diploma வையும்
A/L தகுதியுடன் Diploma வையும் பயிலுவதற்க்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

வகுப்புக்கள் 11/12th Feb 2014 ஆரம்பமாவதால் முன் கூட்டியே உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்துங்கள்

யாழ்ப்பாணம் DMI-No.113 கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்.Tel : 0777173517.
கொழும்பு APSS No: 35, Nelson Place, Colombo - 06. Tel : 0773867695, 011 2361587.

# சச்சின், வோர்ன்

## எதிரணிகளில் தலைவர்களாக மோதும் போட்டி

சச்சின் டெண்டுல்கர், ஷேன் வோர்ன் ஆகியோர் எதிரணி களில் தலைவர்களாக மோதும் கிரிக்கெட் போட்டி ஒன்று ஜீலை மாதம் 5ஆம் திகதி இங்கிலாந்து லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. லோர்ட்ஸ் மைதானத்தில் முதற் கிரிக்கெட் போட்டி விளையாடப்பட்டு 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டே இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மெல் போர்ன் கிரிக்கெட் கழகம் இந்தப் போட்டியினை ஏற்பாடு செய்துள்ளது. லோர் ட்ஸ் மைதானம் மெல் போர்ன் கிரிக்கெட் கழகத்தின் சொந்த மைதானம் என்பதும் கிரிக்கெட்டின் தாயகம் என போற்றப்படும் மைதானம் என்பதும் குறிப்பிடத்தக்கது. எம்.சி.சி என அழைக்கப்படும் மெல் போர்ன் கிரிக்கெட் கழக அணிக்கு சச்சின் டெண்டுல்கர் தலைமை தாங்குகின்றார்.

**பதவி வெற்றிடம்**

**வாடிக்கையாளர் தொடர்பாளர் : (பெண்)**
**கல்வித்தகைமை** - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டப்படிப்பு ஆங்கில அறிவு மிக முக்கியம்
**வயது** - 24 - 50 வரை
**மேலதிகதகைமை** - நிர்வாக ரீதியான தொழில் அனுபவம் துணிச்சலான முன்மாதிரியான செயற்பாடுடையவராகவும் தேவையேற்படின் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயணம் செய்யத்தயாராக இருத்தல் அவசியம்.
**வேதனம்** - 20 000/- (மாதம் EPF ETF அடங்கும்)
இணைத்துக் கொள்ளப்படுபவர்கள் 2 வருட சேவை ஒப்பந் தத்தில் கைச்சாத்திடுதல் அவசியம்
**நேர்முகத்தேர்வு** - 09.02.2014 மாலை . 4 மணிக்கு இடம் பெறும்.
**மேலதிக வசதிகள்** - வருடாந்த போனஸ் வெளிநாட்டு பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவக் கொடுப்பனவு சனி, ஞாயிறு வேலை நாளாகும் கிழமை நாள்களில் ஒரு நாள் ஓய்வு வழங்கப் படும்.

தினமும் 6 மணிக்கு பணி நிறைவடையும்
பொது முகாமையாளர்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். 021 5689090

**விற்பனை முகவர் தேவை**

1) தொழில்நுட்பத் துறையில் பிரபல்யமான தயாரிப்பாளர் Tablet PC (Windouch) Product வகைகளை விற்பனை செய்வதற்கும் (கணினி அறிவு விரும்பத்தக்கது)
2) புதிய தொழில்நுட்பமுறையில் உருவாக்கப்பட்ட LED மின்குமிழ்கள் (வீட்டுக் காரியாலய பாவனைக்குரியது) யாழ் நகரில் விநியோகிப்பதற்கு தகுதி வாய்ந்த முகவர் தேவைப்படுகின்றார். (மின்சாரக் கட்டணம் இதன் மூலம் மிகவும் குறையும்) ஆர்வம் உள்ளவர்கள் இன்று தொடர்பு கொள்ளவும். T.P : 075 912 3127 (44463)(7.6.3)

**எமது ஆலோசனையின் மூலம் கிடைக்கப்பெற்ற விசாவைப் பார்வையிட்ட பின் மீதியை பேசிக்கொள்ளலாம்**
ஆம்

**இத்தாலி சட்டரீதியாகச் செல்ல சட்ட ஆலோசனை**

**3 மாதத்தில் பறக்கலாம்**
(நிபந்தனைகளுக்கமைவாக)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
(7 நாள்களும் திறந்திருக்கும்)
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9061, 021 568 9090
www.thisaivisa.com
(44477)(10.14)

**வெளிவந்து விற்பனையாகிறது**

புலமைப் பரிசில் பரீட்சைக்கான

**முதல் தமிழ்**

தரம் 3,4,5 மாணவர்கள் தமிழ்மொழியில் கூடுதல் புள்ளிகளை எட்டுவதற்கு விசேடமாக தயாரிக்கப்பட்ட சிறந்த வழிகாட்டி நூல்.
ஆசிரியர் :- ஜலஜஷ்மி சயந்தறுபன்
விலை - 500/-

கிடைக்குமிடங்கள்
* பூபாலசிங்கம் புத்தக சாலை
* அன்னை புத்தக சாலை
* ஆல் சிலோன் புத்தக சாலை

**வெளிவந்து விற்பனையாகிறது**

A/L Past Paper
(2013ம் உள்ளடக்கப்பட்டது)

* Astan Puplication
* Loya Publications
* Islamic Publications

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல. 04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**இது எம்மால் மட்டுமே சாத்தியமாகும்**

**ஐரோப்பிய நாடான (SPAIN) ஸ்பெயினில் படிக்க உழைக்க 60 நாள்களில் பறக்கலாம்**

**11 பேருக்கு மட்டுமே இப்புதிய வாய்ப்பு (நிபந்தனைகளுடன்)**
**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்.**
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com

**இரவு நேர காவலாளி (Watcher) / கிளீனர் தேவை**

வவுனியாவில்இயங்கும்ஒரு கல்வி நிறுவனத்திற்கு இரவு வேளைகளில் தங்கி பணிபுரிய ஒருவர் தேவைப்படுகிறார். தகுந்த சம்பளம் கொடுக்கப்படும் விரும்பியவர்கள் மேலதிக விவரங்களுக்கும் நேர்முகத் தேர்விற்கும்.
தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி:
British College of Higher Studies -Vavuniya Branch
No.3, 6th Lane, Vairavarkovil Road,
Vairavapuliyankulam, Vavuniya.
Tel : 024 324 5287 or 077 785 5463
or 077 342 1838 (சி/11420)(7.6.3)

**டுபாய் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு**

டுபாய் நாட்டிலுள்ள முன்னணி Company ஒன்றில் Mechine Operator 10 பேர் (சவர்க்காரம்/ சம்போ) Tap தயாரிக்கும் நிறுவனத்தில் 5 பேர், Aluminium Factory- 5பேர், Hotel waiter 3பேர் உடன் தேவை. அதிஉயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் இலவசம். (43140)(7.6.3)
தொடர்புகளுக்கு: LankaVoice
077 058 4658, 077 666 0250

**கட்டார் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு**

கட்டார் நாட்டிலுள்ள முன்னணி பல்கலைக்கழகத்தில் Office boy 10 பேர் உடன் தேவை.
தகைமை: ஆங்கிலம் ஓரளவு பேசக்கூடிய ஆற்றல். (ஆங்கிலம் பேச முடியாதவர் களுக்கு Skype Interview இற்கு ஏற்ற வகையில் Two days பயிற்சி அளிக்கப்படும்)
வயது: 18-35 கைவசம் வீசா உள்ளதால் ஒரு வாரத்தில் பயணமாகலாம். அதிஉயர் சம்பளம். தங்குமிடம், மருத்துவம் இலவசம்.
தொடர்புகளுக்கு: 077 058 4658
Lanka Voice (43141)(7.6.3)

**வெளிவருகிறது**

A/L - Pass Paper 2013 இணைக்கப்பட்டது
இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.
லோயல் வெளியீடு சகல பாடங்களும்
ஸ்ரீங்கரன் புக் சொப் கே.கே.எஸ் வீதி, கன்னாகர்.
தொடர்பு : 077 078 1660 (சி/11450)(7.6.3)

**கணித பிரத்தியேக வகுப்பு**

யாழ். நகரின் பிரபல பாடசாலையின் அனுபவம் வாய்ந்த கணித பாட ஆசிரியரினால் தரம் 6-11 வரையான தனி/குழு கணித வகுப்புக்கள்.
தொடர்பு:071 813 9459
(44459)(4.6.3)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
**After O/L What Next?**
BCHS

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற் கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 – 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்.

**Diploma In English (2Months)**
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**A1 Exam-Sponsor Visa/ Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை.
- U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது.
- எமது கல்லூரியிலேயே மாதிரிப் பரீட்சைகள் நடைபெறும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை.
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system
We gurantee minimum 6.0 band and above
Duration 2 1/2 Months

**B1 Exam-Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

| Batch - 01 | Batch - 02 | Batch - 03 | Batch - 04 |
|---|---|---|---|
| 08.02.2014 | 10.02.2014 | 15.02.2014 | 17.02.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch :
NO. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna.
Tel : 021 222 4550

Hotlines :
0777585913
0777222422
0714299935
0777730074

Vavuniya Branch :
NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpuliyamkulam, Vavuniya.
Tel : 024 324 5287



காரைநகர் மணற்காடு அருள்மிகு
கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய

**பாலஸ்தாபனம்**

**10.02.2014**
**திங்கட்கிழமை**
**காலை 9.45 மணி**

அம்பிகையின் அடியவர்கள் ஆசாரசீலராக வருகை தந்து பாலஸ்தாபன கும்பாபிஷேகத்தை கண்குளிர தரிசித்து நடைபெற்று வரும் திருப்பணி வேலைகள் நிறைவுபெற்று அம்பாளின் மஹா கும்பாபிஷேகத்தை விரைவில் நடத்துவதற்கு அம்பிகையைப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்வதோடு உலகெங்கும் பரந்து வாழும் அம்பிகை அடியவர்கள் திருப்பணி நிறைவேறவாரி வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருப்பணிச்சபை
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
தொ.பே. இல. 021 2211711
(சி/11436)(7.6.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.